தமிழ்ப் பூஞ்சோலை

தமிழ்ப் பூஞ்சோலை

(எட்டாம் வகுப்பு)

[1965ஆம் ஆண்டு அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவியது]

ஆசிரியர்கள் :

வித்துவான் நா. சுந்தரராசனார்,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-1.

வித்துவான் த. சிவசங்கரனார்,
தலைமைத் தமிழாசிரியர்,
தி. அ. இராமலிங்கஞ் செட்டியார் உயர்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-11.

வித்துவான் பெ. இராமச்சந்திரன்,
தமிழாசிரியர்,
நகராண்மைக் கழக ஆண்கள் உயர்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-2.

விலை : ரூ. 2-00

தி புக் சென்டர்
கோயமுத்தூர் - 1.
கிளைகள் :
சென்னை - 1. திருநெல்வேலி - 1.

முதற் பதிப்பு : 1966
திருத்திய பதிப்பு : 1967
மறு மதிப்பு : 1967

Name of the Book : THAMIZH POONJOLAI [VIII Std.]

Names of the Authors : Vidwan N. Sundararasanar, Vidwan D. Sivasankaranar, Vidwan P. Ramachandran.

Name of the Publishers : THE BOOK CENTRE, Coimbatore-1.

Name of the Printers : The Progressive Printers, Madras-1.

Kind of Paper used : 10·9 Kg. White Printing.

Price per Copy : Rs. 2-00.

தமிழ்நாடு பாடப் புத்தகக் குழுவினர்
அங்கீகரித்தது. ஆதாரம்:
கெஜட் தேதி: 17—5—1967. பக்கம் 23.

சென்னை நகர ஏஜண்டுகள் :
எம். தாமோதரம் & கம்பெனி
சென்னை-1.

முன்னுரை

இந்நூல் அரசியலார் 1965ஆம் ஆண்டு வெளியிட்ட புதிய பாடத் திட்ட முறைக்கேற்ப எட்டாம் வகுப்பிற்கெனத் தொகுக்கப் பெற்றதாகும்.

பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்ட நாங்கள் மாணவர் தகுதி, விருப்பு வெறுப்பு இவைகளை நன்கறியும் வாய்ப்பைப் பெற்றோம். ஆகவே, அவர்கள் விரும்பிக் கற்பதற்கேற்ற வகையில் இந்நூலினை எழிலும் வளமும் கொழிக்குமாறு அமைத்துள்ளோம். இளைஞர் உள்ளத்தே தாய்மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும், ஒற்றுமை உணர்ச்சியையும் தூண்டுதற்கு ஏற்ற கருத்தமைந்த சிறந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளோம்.

இந்நூலின்கண் உள்ள செய்யுட் பகுதிகளைச் சேர்க்க மனமுவந்து இசைவளித்த ஆசிரியர்கட்கு எங்கள் உளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

கல்வித் துறையில் உள்ள பெருமக்கள் அனைவரும் ஆதரவு தந்து, மேலும் இத்தகைய பணிகள் புரிய எங்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஆசிரியர்கள்.

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

★

மனப் பாடத்திற்குரிய பகுதி

				வரிகள்
I. வாழ்த்து				
தேவாரம்			...	4
திருவாசகம்			...	4
II. நீதிப்பகுதி				
திருக்குறள் : 1, 4, 7, 8, 9, 11, 15, 20, 21, 22, 23, 27, 31, 33			...	28
நீதிநெறி விளக்கம்	— செய்யுள்	4	...	4
நாலடியார்	— செய்யுள்	2	...	4
பழமொழி	— செய்யுள்	2	...	4
ஏலாதி	— செய்யுள்	5	...	4
சிறுபஞ்சமூலம்	— செய்யுள்	4	...	4
III. தொடர்நிலைச் செய்யுள்				
பெரிய புராணம்—செய்யுள் 9, 16			...	8
கம்பராமாயணம்—செய்யுள் 9, 11, 12			...	12
திருவிளையாடற் புராணம்—செய்யுள் 13, 15			...	8
சீருப் புராணம்—செய்யுள் 7			...	4
தேம்பாவணி—செய்யுள் 11			...	4
IV. பல்சுவை				
வருணனை				
கடல் (முடியரசன்)			...	4
சோலைக் காட்சி (பாரதிதாசனார்)			...	4
சிற்றிலக்கியம்				
பிரபுலிங்கலீலை (சிவப்பிரகாசர்)			...	4
வழிபாட்டுப் பாடல்கள்				
அருட்பா (இராமலிங்க அடிகள்)			...	8
அன்னையை வேண்டுதல் (பாரதியார்)			...	4
ஆக வரிகள்			...	120

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
    ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

தேசிய கீதத்தின் பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்;
நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன.
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

I. வாழ்த்து

1. தேவாரம்

பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானுய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானுய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்ருய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

—திருநாவுக்கரசர்

2. திருவாசகம்

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

—மாணிக்கவாசகர்

3. திவ்வியப் பிரபந்தம்

வம்மின் புலவீர்நும் மெய்வருந் திக்கைசெய் துய்மினே
இம்மன் னுலகில் செல்வரிப் போதில்லை நோக்கினேம்
நும்மின் கவிகொண்டு நும்மிட் டாதெய்வ மேத்தினல்
செம்மின் சுடர்முடி யென்திரு மாலுக்குச் சேருமே.

—நம்மாழ்வார்

4. தேம்பாவணி

தேறுங் தயையின் முனிவோய் நீ
சினத்திற் கருள்செய் கனிவோய் நீ
கூறுங் கலையற் றுணர்வோய் நீ
கூறுங் தொனியற் றுரைப்போய் நீ
மாறும் பொருள்யா விலும்நின்றே
மாறு நிலைகொள் மரபோய் நீ
ஈறும் தவிர்ந்துன் புகழ்க்கடலாழ்ந்
தெனக்கே கரைகாட் டருளாயோ.

—வீரமாமுனிவர்

5. சீறாப் புராணம்

நெறிநிலை திரியா மருள்மத மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் காலம் இருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

—உமறுப் புலவர்

II. நீதிப் பகுதி

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. 1

நீத்தார் பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2

அறன் வலியுறுத்தல்

அறத்தினூஉங் காக்கமும் இல்லை யதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு. 3

மக்கட் பேறு

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 4

அன்புடைமை

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. 5

விருந்தோம்பல்

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 6

செய்ந்நன்றி அறிதல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 7

நடுவுநிலைமை

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 8

அடக்கம் உடைமை

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 9

ஒழுக்கம் உடைமை

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 10

பொறை உடைமை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 11

அழுக்காறாமை

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 12

வெஃகாமை

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. 13

பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 14

ஒப்புரவு அறிதல்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 15

புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு. 16

அருள் உடைமை

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. 17

கள்ளாமை

களவினுல் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 18

வாய்மை

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 19

இன்னு செய்யாமை

அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போல் போற்ருக் கடை. 20

இறைமாட்சி

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனுள் பவற்கு. 21

கல்வி

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்ருர்
கடையரே கல்லா தவர். 22

கேள்வி

கற்றிலன் ஆயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்ருந் துணை. 23

அறிவுடைமை

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். 24

குற்றங் கடிதல்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 25

பெரியாரைத் துணைக்கோடல்

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 26

இடன் அறிதல்

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 27

தெரிந்து தெளிதல்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 28

பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 29

வெருவந்த செய்யாமை

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். 30

ஊக்கம் உடைமை

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 31

மடியின்மை

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 32

நட்பு

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 33

மானம்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 34

உழவு

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 35

—திருவள்ளுவர்

2. நீதிநெறி விளக்கம்

அவையஞ்சுவார் கல்வி

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 1

சான்றாண்மை

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. 2

அடைக்கலங் காத்தல்

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியும் மற்றோ
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் பேர்ம்புதற்கே
தானுடம் பட்டார்கள் தாம். 3

தெரிந்து முயலுதல்

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலும் தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை ஆளப் படும். 4

நல்லாறு

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். 5

—குமரகுருபரர்

3. நாலடியார்

கல்வி

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு. 1

மேன்மக்கள்

இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா வுளங்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். 2

நல்லினஞ் சேர்தல்

அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். 3

தாளாண்மை

நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்றா னாகுங் குலம். 4

மானம்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின். 5

—சமண முனிவர்கள்

4. பழமொழி

கல்வி

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால். 1

சான்றோரியல்பு

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க் கணி. 2

முயற்சி

வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துதல் இன்று. 3

ஊழ்

சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான் இல்லை
உயிருடையார் எய்தா வினை. 4

ஈகை

இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப
இறைத்தோறும் ஊறுங் கிணறு. 5

—மூன்றுறை அரையனார்

5. ஏலாதி

விண்ணோர்க்கு விருந்தாவார்

இன்சொ லளாவ லிடமினி தூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து. 1

ஞாலம் அறிந்த புகழ் பெறுபவர்

மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞால மறிந்த புகழ். 2

சான்றோர், புல்லறிவாளர் சொற்கள்

மையோர் தடங்கண் மயிலன்னாய் சாயலே
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொ ணன்கும்
மறலையின் வாயினவா மற்று. 3

இமையவரும் விரும்புபவர்

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்—சாலவும்
ஆழப் படுமூ ணமைந்தா ரிமையவரால்
வீழப் படுவார் விரைந்து. 4

நீதிநூல்கள் தேவைப்படாதவர்

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னுயி னெறிநூல்கள்
பாடிறப்ப பன்னு மிடத்து. 5

—கணிமேதையார்

6. சிறுபஞ்சமூலம்

கற்றவரும் கல்லாதவரும்

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்ப மிலேம்பண்டி யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. 1

உயர்ந்தோர் கொள்ளும் நெறி

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள்வெள வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் திண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு. 2

வசை, குலம், போகம், அறம் உண்டாகும் வகை

வைததனல் ஆகும் வசைவணக்கம் நன்ருகச்
செய்ததனல் ஆகுஞ் செழுங்குலமுன்—செய்த
பொருளினல் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினல் ஆகும் அறம். 3

பெண்டிர் சிறப்பு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையும் எஞ்ஞான் றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 4

விண்ணேரால் ஏத்தப்படுபவன்

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை இன்புருன் இல்லார்—மொழிந்தவை
மென்மொழியால் உண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணேரால்
இன்மொழியால் ஏத்தப் படும். 5

—காரியாசான்

III. தொடர்நிலைச் செய்யுள்

1. பெரிய புராணம்

கதைச் சுருக்கம்: தொண்டை நாட்டுத் திருநின்றவூரில் அந்தணர் குலத்தில் தோன்றிய பூசலார் என்னும் சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானுக்குக் கோயில் கட்ட விரும்பினார். அதற்குப் போதிய பொருளின்மையால் மனத்தாலே கோயிலைச் சிறப்பாகக் கட்டி முடித்தார். இறுதியாகச் சிவபெருமானைக் கோயிலில் எழுந்தருளச் செய்தற்குரிய நன்னாள் ஒன்றைக் குறித்தார்.

அவர் காலத்திலே காஞ்சீபுரத்தை ஆண்ட காடவ மன்னன் கோயில் ஒன்று கட்டுவித்தான். சிவபெருமானை எழுந்தருளச் செய்தற்குரிய நல்ல நாளாகப் பூசலார் குறித்த அந்நாளையே அவனும் குறித்தனன். அதற்கு முன்னாள் இறைவன் அவன் கனவில் தோன்றி, "நாம் நாளை பூசலார் கட்டியுள்ள ஆலயத்துக் குடி புகுவோம். ஆதலின், நீ கருதிய சிவப் பணியை மற்றொரு நாளில் செய்க" என்று கட்டளையிட்டு மறைந்தார்.

காடவர் கோமான் அடுத்த நாட் காலை திருநின்றவூர் அடைந்து, ஆங்குள்ளாரிடம், 'பூசலார் கட்டியுள்ள கோயில் எங்குளது?' என்று கேட்டான். அங்குள்ளார், 'பூசலார் கட்டியுள்ள கோயில் இங்கில்லை' என்று கூறக் கேட்டு, பூசலார் இருப்பிடம் சென்று கண்டான். மன்னன் இறைவன் கனவில் தனக்குக் கூறியதைக் கூற, பூசலார் மகிழ்ந்து, தாம் உள்ளத்தால் கோயில் கட்டியதைக் குறிப்பிட்டார். மன்னன் அவரடி வணங்கித் தன் நகர் சென்றான். பூசலார் நல்ல நாளில் தம் மனக் கோயிலில் இறைவனைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். முடிவில் சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

பூசலார் நாயனர் புராணம்

திருநின்றவூர் சிறப்பு

உலகினி லொழுக்க மென்று முயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீல மென்றுங் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வ மல்கி நிகழ்திரு நின்ற வூராம். 1

பூசலார் ஒழுக்கம்

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான எல்லாம் தம்பிரான் கழன்மேற் சார
வருநெறி மாரு அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக் கலையுணர் பொலிவின் மிக்கார். 2

அடுப்பது சிவன்பா லன்பர்க் காம்பணி செய்த லென்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துட் கொண்டா ரிருநிதி இன்மை எண்ணர். 3

மனக்கோயில் அமைத்தல்

மனத்தினுற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்துமோர் பொருட்பே றின்றி என்செய்கே னென்று நைவார்
நினைப்பினு லெடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார். 4

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னுட் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றுர். 5

அடிமுத லுபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினுல் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார். 6

தூபியும் நட்டு மிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலு மமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்ப விதித்தநாள் சாரு நாளில். 7

காடவர் கோமான் கனவிலே சிவபெருமான் தோன்றுதல்

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத் தாபிக்கு மந்நாள் முன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தா ரிரவிடைக் கனவி லெய்தி. 8

நின்றவூர்ப் பூச லன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீஇங்
கொன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண் டருளப் போந்தார். 9

காடவர் கோமான் திருநின்றவூர் அடைதல்

தொண்டரை விளக்கத் தூயோ னருள்செயத் துயிலை நீக்கித்
திண்டிறல் மன்னன் அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டு மென்றெழுங் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த நின்றவூர் வந்து சார்ந்தான். 10

பூசலார் எடுத்த கோயில் எங்குளது என அரசன் கேட்டல்

அப்பதி யணைந்து பூச லன்பரிங் கமைத்த கோயில்
எப்புடை யதுவென் றங்க ணெய்தினுர் தம்மைக் கேட்கச்

செப்பிய பூசல் கோயில் செய்த தொன்றில்லை என்றார்
மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருகவென் றுரைத்தான்
வேந்தன். 11

காடவர் கோமானும் பூசலாரும்

பூசுர ரெல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
மாசிலாப் பூச லார்தாம் யாரென மறையோ ரெல்லாம்
ஆசில்வே தியனிவ் வூரா னென்றவ ரழைக்க ஒட்டான்
ஈசனார் அன்பர் தம்பா லெய்தினான் வெய்ய வேலான். 12

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது நீரிங்
கெண்டிசை யோரு மேத்த எடுத்தவா லயந்தான் யாதிங்
கண்டர்நா யகரைத் தாபித் தருளுநா ளின்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுதல் அருள்பெற்
றென்றான். 13

மன்னவ னுரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரா னருள்செய்
தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதா மென்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச்
சொன்னார். 14

அரசனு மதனைக் கேட்டங் கதிசய மெய்தி என்னே
புரையறு சிந்தை யன்பர் பெருமையென் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டுதன் மூதூர்ப் புக்கான். 15

பூசலார் இறைவன் திருவடி நீழல் அடைதல்

அன்பரு மமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்பூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாள் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார். 16

—சேக்கிழார்

2. கம்ப ராமாயணம்

முன் கதைச் சுருக்கம்: பரதன் சுற்றத்தார் சூழ, வனம் புகுந்த தன் அண்ணன் இராமனைத் தேடிக் கங்கையின் வடகரை வந்து அடைந்தான். இராமன்மீது, அவன் படையெடுத்து வருவதாகக் கருதிய குகன் சீற்றங்கொண்டு போர் புரிய ஆயத்தமாகின்றான். பிறகு, பரதனின் தோற்றத்தாலும் செயலாலும் அவனது உண்மை அன்பை உணர்ந்து, சீற்றம் தணிந்து அவனிடம் சென்று வணங்கிப் புகழ்கின்றான். "இங்கு இராமன் தங்கியிருந்த இடம் யாது?" என்று பரதன் கேட்கக் குகன் அவ்விடத்தைக் காட்டுகின்றான்.

பாடப் பகுதிக் கதைச் சுருக்கம்: பரதன் இராமன் தங்கிய இடத்திலே இரவு தங்கி இருந்து, மறுநாட் காலை கங்கையாற்றைக் கடக்க நாவாய்கள் வேண்டும் என்று கேட்டான். குகன் கட்டளையால் வந்த நாவாய்களில் அவனோடு வந்த படைகள் சென்றன. ஒரு நாவாயில் பரதன், குகன், கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகியோர் செல்கின்றனர். பரதன் குகனுக்குத் தன் தாயர் மூவரையும் அறிமுகஞ் செய்து வைக்க, அவர்களைக் குகன் வணங்குகின்றான். நாவாய் கங்கையின் தென்கரை சென்றடைய, கரையில் இறங்கிச் செல்கின்றனர்.

குகப் படலம்

பரதன் இராமன் தங்கிய இடத்திலேயே அன்றிரவு தங்கி, மறுநாட் காலையில் கங்கையின் அக்கரையிற் சேர்க்குமாறு குகனை வேண்டுதல்

அவ்விடை அண்ணல் தானும் அன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரகின் றார்க்கும் செறிகழல் புளிஞர் கோமான்

இவ்விடைக் கங்கை யாற்றின் ஏற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடல்நின் றேற்றி வேந்தன்பால் விடுத்த
தென்றான். 1

குகன் கட்டளையிடப் பல நாவாய்கள் வருதல்

நன்றெனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை நாவாய்
சென்றுநீர் தருதிர் என்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கும் அம்பொன் குவடெனக்
குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே றுருவுகொண் டணைய வான. 2

நாவாய் வந்தமையைக் குகன் தெரிவிக்க, பரதன் சுமந்திரனை நோக்கிச் சேனைகளை அவற்றில் ஏற்றச் சொல்லுதல்

வந்தன வரம்பில் நாவாய் வரிசிலைக் குரிசில் மைந்த
சிந்தனை யாவ தென்று சிருங்கிபே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவி லானும் சுமந்திரன் தன்னை நோக்கி
எந்தைஇத் தானை தன்னை ஏற்றுதி விரைவின் என்றான். 3

சுமந்திரன் நாவாய்களில் ஏற்றச் சேனைகள் யாவும் கங்கையைக் கடத்தல்

குரிசில தேவ லால்அக் குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி மரபுளி வகையின் ஏற்றக்
கரிபரி இரதம் காலாள் கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசும் கங்கையா றேறிற் றன்றே. 4

சேனைகள் யாவும் கடந்தபின் பரதன் நாவாயில் ஏறுதல்

சுழித்துநீர் வருதுறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக் கள்ள வாசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமேல் ஏறினன் தானும் ஏறினன். 5

சத்துருக்கனன், தாய்மார் மூவர், சுமந்திரன், குகன் ஆகியவர்கள் ஏறியதும், பரதனேறிய நாவாய் செல்லுதல்

தன்னன தம்பியும் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனும் தூய தோழனும்
துன்னினர் ஏறலும் துழாது டுப்பெனும்
நன்னயக் காலினல் நடத்தல் மேயினன். 6

பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகப்படுத்துதல்

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசில் இவர்ஆர் என்று
குகன்வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகம்
ஈன்றனை முன்னீன் றனைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியாள் என்றான். 7

என்றலுமே அடியின்மிசை நெடிதுவிழுந்
தழுவானை இவன்யார் என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்துணைவன் இராகவனுக் கிலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகன்என்பான்
இங்கின்ற குரிசில் என்றான். 8

நைவீரலீர் மைந்தீர் இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே விலங்கல் திண்தோள்

கைவீரக் களிறனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றாள். 9

சுமத்திரையை அறிமுகப்படுத்துதல்

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி ஐய அன்பின்
நிறைந்தாளை உரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளனென்னப் பிரியாதான்
தனைப்பயந்த பெரியாள் என்றான். 10

பரதன் தன் தாயை அறிமுகப்படுத்துதல்

சுடுமயானத்திடைத்தன் துணைஏகத்
தோன்றல் துயர்க்கடலின் ஏகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை யார்இவரென்
றுரையென்னக் குரிசில் கூறும். 11

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெலாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இங்கின்றாள் என்னை ஈன்றாள். 12

என்னக் கேட்டவ் விரக்க மிலாளையும்
தன்னற் கையின் வணங்கினன் தாய்என
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே. 13

தாயர் சிவிகையிற் செல்லப் பரதன் நடந்து செல்லுதல்

இழிந்த தாயர் சிவிகையின் ஏறத்தான்
பொழிந்த கண்ணில் புதுப்புனல் போயினுன்
ஒழிந்தி லன்குக னுமுடன் ஏகினுன்
கழிந்த னன்பல காவதம் காலினே. 14

—கம்பர்.

3. திருவிளையாடற் புராணம்

கதைச் சுருக்கம்: மதுரையம்பதியில் தனபதி என்னும் செல்வ வணிகன் ஒருவன் தன் மனைவி சுசீலையோடு வாழ்ந்து வந்தான். அவன் தனக்கு மகப்பேறின்மையால் தன் தங்கை மகனை மகனுகக் கொண்டு வளர்த்து வந்தான். ஒரு நாள் தங்கை கூறிய கடுமொழி பொருது தன் மனைவியாரோடு தவம் செய்ய வனம் சென்றுன். பலநாள் ஆகியும் அவன் திரும்பாமையால் அவன் தாயத்தார் அச்சிறுவனிடம் இருந்த பொருள் முழுவதையும் தம் வலிமையால் பெற்றுக் கொண்டனர். அதனுல், அவன் தாய் சோமசுந்தரக் கடவுளைத் தொழுது, வணங்கி முறையிட்டாள். இறைவன் கூறிய மொழிப்படி அவள் தாயத்தாரை நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றுள். அப்போது சோமசுந்தரப் பெருமான் தனபதி வேடம் தாங்கி ஆங்கு வந்து ஆதரவற்ற அவ்விருவரையும் தேற்றினுன். தனபதி வடிவில் வந்த இறைவன் மொழிகளைக் கேட்டுத் தாயத்தார் பயந்து அவ்விடம் விட்டு நழுவிச் சென்றனர். மாமனுக வந்த இறைவன் தன் மருகனுக்குச் சீட்டெழுதுவித்துக் கொடுத்து மறைந்தான்.

மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

தனபதி வணிகனும் அவன் மனைவியும்

கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்னான் தனபதி யென்னும் பேரான்
மன்னினான் அனையான் கற்பின் மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாண் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவின்
அன்னாள். 1

தனபதி தன் தங்கை மகனை மகனாகக் கொள்ளுதல்

எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளில்
தனபதி மருகன் தன்னைத் தகவுசால் மகவாகக் கொண்டு
மனமகிழ் சிறப்பா னல்க மனைவியுந் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து பொற்றிப் பொலிவுற வளர்த்துக்
கொண்டாள். 2

தனபதிமீது தங்கை வெகுளலும், அதன் விளைவும்

தனபதி மகப்பே றற்றா னாயினும் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினால் வருந்தி ஈன்ற
தனையனை மகவாத் தந்த தங்கைமேற் றீராப் பூசல்
வினைவிளைத் தொழுக வோர்நா ளிளையளும் வெகுண்டு
சொல்வாள். 3

பெருமித முனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனா லன்றோ இருமையு மடைவா யென்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னாத் தனபதி தவமேற் செல்வான். 4

தனபதி துறவும் தாயாதிகள் செயலும்

தன்பெருஞ் செல்வ மெல்லா மருமகன் தனக்கே யாக்கி
அன்புகொள் மனைவி யோடும் அருந்தவ நெறியிற் சென்றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வௌவினார் தாய மாக்கள். 5

தாயாதிகளின் செயலைக் கண்ட திக்கற்றவள் வேண்டுகோள்

விளைநிலன் அடிமை பைம்பூண் வெறுக்கை நன்பசுக்களேனை
வளனுமாற் றலர்கைக்கொள்ள வன்சிறை யிழந்த புட்போல்
தளர்வுறு மகனுந் தாயும் சார்பிலாத் தம்ம னோர்க்கோர்
களைகணு யிருக்குங் கூடற் கடவுளே சரண மென்னு. 6

வந்துவான் அகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயில்
சுந்தர நாதன் பாதத் துணைதொழு திறைஞ்சி யார்க்கும்
தந்தையுந் தாயு மாகுந் தம்பிரா னீரே யெங்கட்
கெந்தையும் யாயு மென்னு விரங்கிநின் றினைய
சொல்வாள். 7

என்மகன் தன்னை மைந்த னின்மையா லெவருங் காணத்
தன்மக னுகக் கொண்டு தகுதியா லன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப் போயினு னெம்முன் இப்பால்
வன்மையால் தாயத் தார்க ளவையெலாம் வௌவிக்
கொண்டார். 8

ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேறுங்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணேன் ஐய
அருத்திசா லறவோர் தேறும் அருட்பெருங் கடலே யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ என்றுபார் படிய
வீழ்ந்தாள். 9

[சோமசுந்தரக் கடவுள் அவள் கனவில் தோன்றி, "பொய் வழக்கு உரைப்போரை நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்; நாம் வந்து உனக்கு நீதி வழங்குவோம்" என்று கூறினர். அம்மொழிகேட்ட அவள் நீதி மன்றத்தில் வழக்கிட, நீதி மன்றத்தார் தாயாதிகளை அழைத்து வருமாறு செய்தனர். அப்போது இறைவன் தனபதி வேடம் பூண்டு அவையை அடைந்து கூறுதல்.]

அரசனிங் கில்லை கொல்லோ ஆன்றவ ரில்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ
கோதில் நூல்கள்

உரைசெயுந் தெய்வந் தானு மில்லைகொல் உறுதி யான
தருமமெங் கொளித்த தேகொல் என்றறத் தவிசிற்
சார்வார். 10

தாயாதிகளின் அச்சம்

தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி விம்மித மெய்தி வெல்லும்
மனவலி யிழந்து பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ளம் அச்ச நாணினால் விழுங்கப் பட்டார். 11

மாமனாக வந்த இறைவன் மருகனையும் தங்கையையும் கண்டு வருந்துதல்

மாதுல ராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானீர் அந்தோ ஐயவென் றழுது நைந்தார். 12

ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி
காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா
ரென்னா. 13

ஆதரவற்ற அவளையும் அவள் மகனையும் மாமனாக வந்த இறைவன் தேற்றுதல்

அனைவரு மிரங்க வாய்விட் டழுதவ ரிளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்
தினையன்மின் என்முன் வேறொன் றெண்ணன்மி னென்னா
வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மி
னென்னா. 14

ஐயங்கொண்ட தாயத்தார் உணர, சில உண்மைகள் உரைத்தல்

தந்தைதாய் மாமன் மாமி தாயத்தா ரிவரை யீன்ருர்
மைந்தர்கள் உடன்பி றந்தார் மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினுல் மொழிந்தான்
முன்னேன். 15

நடுவர் தீர்ப்பும் தாயாதிகள் செயலும்

அனையது கேட்ட ஆன்ருே ரனைவரு நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே யிவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் தேரிற் றண்டிக்கு நம்மை யென்னு. 16

இல்லினுக் கேகி மீள்வன் யானென் றுங் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவே னென் று மொவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளா ரனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன ரொளித்துப்
போனுர். 17

மாமனுக வந்த இறைவர் தம் மருகனுக்குச் சீட்டெழுதுவித்துக் கொடுத்து மறைதல்

அனையவர் போக நின்ற அறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி யீந்தன ரீந்த வெல்லை
மனமொழி கடந்த நாயகர் மறைந்துதங் கோயில் புக்கார். 18

—பரஞ்சோதி முனிவர்

4. சீருப் புராணம்

கதைச் சுருக்கம்: நபிகள் பெருமானுர் வாணிகத்தின் பொருட்டு ஷாம் நகர்க்குச் சென்று மக்கமா நகரார் வசிக்கும் இடத்திற்குப் போய்த் தங்கினுர். அப்போது அங்கு வந்த யூதர்களிற் சிலர் முகம்மது நபியின் உறுப்பிலக்கணங்களே ஆராய்ந்தனர். தங்கள் சமயமும், தம் மக்களும் அழியத் தோன்றியவன் நபிகள் பெருமான் என எண்ணினர். அதனுல், அவரை வஞ்சனேயால் கொல்லக் கருதினர்.

முகம்மதுவைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்து ஆசனத்தில் அமரச் செய்து உபசாரம் செய்தனர். வஞ்சக நெஞ்சினருள் ஒருவன் வீட்டின் மேலிடம் சென்று, அங்கு முன்பு வைத்திருந்த கல்லே உருட்டிவிடக் கையை வைத்தனன். கல் அவன் கையைப் பற்றிக்கொள்ள, ஆங்குள்ளோர் சென்று கல்லே இழுத்தனர். கை அறுந்தது. நபிகள் பெருமானுரிடம் ஓடி மன்னிக்க வேண்டினர். நபியும் தமக்கு இயல்பாய் அமைந்த சால்பினுல் கரத்தைப் பொருத்தி மன்னித்து அருள் புரிந்தார்.

கரம்பொருத்து படலம்

முகம்மது நபியின் தோற்றப் பொலிவு

மேனியிற் கதிர்விரி வியப்பும் மெய்யினில்
மான்மதம் கமழ்தரும் வடிந்த கைகளும்
தூங்கிறை மதியென முகமும் தோள்களும்
கானிலம் தோய்தராக் கார ணீகமும் 1

யூதர்கள் நபியைக் கண்டு திரும்புதல்

பன்னருஞ் சிறப்புடை யருட்கட் பார்வையும்
மன்னிய அவயவத் தழகு மாசிலா
நன்னிலே மொழிபல நவிற்றுஞ் செய்கையும்
இன்னன பலவுங்கண் டேகி ஞரரோ. 2

யூதர்கள் முகம்மது நபியினைக் கொல்லக் கருதுதல்

மறைதெரி சமயமும் நமரு மாய்ந்திட
உறைகுவன் ஒருவனுண் டணித்தென் றோதுநூல்
துறைவலார் நாடொறும் சொற்ற சொற்படி
பிறவியான் இவனெனப் பின்னும் பேசினர். 3

தருபெரும் பதவியிச் சமயம் பாழ்பட
வருபவன் தன்னுயிர் வானி லேறிடக்
குருதிநீர் சிந்திடக் குவல யத்திடைச்
செருவிளைத் திடுதலே திறமென் றோதினர். 4

யூதர்கள் வஞ்சக எண்ணத்துடன் தம் இல்லத்திற்கு முகம்மது நபியை அழைத்தல்

சொல்லிய விலைப்பொருட் டொகையை நும்வயின்
ஒல்லையின் உதவுதற் குறுதி யாகவே
மல்லுடைப் புயத்திறல் முகம்ம தேயெம
தில்லிடை வருகவென் றிசைத்திட் டாரரோ. 5

முகம்மது நபி வஞ்சகர் இல்லம் செல்லுதல்

ஷாமுநாட் டவருரை யனைத்தும் சம்மதித்
தாமினு திருமகன் அகம கிழ்ச்சியாய்
நேமிவா னவிர்திரை நிறைந்து சுற்றிய
பூமிநா யகர்தொழப் புறப்பட் டாரரோ. 6

யூதர்கள் நபியினை வஞ்சகமாகப் புகழ்தல்

மைதவழ் குடையீ ரிந்த மனையிடைப் புகுத யாங்கள்
செய்தவப் பயனோ முன்னோர் தினைத்தபுண்ணியத்தின் பேறோ
எய்திய பெற்றி யென்ன இசைந்தநன் முகம னுக
பொய்திகழ் நாவால் வஞ்சம் பொருந்திய மனத்தர்
சொன்னர். 7

கயவன் ஒருவன் கல்லுருட்டச் சென்று துன்புறுதல்

தீங்குறு மனத்த னேகிச் செறித்தமேற் பலகை மெல்ல
வாங்கியங் கிருந்த கல்லை வரைப்புயம் பிதுங்க வுன்னித்
தாங்கலில் உருட்டி மெல்லத் தள்ளினன் தள்ள லோடும்
நீங்கருங் கரத்தைக் கவ்வி நெரிபட இறுக்கிற் றன்றே. 8

கரத்தினிற் பதிந்த கல்லைக் கழற்றினன் கழற்ற லாகா
துரத்தொடுங் காலை யூன்றி யுதைத்திழுத் தசைத்து வெள்வாய்
நிரைத்தபல் லதரங் கவ்வி நெற்றிமேற் புருவ மோட்டி
வரைத்தடப் புயங்கள் வேர்ப்ப வலித்தறச் சலித்து ழன்றான். 9

தீமை செய்தார் அதனால் கெடுதல்

ஓங்கு மாநில மாக்களில் ஒருவருக் கொருவர்
தீங்கி யற்றிட நினைத்திடுங் கொடியவத் தீமை
நீங்கி டாதவ ருயிரினைப் பருகநே ரலர்கை
தாங்கும் வாளென ஒல்லையி லுறச்சமைந் திடுமே. 10

யூதர்கள் நபிநாயகத்தைத் தம்மை மன்னிக்குமாறு வேண்டுதல்

வெறுத்த புன்மனக் கொடியம்யாம் விளைத்திடும் வினையைப்
பொறுத்து நல்லரு ளெம்வயின் புரிகெனப் போற்றி
மறுத்து நன்மொழி புகன்றனர் வளருநல் லறத்தை
அறுத்துத் தீவினைப் பயிர்விளைத் திடநினைத் தவரே. 11

நபிநாயகத்தின் அருளால் கரம் பொருந்துதல்

கரிய கல்லினிற் பதிந்திடும் கரத்தினின் கரத்தைத்
தெரிய வைத்திடென் றோதிய மொழியினைத் தேறிச்
சொரித ருங்குரு திகளொடும் துடுப்பெனுங் கரங்கள்
அரிதி னீட்டியே தொட்டிட வொட்டின வன்றே. 12

கரம்பொருந்தப் பெற்ற யூதன் தன்னையாட்கொள்ள வேண்டல்

முன்னை நாளினும் பலனுறு முழுமலர்க் கரத்தால்
வன்ன மாமலர் முகம்மதின் இணையடி வருடி
இன்னல் நீக்கினை இருகரம் பொருத்தினை இனியென்
தன்னை யாளுதி கடனெனை அடிக்கடி தாழ்ந்தான். 13

—உமறுப் புலவர்

5. தேம்பாவணி

கதைச் சுருக்கம்: சூதேய நாட்டைச் சவூல் என்ற அரசன் ஆண்ட காலத்திலே கிறித்தவ மதப்பகைவர்களான பிலித்தையர்கள் அவனை எதிர்த்தனர். அவர்களுக்குக் கோலியாத்து என்னும் அரக்கன் துணைவனானான். அவ்வரக்கனை வென்றவர்க்குத் தன் மகளை மணம் செய்து கொடுப்பதாக அரசன் விளம்பரம் செய்தான். நாற்பது நாட்கள் அவன் கொடுமை வளர்ந்தது.

பெத்தலகேம் என்னும் ஊரிலிருந்த தாவீதன் என்னும் இளைஞன் தன் தமையன்மார் மூவரும் பிலித்தையருடன் போர் செய்வதைக் காண வந்தான். அவன், அவர்களாலேயே அரக்கன் கோலியாத்தினுடைய கொடுஞ் செயலைக் கேள்வியுற்று, தான் அரக்கனை வெல்லக் கருதி, சவூல் மன்னனிடம் அனுமதி பெற்றான். பின்பு கல்லும் கவணும் கொண்டு சென்று அவ்வரக்கனுடன் போரிட்டுக் கவண் கல்லாற் கொன்றான். பிற்காலத்தில் அவனே அந்நாட்டின் அரசனானான்.

வளன் சனித்த படலம்

தாவீதன் சிறப்பு

அருளொடு வீங்கிய வகத்தி னன்றுளி
மருளொடு வீங்கிய மழைக்கை யான்மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினன்
பொருளொடு வீங்கிய பொறைப்பு யத்தினன். 1

பகைசெய்வார்க் கிடியெனப் படிந்து போற்றிய
தகைசெய்வார்க் கமுதென நாமத் தன்மையான்
நகைசெய்வார்க் கிளவலாய் நடத்தும் வேலினுன்
மிகைசெய்வான் ஆண்மையை விளம்ப னன்றரோ. 2

பிலித்தையர் எதிர்த்தல்

மறைவ ழங்கிய வளங்கொ ணுட்டிடை சவூலாண்ட
முறைவ ழங்கிய கால்மறை பகைத்தனர் முகினின்
றுறைவ ழங்கிய வொப்பெனச் சரமழை வழங்கிப்
பொறைவ ழங்கிய பிலித்தையர் போர்செய வெதிர்த்தார். 3

கோலியாத்து என்னும் இராக்கதனும் எதிர்த்தல்

வேலி யாற்கது விடாத்திரு நகரெலாம் நடுங்க
மாலி யாற்கதிர் வகுத்தவா ளேந்தினர் நாப்பண்
ஆலி யாற்கரிங் தகல்முகி லுருக்கொடு வேய்ந்த
கோலி யாற்றெனுங் கொடியதோ ரிராக்கத னெதிர்த்தான். 4

கோலியாத்து போருக்கழைத்தல்

கூர்த்த போர்செயக் கூடினர்க் கொருவன்வந் தெய்திச்
சீர்த்த நானவன் சிறந்தபோர் தனித்தனித் தாக்கத்
தோர்த்த பாங்கினர் தொழும்பரென் ருகுவ ரென்னு
ஆர்த்த வோகையால் நகைத்திகழ் வறைந்தறைந் தழைப்
பான். 5

சவூல் மன்னனின் அறிவிப்பு

தாங்கு வாரிலாச் சாற்றிய வுரைகள்கேட் டெவரும்
நீங்கு வாரென நிருபனு மயருதன் னெஞ்சிற்
கேங்கு வானெவ னெதிர்ந்தவவ் வரக்கனை வென்ருல்
ஆங்கு நானவற் கென்மக ளளிக்குவே னென்பான். 6

தாவீதன் அஞ்சினோர் சொல்லைக் கேட்டல்

இன்ன வாய்பகல் நாற்பது மிரிந்தபின் அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயின ரவரைத்
துன்ன வாசையால் தொடர்ந்திள தாவீத னெய்தி
அன்ன யாவையு மஞ்சின ரறைதலுங் கேட்டான். 7

தாவீதன் வினா

கேட்ட வாசகங் கிளர்திற நெஞ்சிடத் தெரியை
ஈட்ட லாமென வெழுந்துளம் நினைந்தவை யாக்கிக்
காட்ட வாய்மையிற் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட லால்விளி விழுங்கிய கயவனா ரென்றான். 8

தாவீதன் கூற்று

கைவ யத்தினால் கருத்திடத் துடலினுங் கோங்கும்
பொய்வ யத்தினன் புகைந்தசொற் கஞ்சுவ தென்னே
மெய்வ யத்தினால் விழைசெய மாவதோ கடவுள்
செய்வ யத்தினற் சிறுவனான் வெல்லுவேன் என்றான். 9

சவூல் தாவீதனை வினவல்

என்ற தண்ணல்கேட் டிவன்றனைக்
கொணர்மினென் றிசைப்பச்
சென்ற வன்னநற் சேடனை
நோக்கலும் நீயோ
பொன்ற வுன்னினைய் பொருப்பினைப்
பெயர்த்தெறிந் துவமை
வென்ற திண்மையான் வெகுளிமுன்
நீயெவன் என்றான். 10

தாவீதன் விடை

ஏந்த லீரடி யிறைஞ்சிய விளவலு மறைவான்
காய்ந்த தோர்பகை கடுத்ததன் பவஞ்செயின் மீட்டும்
வேய்ந்த தோர்படை வேண்டுமோ கடவுளைப் பகைத்து
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை யெவன்வெல் லானையா.
11

தாவீதன் கவணொடு செல்லுதல்

தெரிந்த வாய்ந்தவைஞ் சிலையொடு கவணெடுத் தெவரும்
இரிந்த பாலனை நோக்கியுள் ளதிசயித் திரங்க
விரிந்த வாசையால் வேதிய ராசியைக் கூறப்
பிரிந்த காலொலி பெருகவாங் கனைவரு மார்த்தார். 12

அரக்கனின் வீழ்ச்சி

கல்லை யேற்றலுங் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை யோட்டலு மொருவருங் காண்கில ரிடிக்குஞ்
செல்லை யொத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலுங் கண்டார். 13

அரக்கன் தலையைத் தாவீதன் கொய்தல்

கடையு கத்தினிற் கருமுகி லுருமொடு விழும்போற்
படைமு கத்தினிற் பார்பதைத் தஞ்சவீழ்ந் தனன்றன்
புடைய கத்தினிற் புணர்ந்தவா ளுருவியென் றெய்வம்
உடையு ரத்தினை யுணர்மினென் றிருஞ்சிரங் கொய்தான். 14

தாவீதன் அரசனாதல்

கொய்தவாண் முடிதி ரண்ட குப்பைக ளேறி வெய்யில்
செய்தவாண் முடியைச் சூடிச் சிறந்தவா சனத்தி லோங்கிப்
பெய்தவா றொளியோ டாய்ந்த பெருந்தயை பிலிற்றுஞ்
செங்கோல்
எய்தவா னிறையோ னண்மை எய்தியே அரச னானான். 15

—வீரமாமுனிவர்

IV. பல்சுவை

(அ) வருணனைப் பகுதி

1. மலைவளம்

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
  முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
    டோடும்
கிழங்கு கல்லித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
  கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
  தேன் அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
  வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே.

—திரிகூட ராசப்பக் கவிராயர்

2. கடல்

கற்றுணர்ந்த சான்றோரின் உள்ளம்போல்
  கடலேநீ ஆழங் கொண்ட
பெற்றியுணர்ந் தாழிஎன்றார் யாதுமூர்
  பிறரெல்லாம் கேளிர் என்ற
பற்றுடைய தமிழினத்தார் பரந்தமனப்
  பான்மையெனப் பரந்து நிற்கும்
ஒற்றுமையைக் கண்டன்றோ என்முன்னோர்
  உனைப்பரவை என்று சொன்னார்.

—முடியரசன்

3. ஞாயிறு

மடமையில் துயிலும் மக்கள்
  விழிகளைத் திறந்தாய் முல்லைக்
கொடிகளைச் சிரிக்கச் செய்தாய்
  குளம்குட்டைக் கழகு சேர்த்தாய்

இடையில் வாழ்தா மரைச்செவ்
விதழ்காட்டி அழைத்தாய் ஈந்தாய்
தடையுண்டோ உனக்கிந் நாட்டில்
ஞாயிறே தமிழே வாழி.

—வாணிதாசன்

4. நிலாத் தோற்றம்

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா—அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்ப ருலகின் இயல்பிதம்மா—மதிக்
கின்னர் இனியரும் உண்டோவம்மா
பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாய் உருண்டு திரண்ட துவோ
மேலாய் உலகில் ஒளிசெயவே—ஈசன்
விண்ணகம் இட்ட விளக்கிது வோ.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

5. சோலைக் காட்சி

விரைமலர் தேன்வண் டெல்லாம்
வீணையை மிழற்ற ஆங்கே
மரங்கொத்திப் புட்கள் தாளம்
வகைப்படுத் திடத்த டாகக்
கரையினில் அலைக்க ரங்கள்
கவின்மிரு தங்கம் ஆர்ப்பக்
கருங்குயில் பாடத் தோகைக்
கணிகை நின்றுடும் சோலை.

—பாரதிதாசன்

(ஆ) சீட்டுக் கவி

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்
ஒருமையி னுரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மணிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

—மதுரைச் சொக்கநாதப் பெருமான்

(இ) இரட்டுற மொழிதல்

1. பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகம்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

2. சிவபெருமானுக்கும் தேங்காய்க்கும் சிலேடை

கல்லால் அடியுறலால் கண்மூன் றிருப்பதால்
எல்லாரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்து சாமிமன்னு
கள்ளிதழி யானிகர்தேங் காய்.

—காளமேகப் புலவர்

(ஈ) சிற்றிலக்கியம்

1. மீனுட்சியம்மை குறம்

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே.

—குமரகுருபரர்

2. நந்திக் கலம்பகம்

ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

3. நால்வர் நான்மணி மாலை

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ

யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

—சிவப்பிரகாசர்

4. பிரபுலிங்க லீலை

அகழியும் மதிலும்

தாழ்ந்தோர் உயர்வர் என்றுமிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றுமறஞ்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாய்
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன் றுயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையின் உதிப்பவன்தாள்
கீழ்நின் றதுபோய்ச் சூழெயிலே.

—சிவப்பிரகாசர்

(உ) வழிபாட்டுப் பாடல்கள்

1. தேவாரம்

மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனும் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணு
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே.

—திருநாவுக்கரசர்

2. கம்ப ராமாயணம்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

—கம்பர்

3. திருவருட்பா

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

—இராமலிங்க அடிகள்

4. ஏசு வணக்கம்

அன்பேநீ யாதலினால் ஆருயிர்கள் பொருட்டுன்
அழகுடலை வதைக்கவிட்டாய் அருளுயிரை நீத்தாய்
இந்நிலத்தில் அச்செயலை எக்குரவர் ஏற்றார்
இளங்கன்னி வயிற்றுதித்த இறைமைமணி விளக்கே
அன்பினிலே குறையிருந்தால் அருஞ்செயலை ஆற்றல்
ஆகாதே ஆகாதே அன்புடைய அறவோர்
என்பும்பிறர்க் குரியரென எழுந்தமொழிக் குகந்த
இலக்கியமாய் இலங்குகிற்கும் ஏசுகுரு நாதா.

—திரு. வி. கலியாணசுந்தரனார்

5. அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்.

—பாரதியார்

★

1. லால்பகதூர் சாஸ்திரி

நல்லன யாவையும் நாடி, பூரண ஞானம் பொலிய, புத்தரின் அருள் பொங்கிப் பெருகிடப் பெருமை பெற்றுத் திகழ்வது நம் பாரத நாடாகும்.

இப்பாரத நாட்டின் பெருமையைக் காக்க அமர்க்களம் புகுந்து ஆருயிர் நீத்தோர் பலர். இன்னல் வந்துற்றபோதும் அதற்கஞ்சிடாது அருஞ்செயல்கள் புரிந்து அழியாப் புகழெய்திய தியாகச் செம்மல்கள் பலர். இந்நூற்றுண்டிலே அமைதியான வழியில் அறப்புரட்சியை ஏற்படுத்திப் பாரத நாட்டின் தந்தை என்று போற்றிப் பாராட்டப்படும் பெருமை பெற்றவர் அண்ணல் காந்தியடிகள். அண்ணலின் அடிச் சுவட்டைப் பின்பற்றி அன்பு நெறியை வளர்த்து, அகில உலகத் தலைவர்களால் பாராட்டப்பெற்றுப் பெரும் புகழ் எய்தி வாழ்ந்தவர் மனிதருள் மாணிக்கமாகிய நேரு. அப்பெரு மக்கள் காட்டிய அரசியல் நெறியைப் பின்பற்றி வாழ்ந்து பாரத நாட்டின் பெருமையைக் காப்பாற்றி அண்மையில் மறைந்தவரே நம் லால்பகதூர் சாஸ்திரியாவார்.

லால்பகதூர், காசி நகருக்கு அண்மையிலுள்ள மொகல்சராய் என்னும் ஊரில் 2-10-1904இல் சர்தா பிரசாத் என்பாருக்கும் இராம்துலாரி அம்மையாருக்கும் மகனுகப் பிறந்தார். அவருடைய தந்தையார் ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியராக முதற்கண் பணியாற்றி வந்தார். பிறகு அலகாபாத் அரசாங்க அலுவலகத்தின் எழுத்தராகப் பணி யாற்றினுர். ஏழ்மை நிறைந்த வாழ்வை நடத்திவந்த சர்தா பிரசாத் எதிர்பாராத வகையில் இயற்கை யெய்தினுர். அப்பொழுது லால்பகதூருக்கு அகவை ஒன்றரை யாகும்.

தந்தையார் இறந்தமையால் லால்பகதூர் உடன்பிறந்தார் இருவரோடும் தாயோடும் தமது தாயைப் பெற்றெடுத்த பாட்டனுர் வீட்டில் வாழவேண்டிய நிலையை அடைந்தார். தந்தையாரிடம் பெறவேண்டிய அன்பினை லால்பகதூர் தம் பாட்டனுரிடம் பெற்ருர்.

ஐந்தாம் அகவை நிறைவெய்தியவுடன் அவர் மொகல் சராயில் இருந்த தொடக்கப்பள்ளி யொன்றில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினுர். அப்பள்ளியில் நான்காம் வகுப்பில் பயிலுங் காலத்திலேயே அவர் ஆங்கில மொழிப் பாடத்தில் ஆற்றல் பெற்று விளங்கினுர். அவருடைய ஆங்கிலமொழி உச்சரிப்பினைக் கேட்ட பள்ளி ஆய்வாளர் ஒருவர் அவரைப் பெரிதும் பாராட்டி ஊக்கமளித்தார். அவர் தம் பத்தாம் அகவையில் ஆரும் வகுப்பில் தேர்ச்சி பெற்ருர். அதற்குமேல் படிக்க அப்பள்ளியில் வசதியில்லை.

காசி நகரில் அவருடைய மாமன் இரகுநாத் பிரசாத் என்பவர் வசித்துவந்தார். அவர் நகர மன்ற அலுவலகத்தில் ஓர் எழுத்தராகப் பணியாற்றி வந்தார். லால்பகதூர் காசி நகரையடைந்து, அங்குத் தம் மாமன் வீட்டில் தங்கி உயர்நிலைப் பள்ளிப் படிப்பை மேற்கொண்டார். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்பொழுது அவர் மாணவர்களுடன் கலகலப்பாகப் பேசிப் பழகாமல் ஒதுங்கியே இருந்துவந்தார். எனினும், அடக்கத்தோடு பாடங்களைச் சிறந்த முறையில் பயிலும் திறம் அவரிடம் இருந்தமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை மதித்துப் போற்றினர். பள்ளியில் பயின்ற காலத்தில் அவர் பாடநூல்களைப் படித்ததோடு நில்லாமல் பொது நூல்கள் பலவற்றையும் படித்துவந்தார். அவ்வாறு படித்த நூல்களிலே அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தவை குருநானக்கின் கிரந்தக்கவிதைகளே யாகும்.

பள்ளிப் பருவத்தில் லால்பகதூர் விளையாட்டில் மிகுந்த ஆர்வங்கொண்டு விளங்கினுர். கால்பந்து, ஹாக்கி

ஆகிய இரு விளையாட்டுக்களிலும் அவருக்குத் தனி விருப்பம் இருந்தது. விளையாட்டுக் கருவிகளைச் சொந்தமாக வாங்கு வதற்குப் பொருள் வசதியில்லாமையால் அவர் தம் வீட்டின் முன் வளர்ந்திருந்த 'கசுர்' என்னும் ஒருவகை மரத்தின் பூக்களை யுதிர்த்து ஒன்ருகச் சேர்த்துத் துணியொன்றில் முடிந்து பந்துபோலாக்கி விளையாடி வந்தார்.

லால்பகதூர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித் ததும் கல்லூரியிற் சேர்ந்து பயின்று வந்தார். வீட்டிலிருந்து கங்கை யாற்றைக் கடந்து அவர் கல்லூரிக்குச் செல்ல வேண்டியவராய் இருந்தார். திங்கள்தோறும் அவருடைய கைச் செலவிற்காக இரண்டரை ரூபாய் வீட்டார் அளித்து வந்தனர். ஒரு முறை படகுக்காரனுக்குக் கொடுக்கக் காசில்லாத காரணத்தால் அவர் கங்கை யாற்றை நீந்திக் கடந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இச்செயல் அவருடைய மனத்துணிவிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

லால்பகதூர் தமது பதினெண்ரும் அகவையில் காந்தி யடிகள் பேசிய கூட்டமொன்றுக்குச் சென்ருர். அக்கூட்டத் தில்தான் அவர் முதன் முதல் காந்தியடிகளைக் கண்டார். கூட்டத்தில் காந்தியடிகள் ஆங்கில ஆட்சியின் கொடுமை களையும், அவற்றை நீக்கவேண்டியதன் இன்றியமையாமை யையும் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினுர். அவருடைய பேச்சு லால்பகதூரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனுல், அவர் நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்டார்; அரசியலில் ஈடுபடுதற்கேற்ற காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

கி. பி. 1920ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழை யாமை இயக்கத்தைத் தொடங்கினுர். அவ்வியக்கத்தில் ஈடுபாடு கொண்ட லால்பகதூர் தம் கல்லூரிப் படிப்பை இடையிலேயே விடுத்தார்; இயக்கப் பணியில் நேரடியாகக் கலந்து கொண்டார்; அதன் காரணமாக ஓராண்டுச்

சிறைத்தண்டனையும் பெற்ருர். சிறையிலிருந்து வெளிவந்த பின் மீண்டும் கல்லூரியிற் சேர்ந்து படிக்கவேண்டுமென்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது. ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற காரணத்தால் எந்தக் கல்லூரி யிலும் அவருக்கு இடங் கிடைக்கவில்லை.

அப்போது விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வேலை யிழந்த ஆசிரியர்களுக்கு வேலை தரும் நோக்கத்தோடும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கல்வி கற்க வழி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடும் காசி நகரில் விடுதலை விரும்பிகள் சிலரால் ‘ காசி வித்தியா பீடம் ’ என்ற கல்விப் பயிற்சிக் கழகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. லால்பகதூர் அக் கல்விப் பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து பயின்று தேர்ச்சி பெற்று, ‘ சாஸ்திரி ’ என்ற பட்டத்தையும் பெற்ருர். அன்று முதல் அவர் லால்பகதூர் சாஸ்திரி என்றழைக்கப்பட்டார்.

‘ மக்கள் ஊழியர் கழகம் ’ என்ற ஓர் அமைப்பு இலாலா இலசபதிராய் அவர்களால் கி. பி. 1921 இல் அலகாபாத்தில் தோற்றுவிக்கப்பட்டது. காசி வித்தியா பீடத்தில் தேர்ச்சி பெற்ற சாஸ்திரி அவர்கள் கி. பி. 1926இல் அலகாபாத்தில் குடியேறினர். குடியேறிய அவர் திங்கள் ஒன்றுக்கு அறுபது ரூபாய் ஊதியம் பெற்றுக்கொண்டு மக்கள் ஊழியர் கழகத் தில் பணிபுரிந்தார். பிறகு அவருடைய ஊதியம் நூருக உயர்ந்தது. அங்ஙனம் பணிபுரிந்து வருகையில் அவர் 1927இல் மீர்ஜாப்பூரைச் சேர்ந்த திருவாட்டி லலிதா தேவி என்பாரைத் திருமணம் செய்துகொண்டார். அப்பொழுது அவருக்கு அகவை இருபத்து மூன்ருகும்.

கி. பி. 1930ஆம் ஆண்டு காந்தியடிகள் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர். அவ்வியக்கத்தில் லால் பகதூர் சாஸ்திரியார் கலந்துகொண்டு ‘ ஆங்கில அரசுக்கு

நில வரி தரவேண்டாம்' என்று கிராம மக்களிடம் கூறி வந்தார். அதனால், அவர் இரண்டரையாண்டுகள் சிறை வாழ்வை மேற்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது. அவருடைய வாழ்வில் ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார்.

விடுதலை யியக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட சாஸ்திரியார் அலகாபாத்து நகர மன்ற உறுப்பினராகவும், அலகாபாத்து மாவட்டக் காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளரா கவும், அதன் தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்புக்களைப் பெற்றார். மேலும், அவர் மூன்றாண்டுகள் உத்தரப் பிரதேசக் காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணி யாற்றினார். கி. பி. 1937இல் நடைபெற்ற தேர்தலில் நின்று உத்தரப் பிரதேசச் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவை யாவும் இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன் சாஸ்திரியார் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகும்.

இந்திய நாடு விடுதலை பெற்றபின் கி. பி. 1952இல் காங்கிரசுக் கட்சி பொதுத் தேர்தலில் ஈடுபட்டது. அக் காலத்தில் சாஸ்திரியார் காங்கிரசுக் கட்சியின் வெற்றிக் காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். அவருடைய ஆற்றலைக் கண்ட மாண்புமிகு நேரு, அவரைக் காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமித்தார். அவ்வாண் டிலேயே சாஸ்திரியார் பாராளுமன்ற மேலவை உறுப்பின ராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். மத்திய அரசில் போக்குவரத்து இரயில்வே அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பும் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

லால்பகதூர் சாஸ்திரியார் இரயில்வே அமைச்சராக இருந்தபொழுது தமிழ் நாட்டிலுள்ள அரியலூர் அருகில் பயங்கரமான இரயில் விபத்து ஏற்பட்டது. பாராளுமன்றத் திலே அவ்விபத்துப் பற்றிக் கடுமையான விவாதம் நடந்தது.

'இரயில்வே இலாகாவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்குச் சட்டபூர்வமான பொறுப்பு என்னையே சாரும்' என்று சொல்லி, அவர் தம் அமைச்சர் பதவியைத் துறந்தார். அச்செயல் அனைவராலும் பாராட்டப்பட்டது. அச்சமயத்தில் நேரு அவர்கள், "நேர்மைக் குணத்திலும், உன்னதமான குறிக்கோள் நெறியிலும் உயர்ந்தவர் லால்பகதூர் சாஸ்திரி" என்று அவரைப் பாராட்டிக் கூறினர்.

கி. பி. 1957இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நின்று மக்கள் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தேர்ந்தெடுக்கப்பெற்ற அவர் ஓராண்டுக் காலம் போக்குவரத்துச் செய்தித் துறை அமைச்சராக நியமிக்கப் பட்டு நன்முறையில் பணியாற்றி வந்தார். அதன் பின்பு இரண்டாண்டுகள் தொழில் வர்த்தக அமைச்சர் பதவியை ஏற்றுக் கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தார். கி. பி. 1961ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 4ஆம் நாள் இந்திய அரசின் உள்துறை அமைச்சராக ஆனார். அக்காலத்தில் அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட தொழிற் சிக்கலைத் தீர்த்து வைக்கச் சீரிய வழியைக் காட்டினர். அங்கு அசாம் மக்களுக்கும் வங்காளிகளுக்கு மிடையே சமரச உறவு நீடிக்க வழிவகை செய்தார்.

கி. பி. 1962இல் நடைபெற்ற மூன்ருவது பொதுத் தேர்தலிலும் சாஸ்திரியார் மக்கள் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரானர். கி. பி. 1963இல் அமைச்சர் பதவியைத் துறந்து கட்சிப் பணியில் ஈடுபட்டார். ஓராண்டிற்குப் பிறகு நேரு பெருமானின் விருப்பத்திற் கிணங்க இலாகா இல்லாத அமைச்சராகப் பதவி யேற்ருர். அப்போதுதான் காசுமீரத்தில் நபிகள் நாயகத்தின் புனித முடி களவு போனது. அதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தை நம் சாஸ்திரியார் அரச தந்திர முறையில் சமாளித்து அமைதியை நிலைநாட்டினர்.

கி. பி. 1964ஆம் ஆண்டு மேத் திங்கள் 27ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் ஆசியாவின் சோதி நேரு பெருமான் இயற்கையெய்தினர். 'நேருவுக்குப் பின் இந்திய நாட்டை நேரிய வழியில் நடத்திச்செல்லும் தலைவர் யார் ?' என்ற கேள்வி எல்லாருள்ளத்திலும் எழுந்தது. அக்கேள்விக்கு விடையளிக்கும் வகையில் காங்கிரசுக் கட்சியின் பெருந்தலைவர்கள் ஒன்றுகூடிச் சிந்தித்து நம் லால்பகதூர் சாஸ்திரியார் அவர்களே நேருவுக்குப்பின் இந்திய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை யேற்கும் முதலமைச்சர் பதவிக்கு உரியவர் என்று ஒருமுக மாக முடிவு செய்தனர்.

சாஸ்திரியார் முதல் அமைச்சர் பதவியை ஏற்றுத் திறம்படப் பணியாற்றி வரும் காலத்தில்தான் நமது அண்டை நாடான பாகிஸ்தானுக்கும் நம் பாரத நாட்டிற்கும் காசுமீர் உரிமை சம்பந்தமாகப் பகைமை ஏற்பட்டது. பாகிஸ்தான் பாரதத்தின்மீது போர் தொடுத்தது. அதனைக் கண்ட சாஸ்திரியார், "பொங்கியெழுவோம்; போருக்குப் புறப்படுவோம் வீரர்காள்!" என்று வீரமொழி பகர்ந்தார். பாரத வீரர்கள் பொங்கியெழுந்தனர். இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சியினரும் சாஸ்திரியாரின் செயலைப் பாராட்டி அவருக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கினர். பாரத வீரர்களின் அறிவோடு கூடிய ஆற்றல்மிகு செயல் களால் பாகிஸ்தானியர் எண்ணற்ற இராணுவத் தளவாடங் களை இழந்து பலவிடங்களில் தோல்வியடைந்தனர். நட்புணர் வோடு நாளும் வாழவேண்டிய இருநாடுகளும் பகைமை கொண்டு போரிடுதல் கண்டு உலகில் நன்னாடுகள் பல வருந்தின.

அமைதியில் நாட்டங்கொண்ட உருசிய நாட்டுத் தலைவர் கோசிசின் அமைதி காணவருமாறு இருநாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். தாஷ்கண்டு

என்ற நகரில் இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதென்று முடிவு ஏற்பட்டது. உலக அமைதியை ஏற்படுத்துவதில் பாரத நாடு என்றும் ஆர்வமுள்ளது என்பதை உலகினர் அறிந்துகொள்ளும் வகையில் நம் சாஸ்திரியார் தாஷ்கண்டு நகர் சென்றார்; பகைவனையும் நண்பனாகக் கருதும் பண்புணர்ச்சியோடு பாகிஸ்தான் அதிபர் அயூப்கானோடு பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தைகளின் பயனாகவும், உருசிய நாட்டுத் தலைவர் கோசிசின் அவர்களின் நல்லெண்ணத்தோடு கூடிய பெருமுயற்சியினாலும் இருநாடுகளுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையே 'தாஷ்கண்டு பிரகடனம்' என்று கூறப்படுகிறது. உடன் படிக்கையில் இரு நாட்டுத் தலைவர்களும் கையொப்ப மிட்டனர். இங்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற உலக நாடு களில் பல பெருமகிழ்வுற்றன. பாரத மக்களும் தம் தலைவரின் அறிவு மிகு செயலைப் பாராட்டி, அவரை நன் முறையில் வரவேற்கக் காத்திருந்தனர்.

தாஷ்கண்டு நகரில் கி. பி. 1965ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10ஆம் நாள் பாரத நாடும், பாகிஸ்தானும் அமைதி யோடு வாழ வழிகண்ட நம் சாஸ்திரியார் அன்றிரவு ஒரு மணியளவில் மாரடைப்பு நோயினால் எவரும் எதிர்பாராத வகையில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். மகத்தான வரவேற்பளித்து மகிழ்ந்த தாஷ்கண்டு மக்கள் சாஸ்தியார் மறைந்த செய்தி கேட்டு ஆருத்துயரத்தில் ஆழ்ந்தனர். உருசிய நாட்டுத் தலைவர் கோசிசின் உள்ளம் உருகிக் கண்ணீர் வடித்தார். பாரத நாட்டு மக்கள் அனைவரும் தம் தலைவரின் மறைவு கேட்டுச் சோகக் கடலில் ஆழ்ந்தனர்.

அடுத்த நாள் உருசிய நாட்டு அரசாங்க விமானம் ஒன்றில் சாஸ்திரியாரின் சடலம் இந்தியாவுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டது. அதிபர் அயூப்கானும்,உருசிய

நாட்டுத் தலைவர் கோசிசினும் அவருடைய சடலத்தைச் சுமந்துவந்து வண்டியில் வைத்தனர். வழிநெடுகிலும் தாஷ் கண்டு நகர மக்கள் கண்ணீர் வழிய நின்ற காட்சி சாஸ்திரி யாரிடம் அவர்கள் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தி யது. தம் தலைவரை மகிழ்வோடு வரவேற்கக் காத்துநின்ற பாரதநாட்டு மக்கள் விமானத்தில் வந்த அவருடைய சடலத்தைமட்டுமே கண்டு மனங்கசிந்து கண்ணீர் பெருக் கினர். அவருடைய மைந்தரும், மனைவியும் அடைந்த துன்பத்திற்கோர் அளவே இல்லை. இந்தியா வந்து சேர்ந்த சாஸ்திரியாரின் சடலம் பல நாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் இராணுவ மரியாதையோடு சுடுகாட்டில் வைத்து எரிக்கப்பட்டது. உலகம் ஒரு சமாதான வீரரை இழந்தது; இந்திய நாடு தன் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவரை இழந்தது.

சாஸ்திரியார் ஆழ்ந்த சிந்தனையும், அமைதியான தோற்றமும் உடையவராயிருந்தார்; எளிய வாழ்வை நடத் தினர்; நேர்மையின் இருப்பிடமாய் விளங்கினர்; தன்னலங் கருதாத் தலைவராய்த் திகழ்ந்தார்; 'மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது' என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் இலங்கி னர். அவர் காட்டிய வழியில் நின்று நாட்டை யுயர்த்தும் நற்பணியைச் செய்திடுவோம்.

★

2. இசைக்கலை

மக்களுடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் மிகுதியே கலையாக வெளிப்படுகின்றது. அக்கலையைப் பயன்கலை யென்றும், நுண்கலை என்றும் பிரித்துக் கூறுவர். வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை யுண்டாக்கும் கலை பயன்கலை என்று கூறப்படும். ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை போன்றவை நுண்கலை என்ற பிரிவினுள் அடங்கும். இத்தகைய கலைகள் அறுபத்து நான்கு வகைப் படும் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். 'எண்ணெண் கலையோர் வாழ்ந்த இருபெரு வீதிகள் இருந்தன' என்று சிலப்பதிகாரமும், 'ஆயகலைகள் அறுபத்து நான்கு இருந்தன' என்று சரசுவதி அந்தாதியும் கூறியுள்ளமை கொண்டு இக்கருத்தை நாம் அறிகின்றோம். நுண்கலை களில் ஒன்றாக வைத்தெண்ணப்படும் இசைக்கலையைப் பற்றி நாம் இங்கே காண்போம்.

இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது என்பது பொருளாகும். மரம், செடி, கொடி முதலிய தாவர இனங் களையும், விலங்குகளையும், மக்களையும் இசை தன் வயப்படுத் தும் ஆற்றலுடையதாகும். பிடாரன் ஊதும் மகுடியின் இசைகேட்டு நச்சுத்தன்மை வாய்ந்த பாம்பு படமெடுத்தாடு வதைக் காண்கின்றோம். வேடன் இசையில் மயங்கிய வன விலங்குகள் அவனால் விரிக்கப்பட்ட வலையில் வீழ்வதைக் காண்கின்றோம். பாகனின் குத்துக்கோலுக்கும் அடங்காது செல்லும் மதங்கொண்ட யானையும் இசைக்கு அடங்கிவிடும் இயல்புடையதாய் இருக்கக் காண்கின்றோம். பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையும் அன்னையின் இனிய தாலாட்டுப் பாடலின் இசை கேட்டு உறங்குவதை உணர் கிறோம். ஏற்றம் இறைப்பவரும், நாற்று நடுபவரும் இசைப் பாட்டில் ஈடுபட்டு எழுச்சியுடன் பணியாற்றி வருவதை நம்

நாட்டில் நாளும் கண்டு வருகிறோம். இவற்றால் இசையின் சிறப்பை நாம் இனிதுணரலாம்.

தமிழை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று மூவகைப்படுத்தி மொழிந்தனர் நம் முன்னோர். இசை, இயற்றமிழுக்கும், நாடகத் தமிழுக்கும் இன்றியமையாததாக உள்ளமையால் அதனை நடுவில் வைத்தனர்.

சங்க காலத்தில் இசையிலக்கண நூல்கள் பல தமிழில் இருந்தனவென்று நாம் சிலப்பதிகார உரையால் அறிகிறோம். அவை பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், பஞ்ச மரபு, தாள சமுத்திரம், இசை நுணுக்கம், இந்திரகாளீயம், பேரிசை, சிற்றிசை முதலியனவாம். சங்க நூல்களுள் கலித்தொகையும், பரிபாடலும் இசைத் தமிழ்ச் செய்யுள் நூல்களாகும். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் இசைத் தமிழ்ச் செய்யுள் நூலாக விளங்குவதோடு இசை யிலக்கணம் கூறும் நூலாகவும் திகழ்கிறது.

சைவசமய குரவர்களாகிய நால்வர் பாடிய தேவாரமும் திருவாசகமும், ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் அமைந்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் இடைக் காலத்தில் எழுந்த இசை நூல்களாகும். சிந்து, பள்ளு, குறவஞ்சி முதலிய பிரபந்த நூல்களும், கீர்த்தனை நூல்களும் பிற்கால இசை நூல்களாகும்.

பழங்காலத்தில் பாணர் என்ற குடியினர் பண்ணமைந்த பாடல்களைப் பாடி இசைத் தமிழை வளர்த்தனர். கூத்தரும், பொருநரும் இசைத் தமிழை வளர்த்த பெருமக்களே யாவர். இவர்கள் முடியுடை மூவேந்தர்களாலும், குறுநில மன்னர் களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தனர். திருநீலகண்ட யாழ்ப் பாணர், திருப்பாணாழ்வார் முதலியோர் இடைக் காலத்தில் இசைத் தமிழை வளர்த்தவராவர். அண்மையில் தமிழில் இசைப் பாடல்கள் இயற்றியவர்களுள் சீர்காழி அருணாசலக் கவிராயர், மேதை வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருட்டின

பாரதி, பாரதியார், பாரதிதாசன், சுத்தானந்தபாரதி, இலக்கு மணப்பிள்ளை, பெரியசாமித் தூரன், பாபநாசம் சிவன் முதலியோர் சிறந்தவராவர்.

தமிழர் இசையைக் குரலாலும், கருவிகளாலும் இசைத்தனர். குரலால் பாடுவதும், இசைக் கருவிகளால் இசைப்பதும் ஒருங்கே நிகழ்தலும் உண்டு. குரலால் இசைப்பதை வாய்ப்பாட்டு என்று கூறுகிறோம். பாட்டின் பொருள் சிதைவுறாமல் பண்ணமைக்க வேண்டும். பாடலுக் கேற்ற வகையில் அமையாத பண்ணால் பயனில்லை. இக்கருத்தை,

'பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்'

என்று வள்ளுவர் கூறியுள்ள தொடரால் நாம் உணர்கிறோம். இவ்வாறு பண்ணோடு பாடுவோர் அழுமுகங்காட்டல், புருவம் மேலேறல், உடல் அசைதல், வாய் பிளத்தல், பல்காட்டல் முதலிய குற்றங்கள் இல்லாமல் பாடவேண்டுமென்று பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இசையெழுப்பும் கருவிகள் செய்யப்படும் முறையால் நான்கு வகைப்படும். அவை தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என்பனவாம். இவையேயன்றிப் பாடுவோனுடைய கழுத்தையும் இசைக் கருவிகளில் ஒன்றாகக் கூறுவதுண்டு. அதனை மிடற்றுக் கருவி என்றழைப்பர். இங்ஙனம் பாடுவோனுடைய கழுத்தையும் இசைக் கருவிகளில் ஒன்றாகக் கூறும் மரபு தமிழில் மட்டும்தான் உண்டு என்று இசைத் திறம் அறிந்தவர் கூறுவர். உடுக்கை, பறை, மத்தளம், முரசு முதலியவை தோற்கருவிகளாகும். புல்லாங்குழல், நாதசுரம் முதலியவை துளைக்கருவிகளாகும். யாழ், வீணை முதலியவை நரம்புக் கருவிகளாகும். வெண்கலத்தால் செய்யப்பட்ட தாளவகைகள் அனைத்தும் கஞ்சக் கருவிகளாகும். இவற்றுள் குழலும், யாழும் பண்டைக் காலத்தில் மிகச் சிறந்த இசைக் கருவிகளாகக் கருதப்பட்டன.

'குழலினி தியாழினி தென்ப'

என்ற குறளின் தொடரால் இதனை அறியலாம். குழலில், கொன்றையங்குழல், முல்லையங்குழல், ஆம்பலங்குழல் எனப் பலவகைகளிருந்தன. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியில் 'கொன்றையந் தீங்குழல், முல்லையந் தீங்குழல், ஆம்பலந் தீங்குழல்' என்னும் தொடர்கள் காணப்படுகின்றன.

இனி, நரம்புக் கருவிகளில் ஒன்றாகிய யாழைப்பற்றிச் சிறிது காண்போம். யாழில் பல வகைகள் இருந்தன. அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் முதலியனவாம். பேரியாழ் இருபத்தொரு நரம்புக்களைக் கொண்டது. மகரயாழ் பத்தொன்பது நரம்புக்களையுடையது. சகோட யாழ் பதினான்கு நரம்புக்களைக் கொண்டது. செங்கோட்டியாழ் ஏழு நரம்புக்களை யுடையது. இவைகளே யன்றி ஆயிரம் நரம்புக்களைக் கொண்ட ஆதியாழ் என்பதும், வில்யாழ், சீறியாழ் என்பனவும் வழக்கில் இருந்து வந்தன என்று அறிகின்றோம். இக்காலத்தில் இசைவாணர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் வீணை வேறு, யாழ் வேறு என்பதனை,

'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்'

என்ற திருவாசகத் தொடரால் உணரலாம். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதியுள்ள 'கருணாமிர்த சாகரம்' என்ற இசை நூலாலும், விபுலானந்த அடிகளார் எழுதிய 'யாழ் நூலா'லும் யாழ்பற்றிய செய்திகளை விரிவாகவும் விளக்கமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இசைக்குப் பாடல்கள் இன்றியமையாதனவாகும். பாடலோடு பொருந்தியிராத இசையை எல்லாரும் உணர்ந்து இன்பமடைதல் இயலாது. இசை நுணுக்கம் அறிந்தார் மட்டுமே அதனை அறிந்து மகிழ்வர். இசைப் பாடல்களை எல்லா மக்களும் கேட்டின்புற வேண்டுமாயின் அப்பாடல்கள் அவரவர் தாய்மொழியில் அமைந்திருத்தலே

சாலச் சிறந்ததாகும். அப்பொழுதுதான் அவர்கள் ஒலியின்பத்தை அடைவதோடு பாடலின் கருத்தையும் அறிந்து இன்புறுவர். தற்காலத்தில் இசை யிலக்கணம் அமைந்த பிறமொழிப் பாடல்களைக் கேட்டின்புறுவாரைக் காட்டிலும் புரிந்த மொழியிலமைந்த இசைப் பாடல்களைக் கேட்டின்புறுவார் தொகை மிகுந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மேடைகளில் பிறமொழிப் பாடல்களே பாடப்பட்டு வந்தன. அவற்றால் தமிழ் மக்களிற் பெரும்பாலோர் பயனடையாமல் போயினர். இசைக்கலை வளர்ச்சியும் குன்றியது. இதனை அறிந்த பெருங்கொடை வள்ளலாகிய செட்டி நாட்டரசர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசை இயக்கம் என்ற ஒன்றைத் தோற்றுவித்து அதன் வாயிலாகத் தமிழிசை வளர்ச்சிக்கு ஆவன செய்தார். சென்னையில் தமிழிசை மன்றத்தை நிறுவினார்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிசைக்கென ஒரு பகுதியையும் அமைத்தார். அப்பெருமகனாரின் முயற்சி பாராட்டிப் போற்றத்தக்க தொன்றாகும்.

இசையின் சிறப்பை யறிந்து எல்லாரும் இசை பயில வேண்டும்; இசைக் கலையை வளர்க்க முற்படுதல் வேண்டும். சிறுவர்க்கான செந்தமிழ்ப் பாடல்களை இயற்றிய பைந்தமிழ்க் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ‘இசையமுது’ என்னும் நூலில் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ள

“ பல்கலை ஆய்ந்தும் தொழில்பல கற்றும்
பாட்டிற் சுவைகாணும் திறமையும் உற்றும்
அல்லும் பகலும் இந்நாட்டுக் குழைப்பீர்கள்
அறிவுடனும் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள் ”

என்ற அடிகளில் கூறிய கருத்தின்படி வாழ்வு நடத்துவோமாக. இசையில் ஈடுபட்டு இன்னலை மறந்து இன்பம் பெற்று வாழ்வோமாக.

★

3. தமிழ் முனிவர் திரு. வி. க.

பண்புடையாராலேயே இவ்வுலகம் அழியாமல் இன்னும் நிலைத்துள்ளது என்னும் கருத்தை வள்ளுவர் தம் நூலில் ஓரிடத்தில் கூறியுள்ளார். இம்மெய்யுரைக்கிணங்க நம் நாட்டில் வாழ்ந்த சான்றோர்கள் பலராவர். அவருள் ஒருவராக வைத்தெண்ணத்தக்கவர் தமிழ் முனிவர் திரு. வி. கலியாண சுந்தரனார் ஆவார். அவருடைய வாழ்க்கை வரலாறு செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு உயரிய பண்புகளை யுணர்த்துவதாயுள்ளமையால் அதனைப்பற்றி அறிய முற்படுவோம்.

சுந்தரனார் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள துள்ளம் என்ற ஊரில் சிவநேயச் செல்வராய் விளங்கிய விருத்தாசல முதலியாருக்கும் சின்னம்மையாருக்கும் ஆறாவது குழந்தையாகப் பிறந்தார். அவர் பிறந்தபொழுது ' ஆறாவது மகன் ஆனை கட்டி வாழ்வான் ' என்று கூடியிருந்தவர்கள் புகழ்ந்து பேசி வாழ்த்தினார்கள். கி. பி. 1883ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 29ஆம் நாள் பிறந்த இவர், இளமைக் காலத்தில் பருவத்திற்கேற்ற துடுக்கும், அஞ்சாமையும் உடையவராய் விளங்கினார். சுந்தரனார் தம் இளமைப் பருவத்தில் சிறுவர்களுடன் சேர்ந்து சடுகுடு, புள் ஆட்டம், பட்டம் விடுதல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபாடுடையவராய்த் திகழ்ந்தார். ஒருமுறை பாம்புப்பிடாரன் பிடித்த நல்ல பாம்பினை இவர் தம் காலால் மிதித்துத் தம் ஆவலை நிறைவேற்றிக்கொண்டார். மற்றொரு சமயம் கொன்றை மரத்தில் ஏறியமர்ந்திருந்தபொழுது தாயார் வருவதைக் கண்டவுடன் அம்மரத்தினின்று கீழே குதித்தார். பிறிதோர் அமயம் தந்தையாருடன் குளத்திற்கு நீராடச் சென்றபொழுது அவர் அறியா வகையில் குளத்தில் இறங்கி நீந்த முற்பட்டார். இச்செயல்கள் நம் சுந்தரனாருடைய அஞ்சாமையையும், துடுக்குத்தனத்தையும் விளக்குவனவாம்.

துள்ளம் என்ற ஊரில் வாழ்ந்த விருத்தாசல முதலியார் தம் மக்கள் கல்வியறிவு பெறவேண்டுமென்ற எண்ணத்தால் அச்சிற்றூரை விடுத்துச் சென்னை நகரையடைந்து இராயப் பேட்டைப் பகுதியில் குடியிருக்கலானார். சென்னையை யடைந்த சுந்தரனார் 'ஆரியன் பிரைமரிப் பள்ளி' என்ற தொடக்கப்பள்ளியில் கல்வி பயிலலானார். தொடக்கப் பள்ளியில் மூன்றும் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பொழுது வாழை மரம் பற்றி ஒரு கட்டுரை எழுதி, ஆசிரியர் களுடைய பாராட்டுதலையும் பரிசையும் பெற்றார்.

தொடக்கப்பள்ளியில் படித்துமுடித்த சுந்தரனார் 'வெஸ் லியன் கல்லூரி உயர்நிலைப் பள்ளி'யில் சேர்ந்து கல்வி பயில லானார். அப்பொழுது அவர் வாதநோய்க் காளாகி வீட்டில் படுக்கையாய் இருக்கவேண்டிய நிலையை அடைந் தார். அதனால், மூன்றாண்டுகள் அவர் படிப்பை நிறுத்த வேண்டிய நிலையேற்பட்டது. உடல் நலமடைந்தபின் மீண்டும் அவர் பள்ளியில் சேர்ந்து பயிலலானார். அப் பொழுது அங்கே தமிழாசிரியராய்ப் பணியாற்றிய யாழ்ப் பாணம் கதிரைவேற் பிள்ளையவர்களின் தொடர்பும், தேவ தாசு என்ற ஆசிரியரின் தொடர்பும் அவருக்கு ஏற்பட்டன. இவ்விரு பெருமக்களின் தொடர்பால் சுந்தரனார் முறையே சைவசமய உண்மைகளையும், கிறித்துவ சமய உண்மை களையும் உணர்ந்துகொண்டார். பள்ளியில் பயின்று கொண்டிருந்த காலத்தில் இராமலிங்க அடிகளார் எழுதிய அருட்பா பற்றி ஒரு வழக்கு ஏற்பட்டது. அவ்வழக்கில் தம் ஆசிரியராகிய கதிரைவேற் பிள்ளையின் சார்பில் நீதிமன்றத் தில் சான்று பகரவேண்டிய நிலை சுந்தரனாருக்கு ஏற்பட்டது. அதனால், அவர் ஆண்டுத் தேர்வில் கலந்துகொண்டு தேர்வு எழுதமுடியாமற் போய்விட்டது. அதனாலும், அவருடைய தந்தையார் எதிர்பாராத வகையில் இயற்கை யெய்தியமை யாலும் சுந்தரனார் தம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலையேற்பட்டது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்ட சுந்தரனார் வணிகமுறைக் கணக்கைப் பயின்று அத்தேர்வில் தேர்ச்சி பெற்றார். எனினும் அவருடைய உள்ளம் தமிழ் மொழியைப் பயிலவே விரும்பியது. தம் ஆசிரியராகிய கதிரைவேற் பிள்ளையிடம் பல நூல்களைப் பாடங்கேட்டார். அவரும் நச்சுக் காய்ச்சலுக்கு ஆளாகி இயற்கை எய்தினார். அதன்பின் மயிலை தணிகாசல முதலியாரிடமும், கலைக்கடல் மறைமலையடிகளாரிடமும் அணுகித் தம் தமிழறிவை வளர்த்துக்கொண்டார்.

விருத்தாசல முதலியார் இறந்தமையால் சுந்தரனாரின் குடும்பம் வறுமைக்குள்ளாகியது. அவருடைய தமையனார் உலகநாத முதலியார் அச்சுக்கூடம் ஒன்றை நடத்திவந்தார். அதன் வாயிலாகக் கிடைத்த வருவாய் போதிய அளவு இல்லாமையால் சுந்தரனார் யாதேனும் ஒரு வேலையிலமர்ந்து பொருளீட்டவேண்டிய நிலைக்கு ஆளானார். அப்பொழுது சென்னையிலுள்ள 'ஸ்பென்ஸர் கம்பெனி'யில் கணக்கராகப் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அந்த நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டே ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் நம் சுந்தரனார் நூல்களைக் கற்பதிலும், கட்டுரைகளை எழுதுவதிலும் ஈடுபட்டு வந்தார். அப்பொழுது வங்கப் பிரிவினைக் கிளர்ச்சி நாடெங்கும் நடைபெற்று வந்தது. சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் விபின் சந்திரபாலர் என்ற பெருந் தலைவர் ஆங்கிலேயரின் போக்கைக் கண்டித்து உணர்ச்சியுண்டாகுமாறு பேசினார். அப்பேச்சினை நம் சுந்தரனார் கேட்டமையாலும், அரவிந்தர் வெளியிட்டு வந்த 'வந்தே மாதரம்' என்ற செய்தித்தாளைப் படித்தமையாலும் அவருடைய உள்ளத்தில் உரிமை இயக்கப்பற்று ஏற்பட்டது. எனவே, அவர் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயரால் நடத்தப்பட்ட 'ஸ்பென்ஸர் கம்பெனி'யின் பணியிலிருந்து விலகிக்கொண்டார்.

வேலையை விடுத்தபின் சிலகாலம் வறுமைத் தொல்லை களை ஏற்று வாழவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. பின்பு தாம் பயின்ற 'வெஸ்லியன் பள்ளி'யிலேயே ஆசிரி யராகப் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆறுண்டுகள் ஆசிரியராகவிருந்து அரும்பணியாற்றினர். அவருடைய திறமையைக் கண்ட கல்வி நிலையப் பொறுப் பாளர்கள் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பை அவர்க்கு நல்கினர்கள். ஒன்றரை யாண்டுகள் அப்பணியைச் செம்மையாகச் செய்து வந்தார். அக் காலத்தில் தேனையுண்டு மயங்கும் வண்டுகளைப்போல் மாணவர்கள் தமிழ்த் தேனையுண்டு தம்மை மறந்திருக்கும் நிலையில் பாடஞ்சொல்லி வந்தார்.

இந்நிலையில் உரிமை இயக்கம் அவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அன்னி பெசண்ட் அம்மையாரைச் சிறைப்படுத்திய நிகழ்ச்சி அவருள்ளத்தைப் பெரிதும் வருத்தியது. அதனல், அவர் ஆசிரியப் பணியைத் துறந்து அரசியல் பணியை மேற்கொள்ள முடிவு செய்தார்; 'தேச பக்தன்' என்ற வெளியீட்டின் ஆசிரியராயமர்ந்து உணர்ச்சி மிகுந்த கட்டுரைகளை எழுதினர்; பின்பு 'நவசக்தி' என்ற செய்தித்தாளின் ஆசிரியராயிருந்து உரிமை வேட்கையை மக்கள் உள்ளத்தில் எழச் செய்வதற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும், சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் பாடு பட்டு வந்தார். தமிழ் நாட்டில் உள்ள ஊர்கள் பலவற் றிற்கும் சென்று அரசியல், சமயம், சமுதாயம் பற்றிய சீரிய கருத்துக்களைத் தம் சொற்பொழிவின் வாயிலாக மக்களுக் குணர்த்தி வந்தார்; அவர் பேசிய பேச்சுக் களும், எழுதிய கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுத் 'தமிழ்த் தென்றல்,' 'பைந்தமிழ்ச் சோலை' என்ற இருநூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் படிப்பவர்கள் சிறந்த உரைநடை யெழுதும் ஆற்றலைப் பெறுவர்; செந்தமிழின் இன்பத்திலே திளைப்பர்; அறவுணர்வு பெறுவர்; அருள்வழி நிற்பர்; தென்றலாக எழுந்து புயலாக மாறும் அவர் எழுத்

தாற்றலின் பெருமையை உணர்வர். அவை இன்றும் என்றும் நம் நாட்டு இளைஞர்களுக்குப் பயன்படுவனவாம்.

ஏழைகள் மிகுந்த நாடு இந்தியா. இந்நாடு உயர்வடைய வேண்டுமாயின் ஏழ்மையில் வாடும் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற வேண்டும். தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெறத் தொழிற் சங்கங்கள் தேவை. இக்கருத்துக்களை உள்ளத்திற் கொண்டிருந்த சுந்தரனார் தொழிலாளர்களின் நலன் கருதி, சென்னை மாநகரில் கி. பி. 1918ஆம் ஆண்டு சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத் தோற்றுவித்தார். இந்தியாவில் முதன்முதல் தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமை நம் சுந்தரனாரையே சாரும்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுத் தந்நலங் கருதாமல் பெருந்தொண்டாற்றி வந்த பெருந்தகையாரின் மணிவிழா தமிழ் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அதன் நினைவாக மலர் ஒன்றும் வெளியிடப் பட்டது. அறிஞர்களும், கலைஞர்களும், அரசியல் தலைவர்களும், கவிஞர்களும், தொழிலாளத் தலைவர்களும், சமயவுணர்வுடைய சான்றோர்களும் அவ்விழாவிலே கலந்து கொண்டு தமிழ் முனிவராகிய சுந்தரனாருக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தனர்; தம் நன்றியறிதலை வெளிப்படுத்திக் கொண்டனர். கவிஞர் ஒருவர் அவரைப்பற்றிப் பாடிய இன்னிசைப் பாடலின் அடிகள் பின்வருமாறு:

“தெளியார்க்கு ஒன்றை ஒளிமறை வின்றித்
தெளிவு படுத்தும் அவர்க்குள்ள திறமை
துளியேனும் பிறர்க்கு இருந்தது இல்லை
இருக்கப் போவதும் இல்லை”.

தமிழ் முனிவராகிய திரு. வி. க. அவர்களின் வாழ்க்கையைப்பற்றி அறிந்து நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் கொண்டு வீடும் நாடும் விளக்கம் பெறப் பாடுபட நாம் முனைதல் வேண்டும். அத்தகைய பணிகளைச் செய்ய இன்றைய இளைஞர் உலகம் முன்வருவதாக.

★

4. மனோன்மணீயம்

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

என்றார் கவி பாரதியார். இக்கருத்துக்கு இலக்கியமாகத் திகழ்வது பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய மனோன்மணீயம் என்ற நாடக நூலாகும். இந்நூல் ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு என்பார் எழுதிய "மறைவு வழி" என்னும் நூலைத் தழுவி இயற்றப்பட்டதாகும்.

பல்லாண்டுகட்கு முன்பு மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டைச் சீவக வழுதி என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். அவன் கள்ளங் கபடு அற்ற பளிங்கு போன்ற தூய உள்ளத்தினன்; செங்கோல் நெறி வழுவாது ஆட்சி செய்து வந்தனன். அவனுக்கு மனோன் மணி என்ற பெண் தவிர வேறு மகவு இல்லை. அவள் அழகும், அறிவும், அருங்குணமும் அமைந்தவள்; தாயற்றவள். வழுதி தன் அமைச்சன் குடிலனையே அரசியல் அலுவல்களில் நம்பி இருந்தான்.

குடிலன் அமைச்சர்க்குரிய குணங்களும், சூழ்ச்சித் திறனும் வாய்க்கப் பெற்றவன்; ஆனால், தந்நலங் கருதும் தீய நினைவுடையவன்; அரசனும் மக்களும் நம்புமாறு உண்மையுள்ள ஊழியன்போல் நடித்து வந்தான். அவன் மகனான பலதேவன் என்பவன் ஒழுக்கமற்றவன்; ஊரார் நகைக்க உடலெடுத்தவன். குடிலன் வழுதியைத் தன் விருப்பம்போல் ஆட்டுவிக்க விரும்பினான். அதற்கு மதுரையில் உள்ள அரசு ஊழியரும், மக்களும் இடையூறாக இருப்பர் என எண்ணினான். அதனால், தலைநகரைத் திருநெல்வேலிக்கு மாற்றுமாறு செய்து, புதிய கோட்டையும் கட்டுவித்தான்.

வழுதியின் குலகுருவாகிய சுந்தர முனிவரும் நாரா யணன், நடராசன் என்ற நற்குண வீரர் இருவரும் குடிலனது உட்கருத்தை உணர்ந்து, அரசனுக்கும் மனோன் மணிக்கும் குடிலனால் தீங்கு நேராவண்ணம் காத்து வந்தனர். குடிலனது வஞ்சக எண்ணத்தை அறிந்தமையால் சுந்தர முனிவர் திருநெல்வேலிக்கு வந்து, நகர் அருகில் ஆசிரமம் ஒன்றை அமைத்துத் தங்கினார். வழுதி முனிவரை அழைத்துத் தான் அமைத்த கோட்டையினைக் காண்பித்தான். முனிவர் மகிழ்வதுபோல் புன்னகை பூத்து, "அரசே, இக்கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. அதனால், இக்கோட்டைக்கும், உன் குடும்பத்திற்கும் தீங்கு நேராமல் இருக்கக் கடவுள் வழிபாடு செய்யவேண்டும். இக்கோட்டையில் ஓர் அறையினை என்பால் விடுக" என்று கூறி, அரண்மனையில் ஓர் அறையைத் தமதாக்கிக் கொண் டார்; பிறர் அறியாதவாறு கோட்டை அறைக்கும் தம் ஆசிரமத்திற்கும் மறைவு வழி அமைத்தார்.

பருவ மங்கை மனோன்மணிக்கு வாணி என்னும் நற்குண நங்கை உயிர்த் தோழியாக விளங்கினாள். அவள் நற்குணக்குன்று நடராசனை மணப்பதெனத் தன் உள்ளத்தில் முடிவு செய்திருந்தனள். ஆனால், அவளது தந்தை பணத் தாசையாலும், பதவியாசையாலும் அறிவிழந்து குடிலன் மகன் பலதேவனுக்கு மணம் முடிக்கத் துணிந்தான். வாணி அதற்கு இசையவில்லை. அவளது மனவுறுதியை வழுதி யாலும் மாற்ற முடியவில்லை. அவள் அல்லும் பகலும் மனோன்மணியுடன் இருந்து அவளைப் பாதுகாத்து வந்தாள்.

திருநெல்வேலி அரண்மனையில் மனோன்மணியும் வாணியும் மகிழ்ச்சியோடு காலங்கழித்து வந்தனர். மனோன்மணி ஒரு நாள் இரவு சேர மன்னன் புருடோத் தமனைக் கனவில் கண்டு, அவன் இன்னான் என அறியாமலே அவன்மீது அன்பு கொண்டாள். அன்று முதல் அவள் நோயினால் வாடுபவள்போல் பொலிவிழந்து

காணப்பட்டாள். இதனைத் தோழிமூலம் அறிந்த வழுதி சுந்தர முனிவரை அழைத்து மனோன்மணியின் நிலையினைக் கூறினான். தன் மூதறிவால் அனைத்தும் உணர்ந்த முனிவர், "மனோன்மணிக்கு விரைவில் மணம் முடிக்க வேண்டும்; அவளுக்கு ஏற்ற கணவன் சேர மன்னன் புருடோத்தமனே. சேரனிடம் நடராசனை அனுப்பித் திருமணம் பற்றிப் பேச ஏற்பாடு செய்க" என்று கூறினார்.

சீவகன் தன் பெண்ணின் திருமணச் செய்தி பற்றிக் குடிலனோடு கலந்து பேசினான். சேரன் மனோன்மணியை மணப்பின் தன் செல்வாக்குக் குறையும் எனக் குடிலன் எண்ணினான். தான் இதுகாறும் செய்த முயற்சி எல்லாம் வீணாகுமே என வருந்தினான். ஆயினும், அதனை வெளிக் காட்டவில்லை. "அரசே! தாங்கள் கூறிய செய்தி எனக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது. சேரன் மனோன்மணிக்கு ஏற்றவனே. மணச் செய்தியைப் பெண் வீட்டாரே முதலில் தெரிவிப்பது சரியன்று. சேர நாட்டில் உள்ள நன்செய் நாடு பண்டு பாண்டிய நாட்டைச் சார்ந்திருந்தது. அதைச் சில காலமாகத்தான் சேரன் ஆள்கிறான். நமக்கு அப் பகுதியை விட்டுவிடுமாறு தூதுவனை அனுப்புவோம். நம் படைக்கு அஞ்சிப் புருடோத்தமன் இணக்கத்திற்கு வருவான். அப்பொழுது மணச் செய்தியைக் குறிப்பால் உணர்த்தின் மறுக்கமாட்டான். இதுவே செய்யத் தக்கது" என்றான்.

குடிலன் மொழி கேட்ட சீவகன் மகிழ்ந்தான். சேர நாட்டிற்குத் தூதுவனாக முனிவர் கூறியவாறு நடராசனை அனுப்பாமல், குடிலன் மகன் பலதேவனையே அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது. குடிலன் தன் மகனிடம் சேரன் சீற்றம் கொள்ளுமாறு வன்மொழிகளைப் பேசும்படி தனித்துக் கூறி அனுப்பினான். சேரனிடம் தூது சென்ற பலதேவன், "நன்செய் நாட்டைப் பழமைபோல் பாண்டிய

மன்னனுக்கு உரிமைப்படுத்துக. இன்றேல் போருக்கு எழுக" என்றான். புருடோத்தமன் வெகுண்டு படையைத் திரட்டிப் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்தான்.

சேர மன்னன் படை கொண்டு வருவதைப் பாண்டிய மன்னன் அறிந்தான். தன் படைகளைத் திரட்டிப் போருக்கு எழுந்தான். இரு படைகளும் மோதிக் கொண்டன. சீவகனும் போரில் ஈடுபட்டனன். பலதேவனிடம் பகைகொண்ட பாண்டிய வீரன் ஒருவன் அவனை வேலால் தாக்கினான். தாக்குதலைத் தாங்காது பலதேவன் கீழே வீழ்ந்தான். பாண்டியப் படையில் குழப்பம் பெருகி வீரர்கள் சிதறுண்டு ஓடினர். சீவகன் உயிர் இழக்கும் நிலையில் அகப்பட்டுக் கொண்டான். கோட்டைக் காவலிலிருந்து கவனித்து வந்த நாராயணன் என்ற உண்மை ஊழியன் தன் வீரருடன் வந்து காப்பாற்றச் சீவகன் அரண்மனை திரும்பினான்.

நாராயணன் கோட்டைக் காவலிலிருந்து போர்க்களம் வந்ததாற்றான் கோட்டையை அழிக்கப் பகைவர்க்கு வசதி உண்டாயிற்று என்று அவன்மீது குடிலன் குற்றம் சுமத்தினான். குடிலன் மொழி கேட்ட அரசன் தன்னுயிரைக் காத்த உத்தமனான நாராயணனைத் தூக்கிலிடுமாறு கட்டளையிட்டான். ஆயினும், அரசன் உடனே சுந்தர முனிவரைப் பார்க்கச் சென்றமையால் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அவன் சிறையில் அடைக்கப்பட்டான்.

போர்களில் வெற்றியே அன்றித் தோல்வியே அறியாத சீவகன் மிகவும் வருந்தினான். சுந்தர முனிவர் சீவகனை மனோன்மணியோடு தாம் அமைத்த மறைவு வழியிலே தம் ஆசிரமம் வருமாறு வேண்டினர். பாண்டியன் தன் மகளை மட்டும் அனுப்புவதாகக் கூறினன். அங்கு வந்த குடிலன், "மணமாகாத மங்கையைத் தனித்து அனுப்பித் தங்கச் செய்வது பழிப்புக்கு இடமாகும்" என்றனன். இதனைக் கேட்ட மன்னன் கலங்கி ஒருவாறு மனம் தெளிந்தான்.

அன்றிரவே பலதேவனுக்கு அவளை மணம் முடித்து அனுப்புவதென முடிவு செய்தான். தான் கருதியவண்ணம் காரியம் நிகழ்வது கண்டு குடிலன் பெருமகிழ்வு கொண்டான்.

சீவகன் மனோன்மணியை அழைத்துத் தன் முடிவைத் தெரிவித்தான். அவள் செவிக்கு அம்மொழிகள் காய்ச்சின நாராசம்போல் இருந்தன. ஆயினும், தந்தைக்கு நேர்ந்த துன்பத்தை எண்ணி, எவ்வாறேனும் அப்பொழுது அவனைத் தேற்றுவதே கடன் எனக் கருதினாள். தன்பாடு யாதாயினும் தன்னை அடுத்தவர் நலமுற வேண்டும் என்னும் உயரிய எண்ணத்தால் வாணி நடராசனை மணக்கவும், நாராயணன் சிறையிலிருந்து விடுவிக்கப்படவும் கேட்டு அனுமதி பெற்றுக்கொண்டு தந்தையின் கருத்திற்கு இணங்குவாளாயினள்.

குடிலன் மறைவு வழியைக் கண்டறிய அவ்வழியே சென்றான். அம்மறைவு வழி கோட்டைக்கு வெளியே உள்ள சேரன் பாசறைக்கு அருகில் கொண்டு செலுத்தியது. குடிலன், "இன்று பலதேவனுக்கும் மனோன்மணிக்கும் மணம் நடைபெறும். போரில் சேரன் வென்றாலும் வென்றுவிடுவான். நான் நாடாள முடியாது. ஆதலின், புருடோத்தமனிடம் சென்று இம்மறைவு வழியைச் சொல்லலாம். அவன் இவ்வழியே அரண்மனையுட் புகுந்து பாண்டியனை அழித்துவிடுவான். நான் செய்த உதவிக்குக் கைம்மாறுகப் பாண்டிய நாட்டாட்சியை எனக்கு அளிப்பான்," என்று முடிவு செய்து சேரன் பாசறையை அணுகினான்.

புருடோத்தமன் அந் நள்ளிரவிலும் கண்ணுறங்காது போரினைப் பற்றியும், தன் கனவில் தோன்றி அன்பு கொண்ட பெண்ணைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தான். குடிலன் அவனிடம் நெருங்கித் தன் வஞ்சக எண்ணத்தைத் தெரிவித்தான். சேரன், "போரில் வெற்றி பெறுதல் மட்டும் என் நோக்கம் அன்று; உன் போன்ற

துரோகிகளை ஒழித்து மக்களைக் காப்பதே என் கொள்கை. மறைவு வழியைக் காட்டுக" என்று கூறி, அவனுக்கு விலங்கிட ஆணை பிறப்பித்தான்.

குடிலனோ, 'இடியோசை கேட்ட நாகம் போல்' நடுங்கினான்; நினைத்த கேடு தனக்கே சூழ்தலை அறிந்து வருந்தினான். மறைவு வழியை விலங்கிட்ட நிலையிலே காட்டி வந்தான். அரண்மனையில் மணவினைக்கு ஏற்ற செயல்கள் நடைபெறலாயின. பலதேவன் மனோன்மணிக்கு மாலையிடப் போகும் தருணத்தில் புருடோத்தமன் குடிலனோடு மறைவு வழியே வந்து மணவறையில் நுழைந்தான். தான் கனவில் கண்டு அன்பு கொண்ட காரிகையான மனோன்மணி அங்கு நிற்பதைக் கண்டு அவள் முன் சென்றான். மனோன்மணி தான் கனவில் கண்டு அன்பு கொண்ட புருடோத்தமனுக்கு மாலை சூட்டினாள்.

புருடோத்தமன் வழுதியிடம் குடிலனின் வஞ்சக எண்ணத்தை எடுத்துரைத்தான். குடிலன் இயல்பை சீவகன் அப்பொழுதுதான் தெளிவாக உணர்ந்து வருந்தினான். மணமக்களை முனிவரும் பாண்டியனும் வாழ்த்தினார்கள்.

இந்தக் கற்பனை வரலாறு செய்யுள் நடையிலே அமைந்த நாடக நூலாகும். இந்நாடக நூல் தோன்றிய நாள்தொட்டு அறிஞர் பலருடைய மதிப்பிற்கும் பாராட்டிற்கும் உரியதாக விளங்கி வருகின்றது. அன்று முதல் இன்று வரை இதுபோல்வது பிறிதொரு நூல் தோன்றாதிருத்தலே இதன் பெருமைக்குச் சான்றாகும். இந்நாடகத்திலே மக்கள் அறிய வேண்டிய சிறந்த பொருள்கள் பலவற்றை ஏற்ற இடங்களில் வெளிப்படையாகக் கூறியிருப்பதுடன், தத்துவப் பொருள்களை நூல் முழுவதும் உள்ளுறையாக அமைத்திருப்பது ஆசிரியரது உயர்ந்த சிந்தனையையும், அறிவின் திறனையும் புலப்படுத்தும்.

★

5. அறிவூட்டும் அஃறிணை உயிரினங்கள்

‘ அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது ’

என்றார் ஔவையார். எதனால் மானிடப் பிறவி சிறந்தது? கண்ணால் காணுதலும், காதால் கேட்டலும், மூக்கால் முகர்தலும், வாயாற் சுவைத்தலும், உடம்பால் உணர்தலுமாகிய ஐம்புல அறிவைப் பெற்றிருப்பதனாலா? அன்று. ஐம்புல நுகர்ச்சிக்கும் மேற்பட்ட ஒன்றுண்டு. அஃதியாது? அதுதான் ஆறாவது அறிவு. அஃதே பகுத்தறிவு என்றும் கூறப்படுகின்றது. பகுத்தறிவு என்பதியாது? நல்லன இவையென்றும் அல்லன இவையென்றும், நிலையானவை இவையென்றும் நிலையற்றவை இவையென்றும் பகுத்துணரும் அறிவேயாகும். அத்தகைய ஆறாவது அறிவைப் பெற்றுள்ளவர்கள் மக்களினத்தவராய் இருப்பதனாலேயே மக்கட் பிறவி சிறந்ததென்று சொல்லப்படுகின்றது.

இலக்கணம் எழுதிய தொல்காப்பியரும் தம் நூலுள்

‘ மக்கள் தாமே ஆறறி வுயிரே ’

என்று கூறிப் போந்தார். மக்களாய்ப் பிறந்தும் ஆறாவது அறிவை அடையப்பெறாதார் மாக்கள் என்று இழித்தும் பழித்தும் பேசப்படுவர். மக்களும், தேவரும், நரகரும் உயர்திணை என்றும், மற்றைய உயிர்களும் உயிரில் பொருள்களும் அஃறிணை யென்றும் பன்னூல் பயின்ற பவணந்தி முனிவர் தாம் எழுதிய நன்னூல் என்னும் இலக்கண நூலில் எடுத்துக்கூறினார். மக்கட் பிறவியினும் தாழ்ந்தன என்று கருதப்படும் அஃறிணை உயிரினங்களிற் சில, மக்களைக் காட்டிலும் சில வகைகளில் மாண்புற விளங்குவதை நம் தண்டமிழ்ப் புலவர்கள் கண்டறிந்தார்கள்; அறிந்ததோடன்றி அச் செய்திகளைத் தம் நூற்களில் அமைத்து மக்களினம் மாண்பினை அடைய வழிவகை செய்தும் உள்ளார்கள். அங்ஙனம் அறிவூட்டும் அஃறிணை உயிரினங்கள் சிலவற்றின் இயல்புகளை இக்கட்டுரையில் காண்போம்.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் குறிக் கோள் ஒன்று கொள்ளுதல் வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்வு பயனற்ற வாழ்வாகும். ஒப்பில் புகழுடை அப்பரடி களும் தம் தேவாரப் பாடலொன்றில் 'பாலனுய்க்கழிந்த நாளிலும் மெலிவொடு மூப்பு வந்து கோலனுய்க்கழிந்த நாளிலும் குறிக்கோளிலாது கெட்டேன்' என்ற கருத்தைக் கூறிக் குறிக்கோள் இல்லாத வாழ்வின் குறையைக் குறிப் பிட்டுச் சென்றுர். அத்தகைய குறிக்கோளின் பெருமையை விளக்க வந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தாம் எழுதிய மனேன்மணீயம் என்ற நாடக நூலில் ஓரறிவு உயிராகிய புல்லின் செய்கையால் உணர்த்தியுள்ளார். புல் எங்கும் முளைத்துக் கிடக்கின்றது. அது சிறிய பூங்கொத்துக்களைப் பெற்று விளங்குகின்றது. பூங்கொத்திலுள்ள மலர்களில் மகரந்தப் பொடிகள் உள்ளன. மகரந்தப் பொடிகளைக் கொண்டு அப்புல் தன் பூக்களைக் காய்களாக மாற்றிக் கொள்ளும் செயலைச் செய்துகொள்ளுகிறது. பின்பு, அது தன் விதைகளாகிய சிறுவர்களை எருமை, ஆடு, மாடு, பறவை முதலிய உயிரினங்களைப் பற்றிக்கொண்டு பல்வேறிடங்களுக்குச் செல்லுமாறு செய்கின்றது. அவ் விதைகள் பரவலாக முளைத்துச் செழித்து வளர்கின்றன. இவ்வாறு புல்லானது தன் இனத்தை வளர்த்துக் கொள்ளு கிறது. அதைப்போல மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் உயர்ந்த குறிக்கோளுடையவராயிருந்து வாழவேண்டு மென்று ஆசிரியர் கூறுகின்றுர்.

நாங்கூழ்ப் புழு என்ற ஒருவகைப் புழு உண்டு. அதனை மண்புழு என்றும் அழைப்பர். அப்புழு கீழுள்ள மண்ணை மேலே கொண்டுவந்து சேர்க்கும்; நிலத்தை நன்ருக உழுது மெழுகைவிடச் சிறந்த சேருக ஆக்கும்; விளைவிற்குப் பயன்படாத மண்ணையும் பயன்தரும் மண்ணுக மாற்றும். இதனை 'உழவனின் அரசன்' என்று பாராட்டியுள்ளார். இப்புழு தனக்குத் துன்பம்

செய்யும் எறும்பினத்திற்கும், பூச்சிகளுக்கும் நன்மையே செய்யும். பிறர் நலங்கருதி யுழைக்கும் பெருமைசால் பண்பும், குற்றம் பொறுக்கும் குணமும், பகைவனுக்கும் அருளும் இயல்பும் மக்களுக்கு வேண்டியன என்பதை இப் புழுவின் வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

எறும்புகளைப்பற்றி அறியாதார் யாருளர்? அவை மழைக்காலத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களை வேனிற் காலத்திலேயே சேமித்து வைத்துக் கொள்கின்றன. வரிசை வரிசையாய் ஒழுங்குறச் செல்லும் பழக்கமும் அவைகளிடம் விளங்கக் காண்கிறோம். எப்பொழுதும் அவை சுறுசுறுப்புடையனவாய் ஊர்ந்து செல்வதை நாம் காண்கின்றோமல்லவா? இத்தகைய எறும்பின் வாழ்வி லிருந்து எதிர்கால நோக்கமும், இடைவிடா உழைப்பும் வாழ்க்கைக்குத் தேவை என்பதை மக்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

காக்கை நாம் நாள்தோறும் காணும் பறவையாகும். காக்கை கரைந்தால் வீட்டிற்கு விருந்தினர் வருவர் என்பது நம் நாட்டு மக்களின் நம்பிக்கை. காக்கை தனக்குச் சிறிது உணவு கிடைத்தால் அதனைத் தனியே உண்ணாது; கரைந்து தன் இனத்தை அழைத்து அவற்றோடு சேர்ந்து தான் உண்ணும்.

" ஆக்கிய சோறுகொஞ்சம் சிந்திக் கிடக்கும்—காக்கை
அழைத்துத்தன் இனத்தோடு குந்திப் பொறுக்கும் "

என்று பாவேந்தர் பாரதிதாசனார் கூறியுள்ள கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. மேலும் அவர் தம் பாடலில்,

" காக்கையை ஒருபையன் கொன்றுவிட்டால்—அதைக்
காக்கைகள் அத்தனையும் கண்டு விட்டால்
கூக்குரல் இட்டபடி குந்தி வருந்தும்—அதைக்
கொன்ற பையன்கண்டுதன் நெஞ்சு வருந்தும் "

என்று சந்தநயம்படக் கூறியுள்ள செய்திகள் அறிந்து மகிழ்தற்குரியனவாம். அத்தகைய "காக்கையிடத்திலுள்ள ஒற்றுமை கண்டு வாழ்க்கை நடத்தினல் நன்மையுண்டு" என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். வையகம் தழைக்க வான்குறள் வழங்கிய வள்ளுவப் பெருந்தகையும்,

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள"

என்று கூறிப் போந்தார்.

ஒன்றுபட்டு வாழும் உயர்ந்த பண்பும், இனத்தாரைப் போற்றும் இனிய இயல்பும் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையென்பதைக் காக்கையின் செயல்கள் நமக்கு அறிவுறுத்து கின்றன.

நம் வீட்டில் வளர்க்கும் விலங்குகளில் நாயும் ஒன்று. இனத்தைப் பகைக்கும் இழிகுணம் இதனிடம் இருந்தாலும் நன்றியறிதல் என்ற நல்ல குணமும் இருக்கக் காண்கிறோம். நாய், தன்னைக் காத்த தலைவன் வெகுண்டு வேலினைத் தன் மீது வீசினலும் அவனை வெறுக்காது, அவன் அதற்குமுன் செய்த நலத்தையே எண்ணி வாலைக் குழைத்துத் தன் நன்றியறிதலைத் தெரிவிக்கும் என்றும், அத்தகைய

"நாயனையார் கேண்மையைக் கொளல் வேண்டும்"

என்றும் நாலடியார் நமக்கறிவிக்கின்றது. செய்ந்நன்றி மறவாச் சீரிய பண்பு மக்களுக்கு வேண்டுமென்பதை நாயின் செய்கை உணர்த்துகின்றது.

காட்டில் வாழும் விலங்கினங்களில் கொடுமை மிக்கது புலியாகும். அது மானவுணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய் இலங்குகின்றது. புலி தன்னல் அடித்து வீழ்த்தப்பட்ட யானையானது தனக்கு இடப்புறத்தில் வீழ்ந்தால் அதனை

உண்ணுதல் இழுக்கென்று நினைத்து உண்ணாது இறக்கும் உயர்ந்த மானவுணர்ச்சி யுடையது. இக்கருத்தை,

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்"

என்ற நாலடியார்ப் பாடலின் அடிகள் நனி விளக்குகின்றன. மறப்புலியைப்போல் மானவுணர்வோடு மக்கள் வாழவேண்டுமென்று ஆசிரியர் உணர்த்துகின்றார்.

மேற்கூறிய அஃறிணை உயிரினங்களின் நல்லியல்புகளை யுணர்ந்து நம் வாழ்க்கையை நன்முறையில் அமைத்துக் கொள்வோமாக.

6. ஊர்தி கண்ட உழைப்பாளர்கள்

விரிந்து பரந்து கிடக்கும் உலகம் இன்று சுருங்கிய தாய்க் காட்சியளிக்கக் காரணம் விஞ்ஞான வளர்ச்சியே யாகும். எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணிய உள்ளம் படைத்த விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் பலவாம். நினைத்த அளவில் நெடுந்தொலைவு சென்று திரும்புவதற்குப் பயன்படும் கருவியாகிய ஆகாய விமானம் அவற்றுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆகாய விமானத்தின் பயனை அறியாதார் இக்காலத்தில் யாருளர்? நாட்டுத் தலைவர்கள் பலர், குறித்த காலத்தில் பல நாடுகளுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்து வருவதற்கும், உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு விரைந்து சென்று திரும்புவதற்கும் தற்காலத்தில் ஆகாய விமானம் பயன்பட்டு வருவதை நாம் காண்கிறோம். இங்ஙனம் இன்றைய வாழ்விற்குப் பெரிதும் பயன்படும் ஆகாய விமானம் என்னும் வியத்தகு கருவியைக் கண்டு பிடித்த வரலாற்றை நம் நாட்டு இளைஞர்கள் அறிந்து கொள்ளுதல் பயனுடைய செயலாகும்.

நம் பழந்தமிழ் இலக்கியங்கள் சிலவற்றில் விண்ணில் இயங்கிய ஊர்திகளைப் பற்றிய செய்திகளைக் காண்கின்றோம். கண்ணகியின் கதையை அறியாதார் தமிழகத்தில் இன்று எவரும் இரார். அம்மாதரசியின் கதையைப்பற்றி இளங்கோவடிகளால் எழுதப்பட்ட நூல் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியமாகும். அக்காப்பியத்தில் கண்ணகியின் இறுதிக் காலத்தைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர்,

"வாடா மாமலர் மாரிபெய் தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழல் கண்ணகி தானென்"

என்று கூறியுள்ளார். இத்தொடர்களில் அவள் கோவலனோடு வானவூர்தியில் ஏறி வானகம் சென்றனள் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. திருத்தக்க தேவர் எழுதிய சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தில் விசையை என்பாள் மயிற்பொறி யொன்றில் அமர்ந்து விண்வழியே சென்றாள் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இவையனைத்தும் பண்டைத் தமிழிலக்கியங்களில் காணப்பெறும் செய்திகளாகும். அத்தகைய ஊர்திகளை நம் நாட்டில் காணும் நற்பேறு சிலவாண்டுகளுக்குமுன் வரை நமக்குக் கிட்டாது போயிற்று.

தற்காலத்தில் நாட்டைப் பாதுகாக்கும் படைகளை முக்கூறு படுத்தியுள்ளனர். ஒன்று தரைப்படை ; மற்றொன்று கப்பற்படை ; பிறிதொன்று விமானப்படை. நம் நாட்டு விமானப்படையினர் செய்த வீரமிகு செயல்களை அண்மையில் நம் நாட்டிற்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற போரினால் அறிந்தோம். அவ் விமானத்தைக் கண்டுபிடித்த நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துவோம்.

அறிவியல் வளர்ச்சிபெற்று விளங்கும் அமெரிக்க நாட்டிலே மில்வில்லி என்னும் நகரில் இரைட் என்ற பெருமகனாருக்கு ஆண் மக்கள் இருவர் பிறந்தனர். ஒருவர் பெயர் வில்பர்; மற்றொருவர் பெயர் ஓர்வில். இருவரையும் இணைத்து இன்றைய உலகம் இரைட் சகோதரர்கள் என்றழைக்கின்றது. அவர்களுடைய தந்தையார் ஆங்கில நாட்டைச் சார்ந்தவர். தாயார் செருமானியர். பெற்றோர் இருவரும் தம் மக்கள் இருவரையும் கண்ணெனப் போற்றி வளர்த்தனர்; தம் மக்கள் அவையத்து முந்தியிருக்கும் நிலையை ஏற்படுத்த விரும்பினர். வில்பரும், ஓர்விலும் இளமை முதற்கொண்டே ஆழ்ந்த சிந்தனையும், அயரா உழைப்பும், சமயப்பற்றும், விளையாட்டில் விருப்பமும் உடையவராய் விளங்கினர். பள்ளிப் பருவத்திலேயே அவ்விருவரும் ஆராய்ச்சியறிவு மிக்கவராய் விளங்கினர்.

பள்ளிப்படிப்பை முடித்தவுடன் உடன்பிறந்தார் இருவரும் சேர்ந்து செய்தித்தாள் ஒன்றை நடத்த முற்பட்டனர். 'மேற்குப் பகுதிச் செய்திகள்' என்பது அவர்கள் தொடங்கிய தாளின் பெயராகும். வில்பர் செய்தித்தாளுக்கு வேண்டிய கட்டுரைகளை எழுதிவந்தார். ஓர்வில் அக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் செயலிலும், செய்தித்தாளுக்கு விளம்பரம் சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டார். இத்தொழில் சிறிது காலம் நடந்தது.

பின்னர், இவர்கள் ஈருருளி வண்டிக் கடையொன்று வைத்தனர். அக்காலத்தில் ஈருருளி வண்டியின் சக்கரங்களில் கெட்டியான இரப்பர் வளையங்களைப் பொருத்தியிருந்தனர். இவர்கள் அவற்றிற்குப் பதிலாகக் காற்றடித்த பலூன் வளையங்களை வண்டியின் சக்கரங்களில் பொருத்திப் பார்த்தனர். இப்புதிய அமைப்பைக் கொண்ட கருவியை மக்கள் பெரிதும் விரும்பினர். அத்தகைய வண்டிகளைச் செய்து விற்பனை செய்து இருவரும் பொருள் திரட்டினர்.

இவ்வாறு ஈருருளி வண்டிகளைச் செய்து வாழ்ந்துவந்த காலத்தில் செருமானிய அறிஞர் ஒட்டோலிலியந்தால் என்பவர் எழுதிய கட்டுரையொன்றைச் செய்தித்தாளில் படிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. அக்கட்டுரையில் அவர் தாம் கண்டுபிடித்த 'கிளைடர்' என்று சொல்லப்படும் இயந்திரமின்றி வானத்தில் பறக்கும் கருவியைப்பற்றி எழுதியிருந்தார். அக்கட்டுரையைப் படித்த உடன்பிறந்தார் இருவரும் தாமும் அத்தகைய கருவியொன்றைச் செய்து பார்க்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். இம்முடிவே அவர்களுடைய ஆராய்ச்சிக்கு வித்திட்டது என்று கூறலாம்.

பிரெஞ்சு நாட்டில் தோன்றிய உடன்பிறந்தார் இருவர் கி. பி. 1783ஆம் ஆண்டு வெப்பமான காற்று நிறைத்த

பையின் துணையால் தரையிலிருந்து வானத்தில் எழும்பிச் சென்று மீண்டனர் என்ற செய்தியொன்றும் வெளியானது. இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற வில்பரும், ஓர்விலும் ஊக்கமடைந்தனர்; தன்னம்பிக்கையோடு ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர்.

ஆராய்ச்சியின் முடிவாக அவர்கள் காற்றினும் மிகுந்த எடையுள்ள பொருள் எதுவும் விண்ணிலே பறந்து செல்ல இயலாதெனவும், அங்ஙனம் பறக்க வேண்டுமாயின் காற்றின் எடைக்கும் பறக்கும் பொருளின் எடைக்கும் இடையே ஒரு சமநிலை உண்டாக்கப்படுதல் வேண்டும் மெனவும் உணர்ந்தனர். காற்றின் அமுக்கநிலை அளவானது பறக்கும் இயந்திரத்தின் இருபுறச் சிறகுகளிலும் சமமாக இருந்தால்தான் அவ்வியந்திரம் விண்ணிலே பறந்து செல்ல இயலுமெனவும் அவர்கள் கண்டறிந்தனர்.

ஒருசமயம் வில்பர் தாம்செய்த ஈருருளி வண்டியின் சக்கரங்களில் பொருத்துவதற்குரிய இரப்பர் வளையத்தை, அது வைக்கப்பட்டிருந்த காகிதப் பெட்டியிலிருந்து எடுத்தார். தம் இரு கைகளாலும் அப்பெட்டியைத் திறக்க முற்பட்டபொழுது அவர் ஒரு புதிய உண்மையைக் கண்டு பிடித்தார். உடனே உடன்பிறந்தார் இருவரும் சேர்ந்து ஒரு பட்டத்தைச் செய்து தரையிலிருந்து அதற்கு ஒரு பிடிப்பினை அமைத்துப் பறக்கச் செய்து பார்க்க விரும்பினர். அங்ஙனம் விரும்பிய அவர்கள் சுமார் 2 மீ. நீளமுள்ள சிறகுகளை அப்பட்டத்தின் இருபுறங்களிலும் அமைத்தனர். மெல்லிய கயிறுகளை அப்பட்டத்தின் இருபுறங்களிலும் கட்டினர். அக் கயிறுகளுள் ஒன்றைக் கீழே இழுப்பதாலும், மற்றொன்றைத் தளர்த்தி விடுவதாலும் அப்பட்டத்தின் இரு சிறகுகளும் சமநிலையடைந்து போதுமான உயரத்தில் பறக்கமுடியுமென்று நம்பினர்; அம் முயற்சியில் வெற்றியும் கண்டனர்.

பட்டத்தைப் பறக்கவிடும் முயற்சியில் வெற்றிகண்ட இருவரும் 'கிளைடர்' என்னும் கருவியொன்றைச் செய்தனர். அதனை முதன்முதல் அமெரிக்காவிலுள்ள வட கரோலினாவில் அமைந்த மணற்பரப்பின்மீது நின்று கொண்டு பறக்கவிட்டனர். பருவ நிலையும் அவர்களுக்கு உறுதுணை புரிந்தது. முதலில் கயிறுகள் கட்டப்பட்ட 'கிளைடர்' என்னும் கருவியைப் பட்டத்தைப்போலவே மேலே பறக்க விட்டனர். பின்பு அக்கருவியின் நடுவில் இருவரும் அமர்ந்துகொண்டு பூமிக்குமேல் சுமார் ஒரு மீட்டர் உயரத்தில் மணிக்குச் சுமார் 23 கிலோ மீட்டர் வேகத்தில் சிறிது நேர அளவு பறந்தனர்.

'கிளைடர்' என்னும் கருவியில் அமர்ந்து பறக்கும் முதன் முயற்சியில் வெற்றிகண்ட இருவரும் மேலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். புதிய 'கிளைடர்' ஒன்றைச் செய்தனர்; அதன் இருபுறமும் உள்ள சிறகுகளில் பல மாற்றங்களைச் செய்தனர்; அக்கருவியின் பின்புறத்தில் அசைவுள்ள வால் ஒன்றினைப் பொருத்தினர்; பின்பு அக் கருவியைப் பறக்கவிட்டு வெற்றிகண்டனர். இறுதியாக அக்கருவியை மின்விசையால் செலுத்திப் பார்க்க வேண்டுமென்று விரும்பினர். இருவரும் உந்துவிசையால் இயங்கும் இயந்திரத்தினால் மின்விசையை உண்டாக்கி, அதன் துணை கொண்டு தாம் செய்த கருவியை இயக்கினர். உந்துவிசையால் இயங்கிய இயந்திரமே பிறகு பெட்ரோல் எண்ணெயால் இயங்கும் இயந்திரமாக மாறியது. இங்ஙனம் அவர்கள் தொடர்ந்து செய்துவந்த ஆராய்ச்சிகளின் பயனாகத் திருந்திய அமைப்புக்களையுடைய வானவூர்தியொன்றைக் கி. பி. 1903ஆம் ஆண்டில் கண்டுபிடித்தனர். அப்பொழுது வில்பருக்கு வயது முப்பத்தாறு. ஓர்விலுக்கு வயது முப்பத்திரண்டு.

இவ்வாறு அவர்கள் முயன்று செய்த கருவியானது பருவநிலைகளால் பாதிக்கப்படும் நிலையில் இருந்தது. ஒரு

முறை அக்கருவி மணிக்கு 116 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்துகொண்டிருந்தபொழுது புயற்காற்றில் சிக்கி வெடித்து வீழ்ந்தது. இச்செயலால் அவர்கள் மனத் தளர்ச்சி அடையவில்லை. பலவகையான சோதனைகளை நிகழ்த்தி அக்கருவி பருவநிலைகளால் பாதிக்கப்படாத நிலையைக் கண்டறிந்து அக்கருவியைச் செப்பம் செய்தனர். செப்பஞ்செய்த கருவியில் உடன்பிறந்தார் இருவரும் ஏறி யமர்ந்து 59 வினாடிகளில் 260 மீட்டர் உயரம் பறந்துசென்று மீண்டனர்.

தம்முடைய வெற்றியைப்பற்றி இரைட் சகோதரர்கள் செய்தித்தாள்களுக்கு அறிவித்தனர். தொடக்கத்தில் நம்ப மறுத்த செய்தித்தாள் ஆசிரியர்கள் அவர்களுடைய ஆற்றலை நேரில் கண்டுணர்ந்து போற்றத் தலைப்பட்டார்கள். தாங்கள் கண்டுபிடித்த கருவியைச் செய்யும் தொழிற்சாலை யொன்றை அமைக்க அவர்கள் விரும்பினர். தொடக் கத்தில் அமெரிக்க நாட்டில் அவர்களுக்கு ஆதரவு கிடைக்க வில்லை. எனவே பிரெஞ்சு நாட்டிலும், செருமானிய நாட் டிலும் அக்கருவியைச் செய்யும் தொழிற்சாலைகளை அமைக்கலாயினர்; பிறகு அமெரிக்காவில் "டேய்ட்டன்" என்ற நகரில் ஒரு தொழிற்சாலையை நிறுவினர்; கருவியை இயக்கும் முறைகளைச் சொல்லித் தருவதற்காகப் பயிற்சிப் பள்ளிகளையும் நிறுவினர்; உலக மக்கள் தங்களுடைய அறிவாற்றலை உணரும்படியும் செய்தனர்.

வாழ்வின் இறுதிவரையிலும் உடன்பிறந்தார் இருவரும் திருமணம் செய்துகொள்ளாமலேயே இணைந்து வாழ்ந்தனர். வியத்தகு கருவியைக் கண்டுபிடித்து அழியாப் புகழ்பெற்ற அவர்களின் வாழ்க்கை நமக்கு ஒருபடிப்பினையாக விளங்கும் என்பதை மறுப்பார் எவரே? வாழ்க அவர்தம் புகழ்! வளர்க விஞ்ஞானக் கலை!

7. குளிர் தூங்கும் குற்றாலம்

(இன்பச் செலவு)

பள்ளியில் பயிலும் மாணவர்கள் நூலறிவு பெறுத லோடு உலகியலறிவையும் பெறுதல் வேண்டும். உலகிய லறிவைப் பெறுதற்குச் சுற்றுப் பயணமும், ஆய்வுப் பய ணமும், இன்பச் செலவும் துணை புரிகின்றன. ஒரே வகையான தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்துவோர் தம் வாழ்வில் சலிப்பு ஏற்படாமலிருக்கும்பொருட்டு ஓய்வு கிடைக்கும் காலங்களில் இன்பப் பயணத்தை மேற்கொள் கிறார்கள். அதனால் சலிப்பு நீங்கிப் புதிய உணர்வும் எழுச்சி யும் பெறுகிறார்கள். இவ்வாறு எழுச்சியும் உணர்வும் பெறத்தக்க இன்பச் செலவு இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களைக் காணும் வகையில் அமைதல் யாவரும் விரும் பத்தக்கதொன்றாகும். அத்தகைய இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களுள் ஒன்றாகிய குளிர்தூங்கும் குற்றாலத் திற்குச் சென்றுவந்த இன்பச் செலவு ஒன்றினைப் பற்றி ஈண்டு எடுத்தியம்ப முற்படுவோம்.

*　　　*　　　*

தமிழ்நாட்டில் தொழில்வளம் பெருகி விளங்கிடும் கோவை மாநகரில் உள்ள சிறந்த பள்ளியில் பயிலும் மாண வர்களாகிய நாங்கள், ஆசிரியர் இருவர் துணையுடன் எங்கள் பள்ளிக்குரிய பேருந்துவண்டியில் ஏறிச் சென்றோம். ஒரு நாள் காலை புறப்பட்ட நாங்கள் வழியில் பழனி, திண்டுக்கல் ஆகிய பதிகளில் தங்கி, முறையே அவ்விடங்களில் அமைந் துள்ள கோயிலையும், கோட்டையையும் கண்டு மகிழ்ந் தோம். மாலைப் பொழுதளவில் மதுரையை அடைந்தோம். மதுரை நகரையடையும் வேளையில் இளந்தென்றல் இனிமை யாக வீசியது.

“பொதியத் தென்றல் போல அன்றி
மதுரைத் தென்றல் வந்தது காணீர்”

என்று இளங்கோவடிகள் கூறிய சிலப்பதிகாரத் தொடரின் கருத்தை எங்கள் தமிழாசிரியர் நினைவுபடுத்தினார்.

அன்றிரவு மதுரைப் பதியில் தங்கினேம். அடுத்தநாள் விடியற்காலை புறப்பட்டுத் திருமங்கலம், இராசபாளையம் முதலிய ஊர்களையெல்லாம் கண்டுகொண்டே சென்ருேம். வெயிலின் கொடுமையால் வருந்திய மாணவர்களிற் பலர் இடையிடையே இளநீர் பருகியும், வெள்ளரிக்காயை வாங்கி யுண்டும் தங்கள் நீர் வேட்கையைத் தணித்துக் கொண் டனர். நண்பகல் பன்னிரண்டு மணியளவில் எங்கள் பேருந்துவண்டி தென்காசி என்னும் ஊரையடைந்தது.

தென்காசியிலிருந்து குற்ருலம் 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. தென்காசியிலிருந்து குற்ருலம் வரை ஆலமரங்களும், பிற நிழல்தரும் மரங்களும் சாலையின் இரு மருங்கிலும் அமைந்து பகலவனின் கதிர்கள் உள்ளே நுழையாதவாறு அடர்ந்து தழைத்து நிழல் தருகின்றன. அம்மரப் பந்தலின்கீழ் எங்கள் பேருந்துவண்டி சென்றது. வழியில் வெயிலின் கொடுமையால் வாடிச் சோர்வடைந் திருந்த அனைவரும் மரநிழலையடைந்ததும் சோர்வு நீங்கிச் சுறுசுறுப்படைந்தோம். கனலில் நின்றவர் புனலில் குதித்தது போன்ற ஒரு நிலை கண்டதாகக் கவிஞர் ஒருவர் அச்சாலை யின் இயல்பைப் பற்றிக் கூறிய கருத்தை ஆசிரியர் எடுத்துக்கூற அதனைக் கேட்டுக்கொண்டே குற்ருலப் பதியை அடைந்தோம்.

அங்கு வெளியூர்களிலிருந்து வருபவர்கள் தங்குவதற் கேற்ற அறைகளைக் கொண்ட விடுதிகள் பல உள்ளன. சிறு குடில்களும், பெரிய சத்திரங்களும், எழில்மிகு வள மனைகளும் அங்கு உள்ளன. விடுதியொன்றில் நாங்கள் இரண்டு நாட்கள் தங்கினேம்.

குற்ருலப் பதி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒருபகுதி யாகிய பொதிய மலையைச் சார்ந்த திரிகூட மலையின் அடி வாரத்தில் அமைந்துள்ளது. மூன்று சிகரங்கள் வரிசையாய் இருப்பதால் இம்மலை திரிகூடமலை என்ற பெயரைப்

பெற்றது. இப்பழம் பதிக்குப் பெருமையையும் அழகையும் கொடுத்துக் கொண்டிருப்பன இங்குள்ள மலையும், அருவிகளுமே யாகும்.

இம்மலையில் தோன்றி ஓடிவரும் ஆறு சித்திரா நதி என்றழைக்கப்படுகின்றது. சித்திரா நதி, குற்றாலத்தில் இருந்து தென்மேற்கு மூலையில் ஏறத்தாழ 32 கி. மீட்டர் தொலைவில் அமைந்த பாறைகளிடையே இருந்து தோன்றுவதாக அங்குள்ளவர்கள் கூறினார்கள். பாறைகள் உள்ள அவ்விடம் மரஞ்செடி கொடிகள் அடர்ந்து காணப்படுவதால் அங்கு எவரும் செல்வதில்லை. இதுபற்றியே குற்றாலக் குறவஞ்சி பாடிய ஆசிரியரும்,

‘ ஞானிகளும் அறியார் சித்திரா நதியின் மூலம் ’

என்று கூறியதாக எங்கள் ஆசிரியர் எடுத்தியம்பிய பகுதி நினைவிற்கு வந்தது.

மலையிடையே வரும் சித்திரா நதி பலவிடங்களில் அருவியாய் வீழ்ந்தோடி வருகின்றது. குற்றாலப் பதியில் இருந்து சுமார் 10 கி. மீ. தொலைவில் ஓர் அருவி ஓடுகின்றது. அது ‘ தேனருவி ’ என்றழைக்கப்படுகின்றது. அவ்விடத்தில் தேன் கூடுகள் மிகுதியாயிருப்பதாலும், அக்கூடுகளில் இருந்து தேன் துளிகள் இவ்வருவியில் சிந்துவதாலும் அப்பெயர் பெற்றது என்று கூறுகின்றனர். இத்தேனருவியின் துறையில் ஒரு சிவலிங்கம் காணப்படுகின்றது. சிவலிங்கத்தின் அருகில் வீழ்ந்தோடிவரும் இந்த அருவியைச் ‘ சிவமது கங்கை ’ யென்று சமயச் சார்புடையோர் அழைக்கின்றனர்.

சித்திரா நதி, தேனருவித் துறையிலிருந்து மலை வழியே வந்து சண்பகாடவி என்னுமிடத்தில் மற்றோர் அருவியாய் வீழ்கிறது. இது சண்பக அருவியென்றும், சண்பகாதேவி யென்றும் கூறப்படுகின்றது. இவ்விடத்தில் சண்பக மரங்கள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. சண்பக அருவியில் நீராடும் துறையொன்றுள்ளது. இத்துறையின்

அருகில் குகையொன்று காணப்படுகின்றது. இக்குகையில் முனிவர் பலர் வாழ்ந்ததாகக் கூறுவர்.

மலையிடையே ஓடிவரும் சித்திரா நதி மற்றுமோரிடத்தில் குழிவான பாறையில் விழுந்து தங்கிப் பிறகு தரையில் விழுகிறது. அங்ஙனம் குழிவான பாறையில் விழுந்து தங்கும் இடமே ‘பொங்குமாகடல்’ என்றழைக்கப்படுகின்றது. இங்கு விழும் அருவியை ‘மேலருவி’ என்று அழைக்கின்றனர். அங்கிருந்து தரையில் விழும் அருவியே கீழருவியென்றும், வடவருவியென்றும், குற்றால நீர்வீழ்ச்சி என்றும் போற்றிப் பாராட்டப்படுகிறது.

இந்த அருவி வீழும் இடம் பாறைகளாலான சமநிலப் பரப்பினையுடையதாய் விளங்குகின்றது. அங்கு மக்கள் சென்று அச்சமின்றி நீராடுதற்கேற்ற வகையில் பல இரும்புக் கம்பிகள் நடப்பெற்றுள்ளன. நீராடச் செல்வோர் தலையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு செல்கின்றனர்; சென்று அருவியின்கீழ் நிற்கின்றனர். சில வினாடிகளில் எண்ணெய் முழுவதும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகின்றது. சிகைக்காய்ப் பொடியை அங்கு நீராடுவோர் எவரும் பயன்படுத்துவது இல்லை. இவ்வருவி நீர், மலையிடையேயுள்ள பச்சிலை மூலிகைகளில் படிந்து வருகின்றமையால் அந்நீரில் நீராடுவோர் உடல்நலம் பெறுகின்றனர். அருவி வீழும்போது எழும் நீர்த்திவலைகளிடையே பகலவனுடைய ஒளி புகும்பொழுது வானவில்லில் காணப்படும் வண்ணங்கள் பலவும் தோன்றுங் காட்சி கண்ணிற்கு விருந்தாய் அமைந்துள்ளது. கோடையின் கொடுமையால் வாடி வருபவரின் உடல் வெப்பத்தைத் தணித்து உடல்நலம் தந்து உணர்ச்சியூட்டும் இவ்வருவியைப் போன்றதோர் அருவி வேறொன்றில்லை யென்று வெளிநாட்டாரும் இதன் சிறப்பை வியந்து பாராட்டியுள்ளனர். வைகாசி, ஆனி, ஆடி மாதங்களிலேயே இங்கு நீராடுவோர் மிகுதியாக வருகின்றனர்.

இவ்வருவிக்கு மேற்கே 'ஐந்தருவி' என்ற ஓர் அருவி யுள்ளது. ஐந்து பிரிவுகளாகப் பிரிந்து அவ்வருவி வீழ்கின்ற மையால் அப்பெயர் பெற்று விளங்குகின்றது. இந்த அருவி யிலும் சிலர் சென்று நீராடுகின்றனர். இங்குப் போதிய அளவு வசதிகள் இல்லை.

குற்ருல நீர்வீழ்ச்சியின் அருகில் கூத்தப்பெருமானின் கோயில் ஒன்றுள்ளது. அப்பெருமானை ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், மணிவாசகரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

"குற்ருலத் துறை கூத்தனன்றி நமக்கு
உற்ருர் எவருமில்லை"

என்று நாவுக்கரசர் அருளிச் செய்துள்ளார். தேவாரத்தில் மற்ருேரிடத்தில்,

"கூதல் மாரி நுண்டுளி தூங்கும் குற்ருலம்"

என்று கூறப்பட்டுள்ளது. குற்ருலக் குறவஞ்சி என்ற நூலும், குற்ருலத் தலபுராணம் என்ற நூலும் குற்ருலப் பதியின் பெருமையை விளக்கிக் கூற எழுந்த நூல்களாகும். இவையனைத்தையும் எங்கள் ஆசிரியர்கள் எடுத்துக் கூற அவற்றைக் கேட்டு மகிழ்ந்தோம்.

இத்தகைய இயற்கைக் காட்சிகளும், பாவலர்கள் தம் நூல்களில் பாராட்டிக் கூறியுள்ள சிறப்பும் அமைந்த குற்ருலத்தில் நாங்கள் தங்கியிருந்த இரண்டு நாட்களையும் வாழ்க்கையில் மறக்கமுடியாத நாட்களாகவே கருது கின்ருேம். "இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களைக் காணலும், கண்டு இயற்கையில் ஈடுபடுதலும், இயற்கை யோடு இயைந்து வாழ்தலுமே வாழ்வில் இன்பமும் அமைதியும் தருவன," என்று தமிழ் முனிவர் திரு. வி. க. கூறிய அனுபவ உரைகளின் உண்மையை உணரும் வாய்ப்பு இப்பயணத்தால் எங்களுக்கு ஏற்பட்டது.

---

8. ஆக்கல் அரிது

[வரலாறு தழுவிய கற்பனை நாடகம்]

காட்சி 1

[மகத நாட்டு மன்னன் அசோகனது அவை—கலிங்கப்போரின் வெற்றிவிழாக் கொண்டாடப்படும் வேளை—அமைச்சர், புலவர், வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்த வீரர்கள், பொது மக்கள் பலரும் அவ்வவையில் குழுமியுள்ளனர்—அசோக மன்னன் அவையில் நுழைகின்றான்.]

அமைச்சர் : மகத நாட்டு மாமன்னர் !

அவையோர் : வாழ்க! வாழ்க!!

சேனைத்தலைவர் : கலிங்கம் வென்ற காவலர் !

அவையோர் : வாழ்க ! வாழ்க !

[அசோகன் அரியாசனத்தில் அமர்கின்றான்.]

அசோகன் : அவையோர்களே ! கலிங்கப் போரிலே ஆண்மைத்திறன் காட்டிய வீரர்களே! கலிங்கரை வென்று களப்புகழ் கொண்டு களிப்புடன் விளங்கும் காளையர்களே ! கலிங்கப் போர் உங்கள் வாளுக்கும், தோளுக்கும் நல்லதொரு வாய்ப்பளித்தது; உங்கள் ஒப்பிலா வீரத்தை மேலும் உயர்த்தியது. நமது வீரத்தை நகைத்தவர்களை நீங்கள் நாணச் செய்தீர்கள்! எதிர்த்தவர்களை இயமனுக்கு விருந்தாக அளித்தீர்கள் ! வெற்றிக் கொடியை நாட்டி என்னை வீறுகொள்ளச் செய்த உங்கள் எல்லாருக்கும் என் நன்றி. இருப்பினும், ஏனைய பகுதிகளிலும் மகதத்தின் பெரும் புகழ் பரவ

வேண்டும். இவ் வெற்றி விழா நாளில் என் விருப்பம் அஃதே.

[வீரர்கள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கின்றனர்.]

அமைச்சரே! அசோகரின் வீரகாவியமாம் கலிங்க வெற்றியைத் தம் வாளாலும், தோளாலும், வேலாலும் எழுதி முடித்த வீரர்கட்குப் பரிசு வழங்கலாம்.

அமைச்சர் : மகதத்தின் மானங்காக்க மாவீரங் காட்டிய மறவர்களே! வீரத்தின் உறைவிடமாம், வெற்றியின் பிறப்பிடமாம் மகதத்தின் புகழைப் பன்மடங்கு உயர்த்திய போர் வீரர்களே! வாழ்க உங்கள் வல்லமை! வளர்க உங்கள் புகழ்!!

[பரிசில் பெறத் தகுதியுள்ளோர் பட்டியலை அமைச்சர் படிக்கின்றார்.]

அமை : மலைக்கூட்டமென வந்த மாபெரும் யானைகளை நிலை குலையச் செய்த வீரர்கள் அவர்கள்...

மன்னன் : யானை ஒன்றும், அஃது உண்ணுவதற்குரிய உணவிற்காக ஐந்து காணி நிலமும் அவர்கட்கு அளிக்கின்றோம்.

அமை : காற்றினும் கடுகிச் செல்லும் குதிரைமீது ஏறி எதிரிகளை அழித்த இணையற்ற வீரர்கள் இவர்கள்......

மன்னன் : மறம் மிக்க பரிகளையும், முத்தாரங்களையும் இவர்கட்கு நல்குகின்றோம்.

அமை : வாள் வீச்சால் எதிரிகளின் வன்மையைக் குலைத்த வன்மையாளர்கள் அவர்கள்......

மன்னன் : பொன்னாலான உடைவாள்களைப் பரிசாக அளிக்கின்றோம்.

அமை : தேர்ப்படையைச் செலுத்தித் தீரமுடன் போரிட்ட திறமுடையார் இவர்கள்......

மன்னன் : விண்முட்டும் மாளிகைகள் வேண்டியவை அளிக்கின்றோம்.

[அவைப் புலவர் வாழ்த்திப் பாடுகின்றார்.]

மன்னன் : கலிங்க வெற்றியைக் கருத்துமிக்க பாடலால் புகழ்ந்த புலவர் பெருமானுக்கு அளவற்ற பொன்னும் மணியும் அள்ளித் தருகின்றோம்.

[புலவர் பெற்றுக் கொள்கிறார்.]

காட்சி 2

[அசோகன் அரசவையில் அமர்ந்திருக்கின்றான். அவருடன் அமைச்சர், சேனைத் தலைவர் ஆகியோர் உள்ளனர். அப்போது கடுங் கோபத்துடன், கலிங்கப் பெண் ஒருத்தி வருகின்றாள்.]

அசோகன் : பெண்ணே ! நீ யார் ?

க. பெண் : நான் ஒரு கலிங்கப் பெண் !

அசோகன் : இங்கு வந்ததன் நோக்கம் ?

க. பெண் : கலிங்கம் வென்ற காவலரிடம் பரிசுபெற !

அசோகன் : போரின் வெற்றிக்கு உழைத்த வீரர்களுக்கல்லவா என் பரிசு ! இதுகூட உனக்குத் தெரியாதா?

க. பெண் : தெரியும்!

அசோகன் : பின் ஏன் பரிசு கேட்கிறாய்?

க. பெண் : பரிசுக்கு உரிமையுள்ளவள் நான்! அதனால் தான் கேட்கிறேன்.

அசோகன் : கலிங்கப் போரிலே நீ ஆற்றிய அரிய செயல் ?

க. பெண் : மகத நாட்டு வீரன் ஒருவனுக்கு உயிரளித்தேன்.

அசோகன் : விளக்கமாகச் சொல், பெண்ணே !

க. பெண் : சொல்லுகிறேன். போர் வெறியிலே அறிவு மழுங்கியிருக்கும் அரசர்க்கு எதையும் விளக்கமாகத் தான் எடுத்து உரைக்க வேண்டும். போர்க்களத்தைத் திரும்பிப் பாரும்......

காட்சி 3

(நிகழ்ந்த காட்சி)

[களத்தில் பலர் படுகாயம் பட்டும், இறந்தும் கிடக்கின்றனர். உயிருடன் உள்ளோர் சிலர் மெதுவாக அரற்றும் ஒலி கேட்கிறது. ஒரு பெண் தன் தந்தையைத் தேடி வருகின்றுள்.]

பெண் : அப்பா ! அப்பா !

[சுற்றும் முற்றும் அங்குக் கிடப்பவர்களை உற்று நோக்கி வருகின்ருள்.]

தந்தை : தேன்மொழி ! என்னருமை மகளே ! தேன் மொழி !

பெண் : (தந்தை அருகில் அமர்ந்து) ஐயோ ! அப்பா ! உங்களுக்கா இந்த நிலை நேர வேண்டும் ?

தந்தை : தேன்மொழி ! கண்ணே ! உயிர் பிரியுமுன் உன்னைக் காணவேண்டுமென்று என் உள்ளம் துடித்த தம்மா !

பெண் : அப்பா !

தந்தை : கொஞ்சம் தண்ணீர்......வேண்டுமம்மா !

[தேன்மொழி நீர் கொண்டுவர ஓடுகிருள். திரும்பிவரும் வழியில் ஒரு மகத வீரன் உயிர் போகும் நிலையில் “தண்ணீர்......தண்ணீர்” என்று புலம்புகிருன்.]

பெண் : (அவ் வீரனைக் கண்டு) நீர் யார் ? உமக்கு என்ன வேண்டும் ?

ம. வீரன் : அம்மா ! தண்ணீர்......(கை நீட்டுகிறான்.)

பெண் : இத் தண்ணீரை என் தந்தைக்குக் கொண்டு செல்கிறேன். அவர் குடித்த பிறகு...உமக்கும்...

ம. வீரன் : அதற்குள் என் உயிர் போய்விடுமம்மா... கொஞ்சம் கருணை காட்டி அந்தத் தண்ணீரை இப்போதே கொடு...அம்மா !

[அவள் தான் கொண்டுவந்த நீரை அவனுக்குக் கொடுக்கிறாள். அவன் அதைக் குடிக்கிறான்.]

ம. வீரன் : என் உயிரைக் காப்பாற்றிய தெய்வம் நீதானம்மா ! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் ?

[மீண்டும் தந்தைக்கு நீர் கொண்டுவரச் சென்று திரும்புகிறாள். தந்தையருகில் சென்று]

பெண் : அப்பா ! அப்பா ! இதோ தண்ணீர். குடியுங்கள். (தந்தை ஏதும் பேசாமலிருக்கக் கண்டு அவர் முகத்தை உற்று நோக்குகிறாள். அவர் இறந்து விட்டதை உணர்ந்து) அப்பா ! (மேல் விழுதல்) இனி கண் திறந்து என்னைக் காண மாட்டீர்களா அப்பா ! 'தேன்மொழி ! என் மகளே !' என்று திரும்ப ஒரு முறை தித்திக்க அழைக்கமாட்டீர்களா அப்பா ! தாயற்ற எனக்குத் தாயுமாக இருந்து அன்பு செலுத்திய தங்களை எப்படியப்பா மறப்பேன் !

[அழுதுகொண்டே ஓடுகிறாள். சற்றுத் தொலைவில் தன்னால் நீர் கொடுத்துக் காப்பாற்றப் பட்ட மகத வீரனைக் காண்கின்றாள்.]

ம. வீரன் : தந்தையை யிழந்து உன்னைத் தவிக்கச் செய்த கொடியவன் நான்தானம்மா ! உன் தந்தையின்

முதுகில் வேலைப் பாய்ச்சிய மாபாதகன் நான்தானம்மா! என்னை மன்னித்துவிடு!

க. பெண் : என்ன? முதுகிலே வேலைப் பாய்ச்சிய போர்வீரன் நீதானா? கோழையே! உன்னைப்போன்றவர்களுக்கு அழிக்கத்தான் தெரியுமேயொழிய ஆக்கத் தெரியாது. என் தந்தை மார்பிலே புண்பட்டு மடிந்திருந்தால் என் மனம் இவ்வளவு துன்பப்படாது; மகிழ்ந்துமிருப்பேன். எதிரிகளின் ஈட்டியைக் கண்டு அஞ்சிக் கண் இமைப்பவரைக்கூடக் கொல்லத் துணியமாட்டார் உண்மை வீரர்! முதுகிலே தாக்கிய நீயும் ஒரு வீரனா?

ம. வீரன் : என்னை மன்னித்துவிடம்மா......! தாயே! உன் துயர் என் உயிரையே வாட்டுகிறது. மன்னர்களிடையே நிகழும் போரினால் மக்களை இழக்கும் பெற்றோரும், பெற்றோரை இழக்கும் மக்களும், கணவரை இழக்கும் காரிகையர்களும், உடன் பிறந்தாரை இழந்து உள்ளம் வருந்துவோரும், இன்னலுறும் இந்நிலை இனி கூடவே கூடாதம்மா! இதற்கு ஒரு முடிவு நீதானம்மா காணவேண்டும்.

க. பெண் : சற்று நேரம் (சிந்தித்து) முடிவு! ஆம்........ அதைக் காணத்தான் இன்று, இப்பொழுதே புறப்படுகிறேன்.

[வேகமாக அசோகன் அரண்மனை நோக்கி ஓடுகிறாள்.]

காட்சி 4

[அரசர் போர்க்காட்சியை உணர்ந்து]

அசோகன் : பெண்ணே! என்னை மன்னித்து விடு.

பெண் : மிகுந்த படையும், பொன்னும், பொருளும், புகழும் கொண்ட உங்களை நான் மன்னிப்பதா? அந்தத் தகுதி இந்தப் பேதைக்கு ஏது?

அசோகன் : அப்படியானால் நீ வேண்டுவது என்னவென்று சொல்? இல்லையென்னாமல் தருகிறேன்.

பெண் : (சற்றுச் சிந்தித்து) கேட்டால் தருவீர்களா, மன்னவரே ?

அசோகன் : தயங்காமல் கேள், தருகிறேன். மணி, பொன் வேண்டுமா அல்லது மாளிகை வேண்டுமா ?

பெண் : அவை எம்மிடம் நிறைய உண்டு.

அசோகன் : நெல் விளையும் நிலமா? கன்னல் விளையும் கழனியா ? எது வேண்டும் ?

பெண் : பிறருக்குத் தருமளவு எம்மிடம் ஏராளம் உண்டு.

அசோகன் : மகத நாட்டையே வேண்டுமானாலும் கேள் ! தருகிறேன்.

பெண் : பகைவர் நாட்டைப் பரிசாகப் பெறும் வழக்கம் எங்கட்கு இல்லை.

அசோகன் : உன்னை இந்த நிலைக்கு உள்ளாக்கிய என் உயிர் வேண்டுமா ? கேள் !

பெண் : வேண்டாம் ! என் தந்தையின் உயிர்...அதுதான் எனக்கு வேண்டும்.

அசோகன் : ஐயோ ! என் தலை சுழல்கிறதே !

பெண் : அரசே ! உமது மண்ணாசையால் உயிரிழந்த வீரர்களின் பெற்றோர் படும் துயரை எண்ணினீரா ? பெற்றோரை இழந்து பெருந்துயர்ப்படும் மக்களின் நிலையை மனத்திலே சிந்தித்தீரா ? கணவனை இழந்தவர் வடிக்கும் கண்ணீரைக் கற்பனை செய்ததுண்டா ? உமக்கும் ஒருசில வீரருக்கும் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சி தான் இந்நாட்டிற்கு ஏற்படும் மகிழ்ச்சியா ? ஆம் ! உம் ஆணையால் அழிந்த உயிர்கள் அநேகம். அழிந்த வளங்கள் எண்ணிலடங்கா. அழிந்த இன்பங்கள்

கோடி. மன்னரே! அழிந்த எல்லாவற்றையும் உங்களால் ஆக்கித் தரமுடியுமா? உங்கள் ஆணைக்கு அவற்றை ஆக்கும் வல்லமை உண்டென்றால் இதனை ஆக்கிக் காட்டுங்கள் பார்ப்போம்.

[தான் கையிற் கொண்டு வந்திருந்த மண் பாண்டத்தைத் தரையில் போட்டு உடைக்கிறாள். அது தூள் தூளாகச் சிதறுகின்றது.]

ஆக்குவது அரிது;
அழிப்பது எளிது;
ஆக்குவது அரிது அரசே!

[வெளியில் ஓடுகிறாள்.]

அசோகன் : (மகத நாட்டு மன்னன் மதிமயக்கம் ஒழிந்தது. அழிவுப் பாதையிலே செல்லத் தூண்டிய ஆணவம் இன்றோடு அழிந்தது. மன்னர் மன்னன் அசோகன் ஒரு மறக்குலப் பெண்ணிடம் பாடங் கற்றுக் கொண்டான்:) போர்! போர்!! ஆம்!!! அஃது இனி இந்நாட்டில் இல்லை. அன்பின் பெருமையை அறியாத யான் இதுவரை அழிவுதரும் செயல்களையே செய்து வந்தேன். அன்பே இன்பம் தருவது என்பதை அறியாதுபோனேன். வீரர்காள்! உங்கள் வீரமும் ஆற்றலும் நாட்டின் ஆக்க வேலைகட்குப் பயன் படட்டும்; அன்பு நெறியைப் பரப்புங்கள்; அமைதியை நிலை நாட்டுங்கள்; எல்லாவுயிர்களும் இன்புற்றிருக்க எண்ணிச் செயலாற்றுங்கள்; செல்லுங்கள்.

[வாளை வீசி எறிகின்றான். முடியைக் கழற்றி வீசுகின்றான்.]

[பெண்ணின் சொற்கள் எதிரொலிக்கின்றன. 'ஆக்குவது அரிது! அழிப்பது எளிது!']

---

9. தஞ்சைப் பெரிய கோயில்
(உரையாடல்)

[தஞ்சைக்குச் சென்று வந்த தந்தைக்கும், மகன் மணிவண்ணனுக்கும் நடந்த உரையாடல்.]

மணிவண்ணன் : தந்தையே, நீங்கள் இரண்டு நாட்கள் எங்குச் சென்று வந்தீர்கள் ?

தந்தை : 'தஞ்சைக்குச் சென்று வருகின்றேன்' என்று உன் தாயாரிடம் கூறிச் சென்றேனே. அவர்கள் உனக்குச் சொல்லவில்லைபோல் இருக்கிறது.

மணி : தஞ்சாவூர் நகர் செல்லுபவர்கள் அங்குச் சிறப் பாகப் பார்க்கத்தக்கன யாவை ?

தந்தை : மகனே, தஞ்சாவூர் வரலாற்றுப் புகழ் பெற்றது; ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் பழைமை யுடையது. அங்குச் சோழர்களும், நாயக்கரும், மகா ராட்டிரரும் அரண்மனை கட்டி வாழ்ந்தனர். அங்குச் சோழர் காலத்துப் பெரிய கோயில் ஒன்று இருக் கின்றது. தஞ்சாவூர் செல்லுபவர்கள் எவரும் பெரிய கோயிலைப் பார்க்காமல் வரமாட்டார்கள். மகாராட்டிரர் காலத்திய அரண்மனை இருக்கின்றது.

மணி : பெரிய கோயில் என்றீர்களே, அஃது எவ்வா றிருக்கும்? நம்முடைய ஊர்க்கோயிலைவிடப் பெரிதாக இருக்குமோ ?

தந்தை : நீ கூறியதுபோல் மிகப் பெரிய கோயில்தான். பெயரே பெரியகோயில்தான். அது நீள்சதுர அமைப்பை உடையது. கோயில் மதிற்சுவர் மிகவும் உயரமானது; உறுதி வாய்ந்தது. உட்கோயிலைச் சுற்றிலும் அகன்ற திருச்சுற்று இருக்கிறது. திருச் சுற்றுமாளிகையும் அமைந்திருக்கிறது. திருச்சுற்றை விட உயர்ந்த மேடைமீது உட்கோயில் கட்டப்

பட்டுள்ளது. கருவறை, நடுமண்டபம், முன்பண்டபம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டதே உட்கோயி லாகும். உட்கோயிலுக்குச் செல்ல மூன்று வாயில்கள் உண்டு. ஒவ்வொரு வாயிலிலும் 4 மீட்டர் உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்கள் இரண்டு இருக்கின்றன. அவற்றின் வேலைப்பாடு கண்களைக் கவரக்கூடியது. பெரிய கோயிலின் கோபுரம் ஏறத்தாழ 69 மீட்டர் உயரமுடையது. இக்கோயிலில் உள்ள சிவலிங்க மும், நந்தியும் மிகப் பெரியன; சிறந்த வேலைப்பாடு கொண்டவை.

மணி : சிவலிங்கத்தின் சிறப்பு யாது ?

தந்தை : கருவறையில் உள்ள சிவலிங்கம் மிகப் பெரியது. ஏறத்தாழ 4 மீட்டர் உயரமும், 9 மீட்டர் சுற்றளவும் உடையது. சுவரில் உள்ள ஏணியின்மீது ஏறித்தான் அந்த இலிங்கத்தை நீராட்ட வேண்டும்.

மணி : அங்கு உள்ள இறைவனின் பெயர் யாது ?

தந்தை : இறைவனின் பெயர் பெருவுடையார்; இறைவி யின் பெயர் பெரியநாயகி.

மணி : அக்கோயிலில் காணத்தக்கவை வேறு என்ன உள்ளன ?

தந்தை : அக் கோயிலின் உயரமான கோபுரம் அடி யகன்று நுனி சிறுத்து நாற்கோண வடிவில் பதின் மூன்று மாடிகளை யுடையதாய் அமைந்திருக்கின்றது. இதனால், அக்கோபுரத்தின் நிழல் தரையில் விழுவதே இல்லை. கருவறைக்கு எதிரில் ஏறத்தாழ 51 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் உடைய மண்டபம் அதற் குரிய உறுப்புக்களோடு அமைந்துள்ளது. மேலும் உட்கோயிலுக்கு எதிரில் பெரிய மேடையில் உள்ள கல்லாலான பெரிய நந்தி பார்ப்பவரை வியப்படையச் செய்கின்றது.

மணி: அங்நந்தி அவ்வளவு அழகாகவா அமைந்திருக்கின்றது?

தந்தை: அழகுடன் அமையப் பெற்ற நந்திகள்தாம் நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு கோயிலிலும் இருக்கின்றனவே! நான் கூறிய அந்த நந்தி ஏறத்தாழ 4 மீட்டர் உயரமும், 6 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் 25 மெட்ரிக் டன் நிறையும் உடையது. அது 644 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து கருங்கல்லில் வடித்துக் கொண்டு வரப்பட்டதாம்.

மணி: மிகவும் வியப்பாக இருக்கிறதே!

தந்தை: இதைவிட வியப்பான செய்தி மற்றொன்று உள்ளது. அதைக் கேட்டால் நீ மிகவும் வியப்புறுவாய்.

மணி: அஃது என்னவென்று சொல்லுங்கள்.

தந்தை: பெரிய கோயிலின் கோபுரத்தின் அமைப்பைப் பற்றிச் சொன்னேனில்லையா?

மணி: ஆம்.

தந்தை: அக் கோபுரத்தின் உச்சியில் பெரிய தளக்கல் போடப்பட்டுள்ளது. அதன்மீது செங்கல்லும் சுண்ணம்பும் கொண்டு கட்டப்பட்ட விமான முடியும், அதன் மீது கலசமும் அமைந்திருக்கின்றன. விமானத்தில் புராண இதிகாசக் கதைகளைக் குறிக்கும் சிற்பவேலைப் பாடு மிகுந்த உருவங்கள் காணப்படுகின்றன. கலசம் செம்பாலாக்கப்பட்டுப் பொற்றகட்டால் போர்த்தப் பட்டுள்ளது. தளக்கல் ஏறத்தாழ 8 மீட்டர் சதுர வடிவுடையது; ஒரே கல்லால் அமைந்தது. கணித நூல் வல்லார் அதன் நிறை 80 மெட்ரிக் டன் என மதிப்பிட்டுள்ளனர்.

மணி: அவ்வளவு பெரிய கல்லை உச்சிக்கு எப்படிக் கொண்டு சென்றிருப்பார்கள்?

தந்தை: நல்ல கேள்வி கேட்டாய். அதுதான் வியத்தற் குரியது. தஞ்சைக்கு 5 கிலோமீட்டர் தூரத்திலிருந்து சாரம் அமைத்து, அதன் வழியாக அப்பெரிய தளக் கல்லைக் கோபுரத்தின் உச்சிக்கு ஏற்றியதாகச் சொல்லுகிறார்கள்.

மணி: கேட்பதற்கே வியப்பாக உள்ளதே!

தந்தை: ஆம். இக்காலப் பொறியியல் வல்லுநர்களில் பண்டைத் தமிழரின் அறிவையும், முயற்சியையும் போற்றுதவர் எவரும் இல்லை. அத்தகைய செயற்கருஞ் செயல் அது.

மணி: அத்தகைய சிறந்த கோயிலுக்குக் குளம் இருக்க வேண்டுமே!

தந்தை: ஆமாம். அதைச் சொல்ல மறந்து விட்டேன். கோயிலுக்கு வடபுறத்தில் சிவகங்கைக் குளம் என்ற பெயருடையதொரு குளம் உண்டு. சதுரமாகவும், ஏராள மான படிக்கட்டுக்கள் கொண்டதாகவும் விளங்கும் அக்குளத்திற்குத் தூரத்திலுள்ள பரந்த நிலப்பகுதியி லிருந்து மழைநீர் வந்து சேர்வதற்கான கால்வாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவையன்றி, கோயில் மதில் களைச் சுற்றி நாற்புறமும் அகழி உண்டு. அந்த அகழி ஆழமுடையதாகவும், முதலைகள் முதலியன வாழும் வகையில் நீர் நிரம்பியும் இருந்ததாம். அந்த அகழி இப்பொழுது பல இடங்களில் தூர்க்கப்பட்டு விட்டது. அதன் சில பகுதிகளை இப்பொழுதும் நாம் காணலாம்.

மணி: இவ்வளவு பெரிய கோயிலை இத்துணைச் சிறப்புடன் அமைத்தவர் யார்?

தந்தை: தஞ்சையை ஆண்ட சோழருள் முதலாம் இராச ராசனே மிகச் சிறந்த பேரரசன். அவன் பெரிய நிலப் படையைத் தயார் செய்து தென்னிந்தியாவிலிருந்த பல நாடுகளை வென்றான். தனது கடற்படையைக்

கொண்டு இலங்கையையும் பல தீவுகளையும் வென்றான். அந்த இராசராசன் தான் அப் பெரியகோயிலைக் கட்டினான். அதனைக் கட்டியதோடு மட்டுமல்லாமல் பல சிற்றூர்களின் வருவாயைக் கொண்டு கோயில் பூசனைகளும், விழாக்களும் என்றும் நடைபெறும்படி ஏற்பாடு செய்து வைத்தான். மேலும் தான் வென்ற பல நாடுகளிலிருந்து கொண்டு வந்த பொருள்களினால் இறைவற்கும் இறைவிக்கும் அணிகலன்கள் பல செய்து அணிவித்து மகிழ்ந்தான். என்னே அவனது இறை அன்பு!

மணி : அக்கோயிலில் ஓவியங்கள் இருக்கின்றனவா ?

தந்தை : ஆம். அக்கோயிலில் கருவறையின் புறச் சுவர்கள்மீது சோழர்கால ஓவியங்கள் இருக்கின்றன. சுந்தரர் வரலாற்றைக் குறிக்கும் இரண்டு ஓவியங்கள் காணப்படுகின்றன. சிவபெருமான் முதிய மறையவராக வந்து, சுந்தரர் திருமணத்தைத் தடுத்து, அடிமை ஓலையைக் காட்டி ஆட்கொண்டதைத் தெரிவிக்கும் ஓவியம் ஒன்று. மற்றொன்று சுந்தரர் வெள்ளை யானை மீது கயிலை நோக்கிச் செல்வதையும், அவர் தோழரான சேரமான் பெருமாள் நாயனார் குதிரை ஏறி அவர் பின்னே செல்வதையும் குறிக்கும் ஓவியமாகும். இவை இரண்டும் குறிப்பிடத்தக்கன வாகும். சோழர் கால ஆடல் மகளிரையும், பாடல் மகளிரையும் குறிக்கும் ஓவியங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும்.

மணி : இந்த ஓவியங்களைப் பார்ப்பதால் நாம் அடையும் நன்மை யாது ?

தந்தை : இவை சோழர்கால ஓவியங்கள். ஆதலால், இவை சோழர்கால ஆண்களும் பெண்களும் எவ்வாறு உடைகளை அணிந்து வந்தனர் — என்னென்ன நகைகளை அணிந்திருந்தனர்—கூந்தல் ஒப்பனை

எவ்வாறு இருந்தது—ஆடல் மகளிரும் பாடல் மகளிரும் தங்களை எவ்வாறு அழகு செய்து கொண்டனர்—அவர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகள் இன்னவை என்பன போன்ற பல செய்திகளை அறிய இவ்வோவியங்கள் நமக்குத் துணைபுரிகின்றன.

மணி: அக்கோயிலுக்கு இராசராசன் இட்ட பெயர் யாது?

தந்தை: பல்லாயிரக் கணக்கான பொன்னும் பொருளும் செலவிட்டுப் பலவாண்டுகள் அரும்பாடுபட்டுக் கட்டிய அப்பெரிய கோயிலுக்குத் தன் பெயரையே அமைத்து 'இராசராசேச்சுவரம்' என்று பெயரிட்டான். அஃது இக்காலத்தில் 'பெரியகோயில்' என்றே வழங்கப் படுகிறது.

மணி: அப்பெரிய கோயிலைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு காலம் ஆயிற்று?

தந்தை: கோயில் கட்டும் வேலை கி.பி. 1003இல் தொடங்கி கி.பி. 1009இல் முடிவுற்றதாம்.

மணி: தந்தையே, தாங்கள் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றிச் சொல்லியவற்றைக் கேட்டதிலிருந்து அக் கோயிலை நேரில் காண வேண்டுமென்ற விருப்பம் எழுகின்றது. என்னை ஒருமுறை அழைத்துச் சென்று காட்டுங்கள். நானும் கண்டு மகிழ்வேன்.

தந்தை: உன் பள்ளிக்குக் கோடைக்கால விடுமுறை விடும்போது நம் குடும்பத்தினரோடு தஞ்சைக்குச் செல்லலாம்; பெரியகோயிலின் தோற்றத்தையும் பெருமையையும் கண்டு களித்து வரலாம். அதுவரையில் பொறுமையோடு இரு. உன் வகுப்புப் பாடங்களை நன்கு படி.

மணி: பள்ளிக்கூடம் செல்வதற்கு நேரம் ஆகிவிட்டது. நான் சென்று வருகிறேன். வணக்கம்.

10. வானொலி

இன்றைய உலகம் அறிவியல் உலகமென்று கூறலாம். அறிவியல் முன்னேற்றத்தால் நாம் அளவிலா நன்மைகளை அடைந்து வருகின்றோம். அறிவியல் வளர்ச்சிக்கு ஆதரவு நல்கியோர் பலராவர். அவர்களுள் ஆல்பிரட் நோபல் என்பார் குறிப்பிடத்தக்க பெருமையுடையார் ஆவார். அவர் தம் வாழ்வில் வாணிகத்தின் வாயிலாகப் பெரும் பொருள் திரட்டினர். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற செம்மை சால் மொழிக்கேற்ப ஈட்டிய செல்வத்தை நற்செயல்கள் நானிலத்தில் வளரும் வகையில் வழங்குவதற்கு முன்வந்தார். முன்வந்த அவர் அதற்கான வழிமுறைகளையும் நெடிது சிந்தித்து நல்லதொரு முடிவுக்கு வந்தார். அம் முடிவின்படி உலகில் பௌதிகம், இரசாயனம், இலக்கியம், மருத்துவம், உலக அமைதி ஆகிய துறைகளில் ஈடுபட்டுப் புதுமை காண்போருக்குப் பெரும் பரிசுகள் நல்க முடிவு செய்தார். அப்பரிசுகளை உலகில் வாழும் எப்பகுதியினரும் பெறும் வகையிலும், அவை என்றும் வழங்கப்படும் நிலையிலும் அமைந்த நிலையான ஏற்பாடுகளையும் செய்தார். அத்தகைய பெருமகனாகிய ஆல்பிரட் நோபலின் அறிவோடு கூடிய ஈகையின் பயனாகத் தோன்றியதே நோபல் பரிசு என்னும் பரிசுத்திட்டமாகும். இப் பரிசுத் திட்டத்தால் சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந் நூற்றாண்டிலும் அவனி புகழும் அறிவியல் அறிஞர்களும், சிறந்த இலக்கியங்களைப் படைக்கும் சிந்தனையாளர்களும் தோன்றலாயினர். நோபல் பரிசு, உலகிலேயே மிகுந்த மதிப்பும் உயர்வும் அமைந்த பரிசாகக் கருதப்படுகின்றது. அத்தகைய உயர்ந்த பரிசைப் பெற்ற அறிவியல் அறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட கருவியே வானொலியாகும்.

மார்க்கோனி இத்தாலி நாட்டைச் சார்ந்தவராவர். கி. பி. 1874ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 25ஆம் நாள்

போலோனு என்னும் நகரில் சீனோர் மார்க்கோனி என் பாரின் மகனுகப் பிறந்தார். இவரிடம் புதுமை காணும் ஆவல் இயல்பாகவே அமைந்திருந்தது. இவர் தன்னம்பிக்கையும், ஆழ்ந்த சிந்தனையும், அடக்கமும் உடையவராய் விளங் கினுர். இப்பெருமகனின் அயரா உழைப்பின் பயனுகக் கண்டுபிடிக்கப்பட்ட வானொலி என்னும் கருவியைப் பற்றியும், அக்கருவியால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றியும் நாம் அறிந்துகொள்ளுதல் பெரிதும் பயன்தரும் செய லாகும்.

மார்க்கோனி கி. பி. 1896ஆம் ஆண்டு கம்பில்லாத் தந்தி முறையைக் கண்டுபிடித்தார். இக்கம்பியில்லாத் தந்திக்குரிய தத்துவமே வானொலிக்குரிய அடிப்படையாகவும் விளங்கியது. மின் அலைகள் வழியாகச் செய்திகளை விரைவில் அனுப்புதல் என்பதே அத்தத்துவமாகும்.

வானொலி இயங்கும் முறையைப்பற்றி முதற்கண் காண்போம். வானொலி இயங்குவதற்கு மிகவும் தேவை யாயுள்ளவை ‘ மைக் ’ என்னும் ஒலிசெலுத்தியும், ‘ ரிசீவர் ’ என்னும் ஒலிவாங்கியும் ஆகும். அமைதியாய் இருக்கும் நீர் நிறைந்த குளத்தில் கல்லொன்றை எறிந்தால் வரிசை வரிசையாய் அலைகள் எழுவதைக் காண்கின்றோம். அந்த அலைகள் நீரில் மிதக்கும் இலைபோன்ற பொருள்களைக் கரையில் கொண்டு சேர்ப்பதையும் காணலாம். குளத்தில் நீர் நிறைந்திருப்பதைப்போன்று வானில் ‘ஈதர்’ என்னும் பொருள் நிரம்பியுள்ளது. வானொலி நிலையத்தில் பாடப் படும் பாட்டொலியையும், பேசப்படும் பேச்சொலியையும் கரித்துகள்கள் அமைந்த நுண்ணிய கருவியொன்று மின்னலையாக மாற்றி விண்ணில் செலுத்துகிறது. மின் அலைகள் ஒரு வினடிக்கு 2,99,460 கி. மீ. வேகத்தில் செல்லும் ஆற்றல் உடையவை. விண்வழியே வரும் மின்னலைகளை வானொலிப் பெட்டியிலுள்ள ஒலிவாங்கி என்னும் கருவி மீண்டும் ஒலியலைகளாக மாற்றி நாம்

கேட்கும்வண்ணம் செய்கிறது. ஒலிபெருக்கி என்னும் கருவியின் துணையால் நாம் விரும்பும் அளவமைந்த ஒலியில் பாட்டையும் பேச்சையும் கேட்டு மகிழ்கின்றோம்.

இத்தகைய வானொலியால் நாம் அடைந்துவரும் பயன்கள் அளப்பிலவாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டு காண்போம். உலகில் ஒரு பகுதியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியை உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவுவது வானொலியேயாகும். அறிஞர்களின் பேச்சையும், இசை வாணர்களின் இன்னிசைப் பாடல்களையும் வானொலியின் வாயிலாகக் கேட்டு மகிழ்கிறோம். உரிமை நாள், புத்தாண்டுப் பிறப்பு, பொங்கல் திருநாள் போன்ற நாட்களில் வானொலி நிலையத்தார் கவியரங்க நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். அவற்றால் தற்காலக் கவிஞர்களின் கவிதைகளையும், அவற்றின் நயத்தையும் அறிந்து மகிழ்கிறோம். கருத்தரங்கு நிகழ்ச்சிகளும் வானொலி நிலையத்தில் நடைபெறுகின்றன. அவற்றால் நாம் கருத்துத் தெளிவும் எய்துகிறோம். அங்கே நடத்தப்படும் நாடக நிகழ்ச்சிகளின் வாயிலாக நாம் நகைச்சுவை முதலிய செவிச் சுவையின்பத்தையும் அடைய முடிகிறது. உழவு பற்றிய நுணுக்கங்களையும் கூட்டுறவின் மேன்மையையும் வானொலி நிலையத்தார் நிகழ்த்தும் கிராம நிகழ்ச்சிகள் வாயிலாக உணர்ந்து பயன் பெற முடிகிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப் படும் பண்டங்களின் தரங்களைப் பற்றியும், அவற்றின் விலை யேற்றத் தாழ்வுபற்றியும் நாம் வானொலியின் மூலமாக அறிந்துகொள்கிறோம். ஆன்றோர்கள் பலர் அருளிய அருள்வாக்குக்களின் விளக்கத்தைக் கேட்டு நாம் இறை யுணர்வும், இன்பம் தரும் அருளுணர்வும் எய்துகிறோம். இங்ஙனம் எல்லாப் பிரிவினருக்கும், எல்லா மொழியினருக் கும் ஏற்றத்தாழ்வின்றி ஈடில்லாத பணியைச் செய்து வருவது வானொலி என்னும் கருவியே என்பதை மறுப்பவர் உளரோ?

இத்துணை நன்மைகளை நல்கும் வானொலியால் ஒருசில தீமைகளும் விளைகின்றன. ஒரு நாட்டார் பிறிதொரு நாட்டாரைத் தாக்கிப் பேசுவதற்கும் இவ்வானொலி பயன் படுகிறது. தவமுன வகையில் ஒரு நாட்டாரைப் பற்றி இன்னொரு நாட்டார் பிரசாரம் செய்யவும் இது பயன்படுத்தப் படுகின்றது. இதனால் பகைமையும், வன்முறைப் போரும் உலகின் சில பகுதிகளில் பரவுகின்றன.

இன்றைய உலகியல் வாழ்வில் வானொலி சிறந்ததோர் இடத்தைப் பெற்று விளங்குகின்றது. வானொலி இன்றி உலகு இயங்காது என்று சொல்லுமளவுக்கு அது நம் வாழ்க்கையோடு ஒன்றிவிட்டது. கற்றவர் பலரும் காலையில் எழுந்ததும் கடன்களை முடித்தபின், உலகச் செய்திகளை அறிந்துகொள்ளும் அவாவுடையராய் விளங்குகின்றனர். அச்செய்திகளையும் காலங் கடந்தன்றிக் கடிதில் அறிந்து கொள்ள விரும்புகின்றனர். அவர்தம் விருப்பத்தை நிறை வேற்றிவைப்பது வானொலியேயாகும். வானொலியின் இன்றி யமையாமையை உணர்ந்தமையால்தான் இராணுவப் புரட்சி ஏற்படும் நாடுகளிலெல்லாம் ஆட்சியைக் கைப்பற்றுவோர் முதன்முதல் வானொலி நிலையத்தைத் தம்வயமாக்கிக் கொண்டு வருவதை நாம் காண்கிறோம். விண்வெளிக் கூண்டில் அமர்ந்து வானவீதியில் சுற்றும் விண்வெளி வீரர்களும் வானொலியின் வாயிலாகவே உலகத்தார்க்குச் செய்திகளை அறிவிக்கின்றனர். இவற்றால் இன்றைய வாழ்வில் வானொலியின் இன்றியமையாமையை நாம் தெள்ளிதின் உணரலாம்.

இங்ஙனம் பாரில் உள்ளார்க்குப் பயன்கள் பலவற்றை அளிக்கும் சீரிய கருவியைச் சிறந்த வகையில் பயன் படுத்தி அல்லன நீக்கி, நல்லன ஆக்கி, இன்பமும் அமைதியும் எய்தி வாழ்வதே அறிவுடையாரின் செய்கை யாகும்.

---

11. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்

(ந. மு. வேங்கடசாமி நாட்டார்)

உலகில் சிலர் இளமைக் காலத்தில் படிக்க வசதியில்லாமல் தெரு விளக்கொளியில் படித்துப் பிற்காலத்தில் பெரியோராகவும் அறிஞராகவும் விளங்கினர். மற்றும் சிலர் பிறர் துணையின்றித் தம் அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும் வாழ்வில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். மேற்கூறியவற்றுள் இரண்டாம் வகையைச் சார்ந்தவரே நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆவர். அவர் தாமே பயின்று தமிழ்ப் பெரும் புலவராகத் திகழ்ந்தவர். அவர் வரலாறு மாணவர்க்கு நல்ல வழிகாட்டியாக அமையும்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி பாய்தலால் வளம்பெற்று விளங்குவது தஞ்சை மாவட்டம். இம் மாவட்டத்தில் திருவையாற்றிற்குத் தென்மேற்கே சுமார் 11 கி.மீ. தொலைவில் நடுக்காவிரி என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரில் முத்துசாமி நாட்டார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் தெய்வ பக்தியில் திளைத்தவர்; ஓரளவு தமிழ் இலக்கியப் பயிற்சியும், சோதிடப் பயிற்சியும் உடையவர். அவர்க்கும் தைலம்மை என்ற அம்மையார்க்கும் கி. பி. 1884ஆம் ஆண்டில் வேங்கடசாமி நாட்டார் மகவாய்த் தோன்றினர்.

இளம் வயதில் இவர் தம் வீட்டு எதிர் மனையில் குருசாமி உபாத்தியாயர் அவர்களால் நடத்தப்பட்ட திண்ணைப் பள்ளியில் பயின்றார். அதில் நெடுங்கணக்குப் பயின்ற பின்னர் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று என்பனவற்றைச் சில நாட்களில் படித்து முடித்தார். பின்னர், தந்தையிடம் நீதி நூல்களாகிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை முதலியவற்றைக்

கற்ருர். அக்காலத்திலேயே திருக்குறளில் அறுபது அதிகாரங்களை மனப்பாடம் செய்திருந்தார்.

இவர் தம்முடைய பதினுரும் வயதிற்குள் தம் தந்தையாரிடமே நைடதம் போன்ற நூல்களைப் பாடம் கேட்டறிந்தார். அக்காலத்திலே சில வடமொழி நூல்களையும் படிக்கக் கற்றுக்கொண்டார். பின்னர், தமிழ் இலக்கணம் கற்க வாய்ப்பு இல்லாமையால் நன்னூல் சூத்திரங்களை மனப்பாடம் செய்து வைத்தார். சூடாமணி நிகண்டில் பதினேராம் தொகுதி முழுமையும் இவருக்கு மனப்பாடம். ஆசிரியர் துணையின்றியே செய்யுட்களைப் படித்துப் பொருள் காணும் ஆற்றல் பெற்றிருந்தார்.

'சாவித்திரி வெண்பா' என்ற நூலின் ஆசிரியரான சாமிநாத முதலியார் ஒரு நாள் இவர் மனைக்கு வந்திருந்தார். அவர் நாட்டாரின் தமிழறிவை அறிந்து மகிழ்ந்தார். அவர் நாட்டாரை மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகளில் கலந்து கொள்ளுமாறு ஆர்வம் ஊட்டினர். அன்று முதல் 'பிரவேசப் பண்டித'த் தேர்வுக்கு உரிய நூல்களைத் தேடிப்பெற்று ஓராண்டில் தேர்வு எழுதினர். தேர்வில் இரண்டாம் மாணவராகத் தேர்ச்சி பெற்ருர். இலக்கணத்தில் முதன்மையான மதிப்பெண் பெற்றமைக்காகச் சிறப்புப் பரிசு பெற்ருர். பரிசாகப் பெற்ற தொகை முழுவதையும் கொண்டு அடுத்த தேர்வுக்குரிய நூல்களை வாங்கினர். அடுத்த ஆண்டே 'பால பண்டிதத் தேர்வு' எழுதினர். பால பண்டிதத் தேர்வில் நாட்டார் ஒருவரே தேர்ச்சி பெற்ருர். அஃதும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தார். அடுத்த ஆண்டே 'பண்டிதத் தேர்வு' எழுதினர். இரண்டாண்டுகள் படித்து எழுதவேண்டிய தேர்வை ஓராண்டில் எழுதி முதல்வராய்த் தேர்ச்சி பெற்ருர். அத்தேர்விலே வெற்றி பெற்றதற்குரிய பரிசாகிய தங்கத்தோடாவை மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவர் அவர்களே இவருக்கு

அணிவித்துப் பெருமைப்படுத்தினர். இதனால், இவருக்கு அறிஞர் பெருமக்களிடையே பெருமதிப்பு ஏற்பட்டது.

இவர் கி. பி. 1908ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்த எஸ். பி. ஜி. கல்லூரியில் தமிழ் ஆசிரியர் பணியை மேற்கொண்டார். ஓராண்டோடு இப்பணி முடிந்தது. பின்பு கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார். மீண்டும் எஸ். பி. ஜி. கல்லூரிக்கே சென்று தமிழ் ஆசிரியராய்ப் பணியாற்றினர். பாடம் கற்பிக்கும் காலங்களில் அவரது இன்சொல்லும், சோர்விலாத நாவன்மையும், குண நலன்களும் மாணவர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிடும். அதனால் தமிழ்ப் பற்றும், தமிழ் இலக்கியங்களில் ஆர்வமும் மாணவர்கட்கு உண்டாயின. கி. பி. 1933 வரை நாட்டார் அக் கல்லூரி யிலேயே பணியாற்றினர்.

கி. பி. 1933ஆம் ஆண்டிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றும் வாய்ப்புப் பெற்றார். பெரும் புலவரான நாட்டார் அவர்களின் தொடர்பால் அப் பல்கலைக் கழகம் பெரும் புகழ் பெற்றது. நாட்டாரிடம் நல்லெண்ணம் கொண்டிருந்த அதிபர்கள் இவருக்கு ஓய்வு பெறுங்காலம் வந்துற்ற பின்பும் வேலை நீட்டிப்புத் தந்தனர்.

ஓய்வு பெற்ற பின்பும், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி கரந்தைக் கல்லூரித் தலைவர் பதவியை ஏற்றார். ஊதியம் கருதாமலே இறுதிவரை பணியாற்றினர். இவர் தலைமையால் கல்லூரி நல்ல வளர்ச்சி பெற்றது. இவரிடம் பயின்ற மாணவர்கள் தாங்கள் நாட்டார் மாணவர் என்று சொல்லிக்கொள்வதில் தனிப் பெருமை கொள்வர்.

இவர் வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர் வரலாறு ஆகிய ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வெற்றிவேற்கை,

நன்னெறி ஆகிய நீதி நூல்களுக்கும், இன்னு நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்கும் செவ்விய முறையில் உரைகள் எழுதி யுள்ளார். திருவிளையாடற் புராணத்திற்கு விரிவானவுரையும், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திற்கும், தமிழ் மடந்தை அணி மேகலையாம் மணிமேகலைக்கும், அகநானூற்றுக்கும் இவர் எழுதிய உரைகள் அறிஞர்கள் பாராட்டும் தன்மை பெற்று விளங்குகின்றன. இவர் 'கட்டுரைத் திரட்டு,' 'கண்ணகி கற்பு மாண்பு' ஆகிய துணைப்பாட நூல்களையும் எழுதியுள்ளார்.

நாட்டார் அவர்கள் சிறந்த சமயப்பற்று உடையவர். பிற சமயத்தை வெறுக்கும் இயல்பு இவர்பால் இருந்ததில்லை. வெகுளி அற்றவர்; பொறுமையை அணியாகக் கொண் டவர்; எவர் மாட்டும் புன்னகை தவழும் முகத்தோடு இன் சொல் இயம்பும் இயல்பினர்; குற்றங் கண்டவிடத்து இடித் துரைத்துத் திருந்த வழிகாட்டுவார்; பயனில் சொல் சொல்லல், வீண்பொழுது போக்கல், பிறர் ஆக்கங்கண்டு அழுக்காறு கொள்ளல் முதலிய தீய இயல்புகள் அற்றவர்; வீட்டிலும், வெளியிடங்களிலும் பேசும்போதெல்லாம் தனித் தமிழிலேயே பேசுவார்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ'

என்ற வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். ஞானியார் அடிகள், திரு.வி.க போன்ற தமிழ்ப் பெரியார்களின் பாராட்டுக்கும் அன்புக்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

இவர் கரந்தைக் கல்லூரித் தலைவராக இருந்தபோதே கி. பி. 1944ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28ஆம் நாள் தஞ்சை நகரில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். நாட்டாரின் பூதவுடல் அழியினும் புகழ் உடல் நின்று நிலவு கிறது. தமிழ்ப் பெரும்புலவர்கள் வரிசையில் இவருக்கு என்றும் இடமுண்டு.

12. பாரதி கண்ட தேசீய ஒருமைப்பாடு

பாரத நாடு பழம்பெரும் நாடாகும். இந்நாட்டில் பல்வேறு மொழியினரும், பல்வேறு மதத்தவரும், பல்வேறு பழக்க வழக்கங்களை யுடையவர்களும் வாழ்கின்றனர். பனிமலை என்று பாராட்டப்படும் இமயம் இதன் வடக்கெல்லையாய் விளங்குகின்றது. 'கொடுங் கடலே! நீ கொண்டது போதும்; இனியும் அழிக்க நினையாதே' என்று தடுப்பது போன்று கைகாட்டி நிற்கும் கன்னித் தெய்வம் விளங்கும் கன்னியாகுமரி இதன் தெற்கெல்லையாய்த் திகழ்கிறது. வாணிகம் செய்வதற்கேற்ற வளமான துறைமுகங்கள் பல வற்றைக் கொண்ட அரபிக்கடலும், வங்காள விரிகுடாவும் முறையே இதன் மேற்கெல்லையாகவும், கிழக்கெல்லையாகவும் மிளிர்கின்றன. இந்த எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழும் உயர்ந்த நிலையே தேசீய ஒருமைப்பாடு என்று கூறப்படுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட அமரகவி பாரதியார் இயம்பியுள்ள செய்திகளை இங்கே காண்போம்.

பாரதியார் காலத்தில் நம் நாட்டின் மக்கட்டொகை முப்பது கோடியாயிருந்தது. 'முப்பது கோடி முகமுடையாள்' என்று அவர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். 'வாழ்ந்தால் முப்பது கோடி மக்களும் வாழ்வோம்; வீழ்ந்தால் முப்பது கோடி மக்களும் வீழ்வோம்' என்றும், 'செப்பும் மொழி பதினெட்டுடையவள் எனினும் அவள் சிந்தனை ஒன்றுடையாளாய் விளங்குகின்ருள்' என்றும் அவர் கூறியுள்ள செய்திகளால் பாரத நாட்டின் ஒருமைப்பாட்டில் அவருக்கிருந்த ஈடுபாட்டை நன்கு உணரலாம்.

நாட்டு மக்களால் போற்றப்பட வேண்டுவவற்றுள் கொடியும் ஒன்று. தாயின் மணிக்கொடி தரணி புகழும்

நிலையில் விளங்க வேண்டுமென இந்நாட்டிற் பிறந்த ஒவ்வொருவரும் எண்ணுதல் வேண்டும். அந்த எண்ணத்தாலேயே கொடியினைக் காக்க நம் நாட்டில் திருப்பூர்க் குமரனைப் போன்ருேர் உயிர் கொடுத்தனர். அக் கொடியின் பெருமையை விளக்கப் போந்த பாரதியார்,

‘ தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் ’

என்றழைத்தார் ; மணிக் கொடியினைக் காக்கும் கடமையும், போற்றும் உரிமையும் பாரத நாட்டு மக்களாகிய நம் அனைவர்க்கும் உண்டு என்று உணர்த்தினர். “செந்தமிழ் நாட்டுத் தீரரும், சேரநாட்டு வீரரும், சிந்தை துணிந்த தெலுங்கரும், பன்னலம் படைத்த கன்னடரும் சேர்ந்து நம் கொடியைக் காத்து நிற்கும் காட்சியைக் காணுங்கள்” என்று கூறியுள்ளார். இவர்களேயன்றி, “ துளுவரும், ஒட்டியரும் துணிவுடன் நின்று காத்தனர் என்றும், காலனும் அஞ்சுமாறு போரில் கலக்கும் மராட்டியரும், பொன்னகர் தேவர்கள் ஒத்த பொற்புடைய இந்துஸ்தானத்து மல்லரும், பூதலம் அழியும் வரையும் புகழ் காத்திட நிற்கும் இராசபுதனத்து வீரர்களும், தஞ்சம் அடையாத நெஞ்சமுடைய பஞ்சநதத்துத் தீரர்களும், துஞ்சும்பொழுதும் தாயின் பதத்தொண்டு நினைத்திடும் வங்கத்து வலியவர்களும் ஒன்றுபட்டு நின்று உயிர் கொடுத்தேனும் உயர்ந்த கொடியைக் காப்போம் என்ற உணர்வோடு காத்து நிற்பதைக் காணுங்கள்” என்றும் பண்ணமைந்த பாட்டிலே பாரதியார் இசைத்துள்ளார். பாரத நாட்டின் ஒருமைப்பாட்டிலே பாரதியாருக்கு இருந்த ஈடுபாட்டை விளக்கும் மற்ருெரு சான்ருகும் இது.

இனி, தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க அமரகவி பாரதியார் கூறியுள்ள வழிவகைகளைக் காண்போம். இன்று மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இத்தகைய அமைப்பால் அந்தந்த வட்டார மொழிகள்

வளர்ச்சியடைய வழிசெய்யப்பட்டுள்ளது. தாய்மொழியின் வாயிலாக ஆட்சி நடத்தும் வாய்ப்பும் இதனுல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நன்மைகள் இம்மொழிவழி மாநில அமைப்பால் ஏற்பட்ட போதிலும் ஒருசில தீமைகளும் விளேந்துள்ளன. ஒவ்வொரு மாநிலத்தாரும் தம்முடைய நலனேயே எண்ணும் இயல்பும், தம்முடைய மாநிலத்தில் விளேயும் பொருள்கள், உண்டாகும் யாறுகள் போன்றவை பிற மாநிலத்தார்க்கும் பயன்பட வேண்டுமென்ற நினைவில்லாத இயல்பும் தோன்றி வளர்ந்து வருவதைக் காண்கிருேம். இத்தகைய இயல்புகளால் ஒருமைப்பாடு சிதைவுறும் என்பது பாரதியார் எண்ணமாகும். எனவே, அவர் பாரத நாட்டின் எப்பகுதியில் ஒருபொருள் இருந்தாலும் அது பாரத நாட்டு மக்கள் அனேவர்க்கும் உரியது என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். தமிழ் நாட்டார் 'கங்கை நதியோரத்தில் விளேயும் கோதுமைப் பண்டத்தைப் பெற்றுக் கொண்டு காவிரிக் கரையில் விளேவிக்கும் வெற்றிலேயைக் கொடுக்க வேண்டும்' என்றும், 'சிங்க மராட்டியர்களது கவிதைகளேப் பெற்றுக்கொண்டு அவர்கட்குச் சேர நாட்டுத் தந்தங்களேப் பரிசாக அளிக்கவேண்டும்' என்றும், 'காசி நகரிலே வாழும் புலவன் ஒருவன் பேசும் உரையைக் காஞ்சியில் கேட்பதற்கேற்ற கருவியினேச் செய்ய வேண்டும்' என்றும், 'இராசபுதனத்து வீரர்களுக்குக் கன்னட நாட்டில் கிடைக்கும் தங்கத்தைத் தர வேண்டும்' என்றும் கூறி அக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். மேலும், கங்கையாறும் இமயமலேயும் வடக்கே இருந்தாலும் அவை பாரத நாட்டு மக்கள் அனேவர்க்கும் உரியனவே என்பதை 'மன்னும் இமயமலே' என்று தொடங்கும் பாடலின் வாயிலாகக் கூறியுள்ளார்.

'ஐந்தில் வளேயாதது ஐம்பதில் வளேயுமா' என்பது நம் நாட்டில் வழங்கிவரும் பழமொழியாகும். இதனுல்தான்

ஔவையார் போன்ற பெரும்புலவர்கள் வாழ்க்கைக்கு நன்மை தரும் அறவுணர்வுகளை இளம் உள்ளங்களில் பதியச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு 'ஆத்திசூடி' போன்ற நூல்களை எழுதினர். அம்முறையில் பாரதியார் தேசீய ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பாரத நாட்டுச் சிறுவர்—சிறுமியர் உள்ளத்தில் பதியவைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 'பாப்பாப் பாட்டு' என்ற பகுதியில் அதனை எடுத்துக் கூறினர். அப்பாடலில்,

'வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா'

என்று குறிப்பிட்டுள்ளார். இமயம் முதல் குமரி வரை அமைந்த நிலப்பரப்புடைய இந்தியா ஒரே நாடு என்ற உணர்ச்சி இதன் வாயிலாக ஊட்டப்பட்டுள்ளது.

பாரத நாட்டில் பல்வேறு பழக்க வழக்கங்கள் நிலவி வருகின்றன. இவ்வேற்றுமைகளுக்கிடையே அமைந்த ஒற்றுமையை உணர்ந்து ஒன்றுபட்டு வாழ்வதே இன்று வேண்டப்படுவதொன்றுகும். இந்த உயர்ந்த கருத்தைப் பைந்தமிழ்க் கவிஞர் பாரதியார் ஓர் அழகிய உவமையின் வாயிலாக ஓரிடத்தில் விளக்கியுள்ளார். நம் வீட்டில் வெள்ளை நிறப் பூனையொன்று வளர்கிறது. அந்தப் பூனைக்குக் குட்டிகள் பலவுண்டு. ஒன்று சாம்பல் நிறத்தோடு காணப் படுகின்றது. மற்றொன்று கரியசாந்துபோன்ற நிறத்தோடு திகழ்கின்றது. பிறிதொன்று பாம்பின் நிறத்தோடு மிளிர் கின்றது. வேருென்று வெள்ளைப் பாலின் நிறத்தோடு விளங்குகின்றது. இருப்பினும் இவையனைத்தும் ஒரே தர முடையனவேயாம். அதுபோல, பாரத நாட்டில் வாழ்வோர் நிறத்தாலும் மதத்தாலும் வேறுபட்டவராக இருப்பினும்

அவர்கள் அனைவரும் தரத்தில் ஒரு வகையினரே என்று கூறியுள்ளார். மற்றோர் இடத்தில்,

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை எல்லாரும்
இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

என்று பாடியுள்ளார்.

மேற்கூறிய செய்திகளின் வாயிலாக ஒருமைப்பாட்டின் உயர்வையும் பயனையும் உணர்ந்து ஒன்றுபட்டு வாழ்வதே இன்று நாம் செய்ய வேண்டிய சீரிய செயலாகும்.

13. மன்னிப்பு

வீட்டின் கதவு தட்டப்பட்ட ஒலி கேட்டுப் புண்ணியகோடி வேலைக்காரனைக் கூப்பிட்டார். பதிலைக் காணோம். கையிலிருந்த செய்தித்தாளை அங்கிருந்த மேசை மேல் வைத்துவிட்டு எழுந்துபோய்க் கதவைத் திறந்தார்.

வாயிற்படியினருகில் ஓர் ஆணுருவம்; பரட்டைத்தலை; நடுத்தர வயது; பசியால் தள்ளாடும் தோற்றம்; அப்பொழுது இரவு மணி பத்து இருக்கும். இரக்கத்திற்குரிய தோற்றத்தைக்கொண்ட அவனைப் பார்த்து, "என்னப்பா வேண்டும்?" என்று கேட்டார் புண்ணியகோடி. "ஐயா! வயிறு பசிக்கிறது. ஏதாகிலும் இருந்தால் கொடுங்கள்" என்றான் அவன். அவனுடைய குரலில் கெஞ்சலும் குழைவும் கலந்திருந்தன.

ஒருகணம் அவனை உற்றுப்பார்த்த புண்ணியகோடி, "உள்ளே வா. இருப்பதைத் தருகிறேன்" என்று அன்புடன் கூறினார். அவனும் புண்ணியகோடியைத் தொடர்ந்து உள்ளே சென்றான். "வேண்டியதைச் சாப்பிடு. பிறகு பேசலாம்" என்று சொல்லியவாறே புண்ணியகோடி இரண்டு சீப்பு வாழைப் பழங்களையும், ஒரு குவளையில் தமக்கென்று வைத்திருந்த பாலையும் கொண்டுவந்து அவன் முன் வைத்தார். அவற்றைக் கண்ட அவன் கண்கள் மலர்ந்தன. நாவில் நீர் ஊறியது. வாழைப் பழங்களைக் கண்ட அவன் வான்மழை கண்ட பயிர்போல மகிழ்ந்து தன் கைகளால் அவற்றை எடுத்து விரைவாக உண்டான்; பாலையும் பருகினான். அச்செயல் அவனுடைய பசி மிகுதியைக் காட்டியது. சாப்பிட்ட பிறகு "நான் வந்து ....." என்று திணறியவாறு அவன் ஏதோ சொல்ல முற்பட்டான். அவனுடைய நிலையைக் கண்டு மனம் இளகிய புண்ணியகோடி, "சுருக்கமாகச் சொல்லிவிட்டு உறங்கு. விடிந்த பிறகு பேசிக் கொள்வோம்" என்று கூறினார்.

அவன் தன்னைப்பற்றி ஏதேதோ கூறினன். புண்ணியகோடி இரக்க உணர்ச்சியோடும், ஆர்வத்தோடும் அவனுடைய வரலாற்றையும் நிலையையும் கேட்டுக்கொண்டிருந்தார். அவ்வாறு கேட்டுக்கொண்டிருந்தபொழுதே புண்ணியகோடியின் உள்ளத்தில் ஏதோ ஒரு திட்டம் உருவாகியது. இருவரும் பேசிக்கொண்டேயிருந்தனர். அப்பொழுது புண்ணியகோடியின் வீட்டின் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் மணி பன்னிரண்டாகி விட்டதென்பதை ஒலித்துக் காட்டியது. இருவரும் படுக்கைக்குச் சென்று உறங்கத் தொடங்கினர்.

புண்ணியகோடி நேரிய வழியில் பெரும் பொருள் திரட்டியவர். அவர் பிறர் துன்புறுவதைக் காணச் சகிக்க மாட்டார். வறுமையால் வாடுபவர்களுக்கு உதவிசெய்ய அவர் என்றும் தயங்கியதில்லை. அவர் உதவியால் படித்துப் பட்டம் பெற்று வாழ்வில் உயர்ந்த நிலையடைந்தவர்கள் பலர். செற்றம் நீக்கிய மனத்தினர் அவர். செல்வத்தால் மற்றவர் வாழ்வைச் செழிப்படையச் செய்யவேண்டுமென்ற சீரிய எண்ணங்கொண்டவர் அவர். 'பசி'யென்று வருபவர் எவராயினும், 'புசி'யென்று சொல்லுவார்; உதவியென்று எவரேனும் வந்தால் 'நான் இருக்கின்றேன்' என்று சொல்லி முன்வந்து உதவுவார்; வயிற்றுக்குச் சோறிட்டு வாழும் வாழ்வே உயர்ந்தது என்ற எண்ணங்கொண்டவர்; தம் பெயருக்கு ஏற்றவாறு புண்ணியங்கள் பலவற்றைச் செய்தவர். அப்படிப்பட்ட நற்குணங்கள் பலவும் அமைந்த புண்ணியகோடி தம் வீட்டிற்கு வந்தவனை உபசரித்து உணவு தந்ததில் வியப்பில்லை.

பொழுது விடிந்தது. புண்ணியகோடி எழுந்து தம் அருகில் படுத்திருந்தவனைப் பார்த்தபோது அவனைக் காணேம். பரபரப்பேதுமின்றி அவர், அவன் படுக்கையின் அருகில் சென்றூர். அங்கே அவனுடைய பணப்பை யொன்று கிடந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்.

ஒரு புதுக்காசுகூட அப்பையில் இல்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு தம் பணியாளை அழைத்துக் கடைக்குச் சென்று பொருள்கள் சிலவற்றை வாங்கிவரச் சொல்ல நினைத்தார். பணியாளிடம் பணம் தருவதற்காகத் தம் பணப்பையைத் தேடினர். தம் பணப்பையைக் காணுது அவர் திடுக்கிட்டார். அவருக்கு நடந்தது புரிந்துவிட்டது. இரவு வந்தவன் பணப் பையை எடுத்துக்கொண்டு இரவோடு இரவாகச் சென்று விட்டான் என்ற முடிவுக்கு வந்தார். மறுபடியும் அவன் அங்கே விட்டுச்சென்ற பணப்பையை ஆராய்ந்தார். அதற்குள் அவன் பெயருக்கு வந்த கடிதம் ஒன்றிருந்தது. அக்கடிதத்தில் கந்தன் என்ற பெயரும், அவனுடைய வீட்டு எண், தெரு, ஊர் முதலியனவும் காணப்பட்டன. அவற்றைக் கண்ட புண்ணியகோடி ஒருகணம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டார்.

வறுமையின் கொடுமையால் சிறு திருட்டைச் செய்த குற்றத்திற்காக மூன்று மாதச் சிறைத் தண்டனை பெற்ற தாகவும், விடுதலையான பிறகு சமூகம் தன்னை வெறுத் தொதுக்கியதென்றும் அவன் இரவில் தம்முடன் பேசிக் கொண்டிருந்தபொழுது கூறிய செய்திகள் புண்ணிய கோடியின் நினைவிற்கு வந்தன. அவருள்ளத்தில் சினம் பொங்கியது. 'பசிக்குச் சோறிட்டவருக்கு அவன் செய்த துரோகத்தைப் பார்த்தாயா?' என்றது அவரது மனம். 'வேண்டாம். அவன் திருந்த இன்னொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரலாம். அவசரப்படாதே' என்றது அவரது உள்மனம். இத்தகைய மனப்போராட்டம் புண்ணியகோடி யின் உள்ளத்தில் எழுந்தது.

புண்ணியகோடி சிறிது நேரங்கழித்துத் தம் வேலை யாளைக் கூப்பிட்டார். அவனிடம் தம் வீட்டில் நடந்த செயலைப்பற்றி எதுவும் கூருமல், ஒரு காகித உறையில் பணப்பையிலிருந்து அகப்பட்ட கடிதத்தில் காணப்பட்ட முகவரியை எழுதினர். எழுதிய உறையில் ஏதோ ஒன்றை

வைத்து அதனை ஒட்டித் தம் வேலையாளிடம் தந்து, "இந்த உறையை மேலே குறிப்பிட்டுள்ள முகவரியுடையாரிடம் நேரில் சென்று கொடுத்துவா" என்று கட்டளையிட்டார்.

புண்ணியகோடி வாழ்ந்திருந்த ஊர் சோழ நாட்டிலே காவிரியின் கிளை நதியாய் விளங்கும் கொள்ளிட நதியின் தென் கரையில் உள்ளது. கடிதத்தில் எழுதப்பட்ட முகவரிக்கு உரியவன் அந்நதியின் வடகரையில் அமைந்துள்ள சிற்றூர் ஒன்றில் வாழ்ந்திருந்தான். இரண்டு ஊர்களுக்குமிடையே ஏறத்தாழ இருபது கிலோ மீட்டர் தொலைவிருக்கும். கடிதத்தைப் பெற்ற வேலையாள் பரிசல் ஒன்றில் ஏறி ஆற்றைக் கடந்து அச்சிற்றூரை யடைந்தான். கந்தன் வேலையாளைக் கண்டதும் அஞ்சி நடுங்கினான். வேலையாள் கந்தனிடம் கடிதத்தைத் தந்தான். கந்தன் கடிதத்தைப் படித்தான். படிக்கும்போது அவன் கண்கள் நீரைச் சொரிந்தன. பின் கடிதம் ஒன்று எழுதி வேலையாளிடம் தந்தான். அவ்வேலையாள் அவன் தந்த கடிதத்தை வாங்கிக்கொண்டு வந்து புண்ணியகோடியிடம் தந்தான்.

புண்ணியகோடி வேலையாள் கொண்டுவந்த கடிதத்தைக் கண்டு வியப்போடு அதனைப் பிரித்துப் படித்தார்.

அன்புள்ள தந்தைக்கு,

மகன் செய்த குற்றத்தை மறந்து மன்னிக்கும் தங்களை அப்படி அழைத்தால் குற்றமிருக்காதென்று நம்பி இக்கடிதத்தை எழுதுகிறேன்.

உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த என்னைத் தாங்கள் மன்னித்து விட்டீர்கள் என்பதை எண்ணிய பொழுது என் உள்ளம் உவகைக் கடலில் ஆழ்ந்தது. 'நீ விரும்பிய தொழில் செய்து நன்முறையில் பிழைத்துக்கொள்' என்று சொல்லிப் பாவியாகிய எனக்கு நூறு ரூபாயை அன்பளிப்பாகவும் அனுப்பியிருந்த

தங்களைத் தெய்வப் பிறவியாகவே கருதுகிறேன். செய்த குற்றத்தை மன்னித்து, மறந்து எனக்கு ஏற்ற தோர் உதவியும் செய்த தங்களுக்கு இணையாக எவரையும் இவ்வுலகில் யான் கண்டதில்லை; கேட்டது மில்லை. தங்களை நேரில் காண ஆசை என்னைப் பிடர்பிடித்துந்துகிறது. மனம் ஏனோ என்னைத் தடுக் கின்றது.

தாங்கள் எனக்குத் தந்த முதலீட்டைக்கொண்டு சிறு தொழில் செய்து ஓராண்டிற்குள் உங்கட்குச் சேரவேண்டிய தொகையைத் திருப்பித் தந்தாலன்றி என் மனம் அமைதி யுறாது. அதுவரையிலும் யான் தங்களைப் பாரேன். தங்களை அங்ஙனம் வந்து பாராம லேயே இருந்து விடுவேன் என்று மட்டும் எண்ணா தீர்கள். தங்களைக் காணாமல் என் உயிர் என்னுடலை விட்டுப் பிரியாது. இஃதுறுதி.

இங்ஙனம்,
தங்கள் இரக்கத்திற்குரிய
கந்தன்.

கடிதத்தைப் படித்து முடித்த புண்ணியகோடி உவகைக் கண்ணீர் வடித்தார்; தம் எண்ணம் நிறைவேறியது கண்டு மனநிறை வெய்தினார். 'ஒரு திருடனுக்கு வாழ் வளித்து அவனைத் திருத்தி விட்டோம்' என்ற நினைப்பினால் அவரது நெஞ்சம் மகிழ்ந்தது. கடிதத்தை மீண்டும் படித்த புண்ணியகோடியின் வாய்,

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று முணுமுணுத்தது.

14. எவரெஸ்டு வீரர்

நம் நாடு பல வகைகளில் சிறந்திருத்தல்போல இயற்கை வளத்திலும் முன்னணியில் உள்ளது. நீலகிரியின் நிகரற்ற எழிலும், குமரி முனையின் கண்கொள்ளாக் காட்சியும், காசுமீரத்தின் கண்கவர் இயற்கை வனப்பும், பிருந்தாவனத்தின் பீடும், இவை போன்ற நூற்றுக் கணக்கான வேறு பல காட்சிகளும் உலகில் வேறெங்கும் காண முடியாதனவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக உலகக் காட்சிகளில் முதலிடம் பெறத்தக்க உயர்ந்த காட்சிகளை யுடையது இமயமலையேயாகும். இமயமலை நம் நாட்டில் அமைந்திருப்பதால் நம் நாட்டின் பெருமை குன்றிலிட்ட விளக்கெனப் பொலிகிறது. அம்மலை தன் உச்சியைக் காணமுயன்ற பிற நாட்டார்க்குப் பணியாது நம் நாட்டிற் பிறந்த தென்சிங் நார்க்கே என்பவர்க்குப் பணிந்து அச் சிறப்பை அளித்து நம் நாட்டின் பெருமையைப் பன்மடங்கு உயர்த்தியது.

தென்சிங் நார்க்கே நேபாளத்தில் எவரெஸ்டு சிகரத்தின் அடிவாரத்திலுள்ள சோலா கும்பு என்னுமிடத்தில் கி. பி. 1914ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பிறந்த குடி ஷெர்ப்பாக்கள் என்ற மலைவாழ் மக்கள் குடியாகும். இவர் இளமையில் ஆடுமாடுகளை ஓட்டிச் சென்று மலையடிவாரங்களில் மேய்ப்பதுண்டு. அக்காலத்திலே விளையாட்டாகப் பல மலைகள்மீது ஏறுவார்; மலை ஏறுபவர் கூறும் அனுபவங்களை ஆர்வத்துடன் கேட்பார். பனிமலையின் உச்சிகளில் விளையாட்டாக ஏறுவார். இவர் தமது இருபதாம் வயதில் உற்றார் அறியாமல் எரிக் ஷிப்டனின் இமய ஏற்றக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தார். இமயத்தின் மடியில் வளர்ந்த

இவருக்கு மலை ஏறுதல் மீனுக்கு நீந்துதல் எத்துணை இயல்போ அத்துணை இயல்பாக இருந்தது.

சில ஆண்டுகளில் இரண்டு மூன்று சிகரங்களின் மீது ஏற இவர் முயன்றுள்ளார். பனிச் சறுக்கல் விளையாட்டில் இவர் ஒப்பற்ற திறமையுடையவராகத் திகழ்ந்தார். அதனால், அரசாங்கத்தார் இவரை 1948, 1950 ஆண்டுகளில் காசுமீரத்தில் இந்தியப் படையினர்க்கு இவ்விளையாட்டைக் கற்பிக்கும் ஆசிரியராக நியமித்தனர்.

இவர் யாதொரு நவீனத் துணைக்கருவிகளும் இன்றியே கடும் குளிரையும் தாங்கும் வல்லமை பெற்றிருந்தார், களைப்பின்றி நீண்ட தூரமோ உயரமோ செல்லும் ஆற்றலும் உடையவராக இருந்தார். 1952ஆம் ஆண்டில் லாம்பெர்டுடன் மலையேறியபோது 8,380 மீட்டர் உயரத்தில் வெப்பமான மெத்தையோ, அடுப்புக்களோ, பருக வெப்பமான நீரோ இன்றிக் கூடாரத்தில் ஓரிரவு முழுதும் தங்கி இருந்தார். இவர் உயிர்வளிக் கருவி இன்றியே 8,560 மீட்டர் உயரம் ஏறினார். அவ்வுயரத்தில் எச்சிலும் இறுகிப் பனிக் கட்டியாகும்; மூச்சுக் காற்றிலுள்ள நீராவியும் உறைந்து மூக்கில் ஒட்டிக் கொள்ளும். இவர் சாதனையைக் கண்டவர் இவர்க்கு மூன்றும் சுவாசப்பை உள்ளது என்று கருதினர். இவரது அரிய சாதனையைக் கேட்ட நேபாள அரசாங்கத்தார் இவர்க்கு 'மலைப் புலி' என்று பொருள்படும் தென்சிங் என்ற பட்டத்தை அளித்தனர்.

இவரது ஆற்றலைக் கண்ட மலை ஏறும் எல்லாக் குழுவினரும் இவரைத் தம் குழுவில் ஓர் உறுப்பினராகக் கொண்டே ஏறி வந்தனர். அதனால், இவர் ஏழு முறை இமயக் குழுவில் இடம்பெற்றுப் பயிற்சி பெற்றிருந்தார். 1953ஆம் ஆண்டில் கர்னல் ஜான் ஹண்டு என்பவர் தலைமையில் ஒரு குழுவினர் மலை ஏற முயன்றனர். ஜான் ஹண்டு தென்சிங்கின்

திறமையை யறிந்து இவர்க்குச் சம உரிமை தந்து தம் குழுவில் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார். அக்குழுவில் நியூசிலாந்து நாட்டைச் சார்ந்த எட்மண்டு ஹில்லரியும் இடம் பெற்றிருந்தார். அவரும் இருமுறை எவரெஸ்டின்மீது ஏற முயற்சி செய்தவராவர்.

காட்மண்டு என்னும் இடத்திலிருந்து ஜான் ஹண்டு தலைமையில் 10-3-53இல் புறப்பட்ட குழுவினர் 'தியாம் போக்' என்ற மடத்தினை அடைந்தனர். அங்கு ஒரு திங்கள் தங்கி, மலைவாழ்க்கைக்குத் தங்களைத் தகுதியுடையவர் களாக்கிக் கொண்டனர். அப்பொழுது ஹண்டு தென் கோலை அடைவதற்கு ஏற்ற வழியை ஆய்வதில் ஈடுபட்டார். தென்கோலை அடைவதற்கு முன் ஏழு பாடிவீடுகளை (முகாம்கள்) அமைக்க வேண்டுமென்று முடிவு செய்தார். இயற்கைச் சூழ்நிலை நன்கு அமைந்திருத்தலைக் கண்ட ஹண்டு தம் குழுவினருடன் லோட்சே சிகரத்தினை நோக்கி யமைந்த சரிவில் ஒன்றன்பின் ஒன்ருய்ப் பல பாடிவீடுகளை அமைக்கும் பணியில் முனைந்து நின்ருர். இவ்வாறு ஏழு பாடிவீடுகளும் அமைக்கப்பட்டன. வேண்டிய உணவுப் பொருள்களும், பிறவும் அப்பாடிவீடுகளில் நிரப்பப்பட்டன. போர்டிலன், இவான்சு என்ற இரு வீரர்களும் சிகரத்தினை அடையும் வழியினை அறிந்து வருவதென்றும், ஹில்லரி, தென்சிங்கு என்ற இரு வீரர்களும் எவரெஸ்டு சிகரத்தின் மீது ஏறுவதென்றும் ஹண்டு முடிவு செய்தார். இயலு மாயின் போர்டிலனும் இவான்சும் சிகரத்தினை அடையலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர்களைக் கொண்டு விளங்கிய அக் குழு மேத் திங்கள் ஐந்தாம் நாள் தென்கோலினை அடைந்தது. குழுவின் தலைவராகிய ஹண்டு 8,332 மீட்டர் உயரம்வரை சென்ற பிறகு மேலும் செல்ல இயலாமையை உணர்ந்து தென்கோலுக்குத் திரும்பிவந்தார்

அப்பொழுது அங்கு ஓய்வுபெறுதற்குத் தங்கியிருந்த தென் சிங்கும், ஹில்லரியும் அவரை அன்புடன் வரவேற்றனர்.

போர்டிலன், இவான்சு ஆகிய இருவரும் தென் சிகரம் வரை சென்றனர். அப்பொழுது வானம் இருண்டது. அதற்குமேல் செல்ல முயற்சி செய்தல் இயலாதென்று எண்ணினர். எனவே, தென் சிகரத்தை அடைந்த பெருமையுடன் அவ்விருவரும் தென்கோலுக்குத் திரும்பினர்.

மேத் திங்கள் இருபத்தெட்டாம் நாள் காலை தென்சிங்கு, ஹில்லரி ஆகிய இருவரும் மலையேறிகள் இருவருடனும், ஒரு மூட்டை தூக்குபவனோடும் தென்கோலிலிருந்து மேல் நோக்கிச் சென்றனர். 8,470 மீட்டர் உயரத்தில் ஒரு பாடி வீட்டை அமைத்துக்கொண்டனர். உலகிலேயே மிகவும் உயர்ந்த இடத்தில் அமைத்த கூடாரத்தில் அன்றிரவு இரு வரும் தங்கினர். ஏனையோர் கீழே இறங்கி வந்து விட்டனர். இருபத்தொன்பதாம் நாள் காலை அவ்வீரர் இருவரும் சிகரத் தினை அடைய முற்பட்டனர். பனிப் பாறைகளை வெட்டி வழி அமைத்துக்கொண்டு சென்றனர். காலை ஒன்பது மணியள வில் தென் சிகரத்தினை அடைந்தனர். அங்கே படிந்திருந்த பனி அவர்களுக்கு மிகவும் தொல்லையைத் தந்தது. வளிக் கருவிகளில் காற்றுக் குறைவாய் இருப்பதை இருவரும் அறிந் தனர். அதனால், விரைந்து மேலே செல்லுதல் வேண்டு மென்று முடிவு செய்தனர். இவ்வாறு பல இன்னல்களையும் கடந்து மேத் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் காலை பதி னொன்றரை மணியளவில் உலகத்தின் உயர்ந்த மலைக் குவடாகிய எவரெஸ்டின்மீது தம் அடிகளைவைத்து அழியாப் புகழ் பெற்றனர்.

உச்சியை அடைந்த வீரர் இருவரும் பதினைந்து மணித் துளிகள் அங்கே தங்கினர். ஐக்கிய நாடுகளின் கொடி, நேபாளக்கொடி, ஆங்கில நாட்டுக்கொடி, இந்தியாவின்

இணையற்ற மூவண்ணக் கொடி ஆகியவற்றை அங்கே நட்டனர். புகைப்படங்கள் பலவற்றை எடுத்துக் கொண்டனர். இருள் வந்து சூழ்வதற்கு முன் குழுவின் தலைவரும், பிறரும் தங்கியிருந்த தென்கோலை அடைந்தனர். சிகரம் வெல்லப்பட்ட செய்தியறிந்த அனைவரும் சிந்தை மகிழ்ந்தனர். நேபாள நாட்டிலிருந்த ஆங்கிலத் தூதுவர் அலுவலகம் உலகத்தார் அனைவர்க்கும் அச் செய்தியை அறிவித்தது.

'முயற்சி மெய் வருத்தக் கூலி தரும்'

என்ற வள்ளுவரின் வாய்மொழியை மெய்ப்பித்துக் காட்டிய எவரெஸ்டு கண்ட வீரர்கள் வாழ்க! அவர்களுடைய வரலாறு நம்மவர்க்கு அஞ்சா நெஞ்சத்தையும், ஆண்மையினையும் ஊட்டுவதாக!

---

15. கலிங்கத்துப் பரணி

பரணி பாடிடத் தரணியாண்டவர்கள் பழந்தமிழ் மன்னர்கள் என்று பாவலர்கள் போற்றுவர். அங்ஙனம் போற்றப்பட்ட மன்னர்களுள் சோழநாட்டுப் பெருவேந்தனாய் விளங்கிய முதற் குலோத்துங்கனும் ஒருவனாவான். அவன் கங்கைகொண்ட சோழன் என்று கல்வெட்டுக்களில் போற்றப்படும் இராசேந்திர சோழனின் மகள் வயிற்றுப் பேரனாவான். அவன் தந்தை வழியில் சாளுக்கியனாவான்; தாய் வழியிற் சோழனாவான். அவனுடைய தாய் மாமன்மார் மூவர் இருந்தனர். அம்மூவர்க்கும் மகப் பேறின்மையால் இவன் சோழநாட்டை ஆளும் உரிமையைப் பெற்றான். தந்தைக்குரிய வேங்கி நாட்டையும், தாய் மாமனுக்குரிய சோழ நாட்டையும் ஒன்றுபடுத்தித் தன் ஒருகுடைக்கீழ் ஆண்டான். அவனுக்கு விசயதரன், சயதுங்கன், அபயன் என்ற பெயர்களுமுண்டு. அவன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த கலிங்கப் போரைப் பற்றி எழுந்த இலக்கியமே கலிங்கத்துப் பரணியாகும்.

கலிங்கத்துப் பரணி என்னும் நூலைப் பாடியவர் சயங்கொண்டார் என்ற பெரும்புலவராவார். இவர் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று பாராட்டப் பெற்றவராவார்; குலோத்துங்க மன்னனின் அவைக்களப் புலவராய் விளங்கியவர். சோழநாட்டிலுள்ள தீபங்குடி என்னும் ஊரில் தோன்றியவர் என்று வரலாற்றறிஞர் கூறுவர். இவர் பாடிய கலிங்கத்துப் பரணிக்குக் காரணமாயிருந்த வரலாற்று நிகழ்ச்சி பற்றியும், அந்நிகழ்ச்சியை ஆசிரியர் கூறியுள்ள பான்மை பற்றியும் அறிய முற்படுவோம்.

குலோத்துங்கன் காலத்தில் சோழப்பெருநாட்டின் தலைநகராய் விளங்கியது கங்கைகொண்ட சோழபுரமாகும்.

அப்பெருநாட்டின் வடபகுதிக்குக் காஞ்சீபுரம் தலைநகராய் விளங்கியது. குலோத்துங்கன் தன் ஆட்சிக்காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று குடிகளின் நிலையை அறிந்து ஆவன செய்து வந்தான். ஒருமுறை குலோத்துங்கன் வட பகுதியின் தலைநகராய் விளங்கிய காஞ்சியில் விளங்கிய அரண்மனையில் திருவோலக்கங் கொண்டிருந்தான். தானைத் தலைவர்களும், அமைச்சர்களும், புரோகிதரும், பிறரும் அம்மணிமண்டபத்தில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது சிற்றரசர் பலரும் தத்தம் திறைப் பொருள்களுடன் வந்து சோழப் பெருவேந்தனின் அடி பணிந்து சென்றனர். பின்னர் மன்னர் மன்னனாகிய குலோத்துங்கன் திருமந்திர ஓலைநாயகனைக் கூவி, “இன்னும் திறை செலுத்த வேண்டியவர் எவரேனும் உளரோ?” என்று உசாவினான். உடனே கருமத்தலைவன் மாமன்னனைப் பார்த்து, “அரசே! வட கலிங்க மன்னன் அனந்த பதும சோடகங்கன் என்பான் இருமுறை திறை செலுத்திலன்” எனப் பணிவுடன் மொழிந்தான். அச்செய்தியைக் கேட்டதும் குலோத்துங்கன் நகைத்தான். அப்பொழுது அவையிலிருந்தோர் ‘நகைப்பின் விளைவு யாதாகுமோ’ என்றெண்ணி அஞ்சினர். அபயன், “கலிங்க மன்னன் வலிமை மிக்க தனது மலையரணை நினைத்துத் தருக்கியிருக்கிறான் போலும்! அவன் செருக்கினை யழித்துச் சிறைப்பிடித்துக் கொணர்திர்” என்று ஆணையிட்டான். மன்னனது ஆணையைக் கேட்ட முதலமைச்சனும் தானைத் தலைவனுமாகிய கருணாகரத் தொண்டைமான் அபயனை நோக்கி, “வேந்தே! தருக்குக் கொண்ட கலிங்கனின் செருக்கினை யொழித்து நொடிப் பொழுதில் அவனைச் சிறைப்படுத்தி வருவேன்” என்று வீரமொழி பகர்ந்தான். அபயனும் “அவ்வாறே ஆகுக” என்று ஆணை தந்து அவையை விட்டகன்றான். இந்நிகழ்ச்சியே கலிங்கப் போருக்குக் காரணமாயிருந்தது.

சோழப் பெரும்படை வட கலிங்கம் நோக்கிப் புறப் பட்டது. கருணுகரத் தொண்டைமான் மதகளிற்றின் மீது இவர்ந்து மாபெரும் படைக்குத் தலைமை தாங்கிச் சென்ருன். வாண கோவரையன், முடிகொண்ட சோழன் என்ற தானைத் தலைவர்களும் அவனைப் பின்தொடர்ந்து சென்றனர். இரை வேட்டெழுந்த புலிகள் போலப் படை வீரர்கள் சூழ்ந்து நடந்தனர். படையின் நடையால் புழுதி எழுந்தது. அப் பெரும்படை பாலாறு, குசைத்தலை, பொன் முகரி, கொல்லி என்னும் நாலாறுகளையும் கடந்து நடந்தது; அப்பால் வயலாறு, பெண்ணை, மண்ணுறு, கிருட்டிணையும் பிற்படச் சென்றது; மேலும் கோதாவரி, பம்பை, கோதமை நதி களையும் தாண்டிக் கலிங்கம் சேர்ந்தது. கலிங்கத்தை யடைந்த சோழப்படை வீரர்கள் தங்கள் வருகையைத் தெரிவிக்கும் வகையில் சிலவூர்களிலே நெருப்பை மூட் டினர்; சில ஊர்களைச் சூறையாடினர்.

சோழப் பெரும் படையைக் கண்ட கலிங்க மக்கள் கலங்கினர்; "மதில்கள் இடிகின்றனவே, வீடுகள் எரி கின்றனவே, புகைகள் எழுகின்றனவே, ஐயோ! என் செய்வோம்" என்று அரற்றி அஞ்சினர். சோழப் பெரு வேந்தனுக்குத் திறை கொடாமையால் அவனுடைய படை வீரர்கள் படையெடுத்து வந்துள்ளனர் என்பதை உணர்ந்து கொண்டனர். உணர்ந்த அக்கலிங்க நாட்டு மக்கள் 'அரவர் அரவர்' என்று சொல்லி அஞ்சி ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து ஓடி மன்னவனைக் கண்டு சோழப் பெரும்படை வந்துள்ள செய்திபற்றிக் கூறினர்.

குடிமக்களின் கூக்குரலைக் கேட்ட கலிங்க மன்னன் அனந்தபதும சோடகங்கன் கனன்று கைபுடைத்தான்; வெய்துயிர்த்தான்; வியர்த்தான். "அபயனுக்கு யான் எளியவனுயிருப்பினும் அவனுடைய தானைக்கும் எளியன் ஆவனே!" என்று கூறிக் கோபத்தோடு வெடிபடச் சிரித்

தான். "நமது நாடு புகுதற்கரிய காடுடையது; கடத்தற்கரிய மலை யுடையது; கடல் உடையது. இதனை அச்சோழனுடைய படை அறிந்திலது போலும்! நல்லது, அதனை எதிர்த்தழிப்பேன்" என்று சினந்து கூறினன்.

அப்பொழுது தலைவன் வெகுண்டாலும் உறுதியே கூறும் எங்கராயன் என்னும் நல்லமைச்சன் சோடகங்கனை நோக்கி, "அரசே! யான் கூறும் சொற்களுக்குச் செவி சாய்த்தருள வேண்டும். விசயதரன் பெரும்படை மிக்க ஆற்றலுடையது. அப்படையால் பாண்டியர் கெட்ட கேட்டினை நீர் அறிந்திலை போலும். சக்கரக்கோட்டத்தில் வத்தவன் பட்ட பாட்டை நீர் உணர்ந்திலை போலும். கடலைக் கடந்து விழிஞம் என்னும் பதியைக் கொண்டதும் அவனுடைய பெரும்படையே. நவிலைப் பதியில் ஆயிரங் களிறுகளை அகப்படுத்தியதும் அச்சோழனின் ஆற்றல்மிகு படையே யாகும். என்னுரையைக் கேளாது போர் செய்ய எழுவீராயின், நாளை அப்படையின் முன் நிற்கும்போது யான் கூறிய உண்மையை உணர்வீர்" என்று அறிவுரை கூறினன். எங்கராயன் கூறிய அறிவுரைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயின.

கலிங்கப் படையும் சோழப் படையும் களத்திலே சந்தித்தன. இருதிறப் படைகளும் கடலொடு கடல் எதிரே கிடந்தாற்போன்று நின்றன. அலையொடு அலை மலைவது போலப் பரியொடு பரி மலைந்தது. மலையுடன் மலை பொருவது போன்று கரியொடு கரி பொருதது. புலியொடு புலி போரிடுவது போல வீரரொடு வீரர் போரிட்டனர். அவ்வீரர்கள் கைகளிலே விளங்கிய சிலைகள் இடிபோல் இடித்தன. அவர்தம் கண்களிலே சினத்தீ பொங்கியெழுந்தது. அதனல் குருதியாறு பெருகியது. அக்குருதி வெள்ளத்திலே கொற்றக் குடைகள் நுரைபோல் மிதந்தன. வெட்டுப்பட்டுக் கிடந்த யானைகள் இருபுறமும் கிடந்த

காட்சி, அவ்யாற்றின் இரு கரைகள்போல் இருந்தது. இறுதியில் ஆற்றல் மிக்க சோழப் படையின் முன் எதிர்த்து நிற்கவாற்ருது கலிங்கப் படை தோற்று ஓடியது.

தோல்வியடைந்த சோடகங்கன் சிறிய படையுடன் மலையிடை ஓடி ஒளிந்தான். கலிங்க மன்னன் இருப்பிடத்தை யறியச் சோழநாட்டு ஒற்றர்கள் காடும் மலையும் தேடியலைந் தனர். இறுதியில் அவன் இருப்பிடத்தை யறிந்து வந்து கருணுகரனுக்குத் தெரிவித்தனர். மலையிடை மறைந்திருந்த கலிங்கனைச் சோழநாட்டு வீரர்கள் பிடித்து வந்து தம் தானைத் தலைவன் முன் நிறுத்தினர். கருணுகரனும் கலிங்க மன்னனைச் சிறைப்படுத்தினுன்.

வெற்றி வீரனுகிய கருணுகரன் போரில் கிடைத்த பெரும்பொருள்களோடு சோழநாடு மீண்டான். அபயன் முன்னிலையில் அனந்த பதும சோடகங்கனை நிறுத்தி, அடி பணிந்து நின்ருன். குலோத்துங்கன் வீரர்களுக்கெல்லாம் பரிசில்களை வாரி வழங்கினுன்; கருணுகரனுக்கும் ஏனைய தானைத் தலைவர்களுக்கும் வரிசைகள் பல நல்கினுன்; கருணுகரனை வண்டை நகர்க்கு அதிபதியாக்கினுன்; அனந்தபதுமனுக்கு அறிவுரைகள் பல கூறி, நன்முறையில் நடந்துகொள்ளுமாறு பணித்து, அவன் நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

மேற்கூறிய வரலாற்று நிகழ்ச்சியைக் கவிநயத் தோடும், சந்தநயத்தோடும் கவிஞர் பெருமான் சயங் கொண்டார் பாடியுள்ள கலிங்கத்துப் பரணியைப் படித்து வீரமும் தீரமும் பெற்று விளங்குவீராக.

---

16. பிளாரன்சு நைட்டிங்கேல்

உலகிலே பெண்டிர் பலர் உயர்வமைந்த செயல்கள் செய்து உலகோர் புகழும் உன்னத நிலையை அடைந்துள்ளனர். அவர்களுள் தாதியர் தொழிலுக்கு வித்தாகி, அத்தொழில் புரிவோர்க்கு அருந்துணையாக விளங்கிய பிளாரன்சு நைட்டிங்கேல் அம்மையாரும் ஒருவராவர். அவர் வரலாறு சிறுவர்க்குப் பிறர் நலம் பேணும் பெற்றியை விளைப்பதாகும்.

இங்கிலாந்தில் 'டெர்பிஷயர்' என்னும் இடத்தில் நைட்டிங்கேல் என்ற பெயருடைய குடும்பமொன்று இருந்தது. அக்குடும்பத்தில் தோன்றியவர் வில்லியம் எட்வர்டு ஷோர் என்பவராவர். இங்கிலாந்து நாட்டில் தோன்றிய அவர் இத்தாலியில் உள்ள 'பிளாரன்சு' என்ற பகுதியில் சென்று தங்கி வாழ்ந்து வந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பிறந்த ஊரின் பெயரையும், குடும்பத்தின் பெயரையும் சேர்த்து, 'பிளாரன்சு நைட்டிங்கேல்' என்று அவர் பெயரிட்டார்.

கி. பி. 1820இல் பிறந்த நைட்டிங்கேல் அம்மையார் தம் சிறு வயதிலேயே அறிவும் அழகும் உடையவராய்த் திகழ்ந்தார். அவருடைய பெற்றோர்கள் ஏழை எளியவர்களுக்கு உதவும் நல்லியல்பு உடையவர்கள். அவர்கள் கிராமங்களுக்குப் போய் அங்குள்ள மக்களுக்கு உதவி புரிந்து வந்தார்கள். அவ்வாறு செல்லும்பொழுது நைட்டிங்கேல் அம்மையாரும் அவர்களுடன் செல்வதுண்டு. அதனால் பிறர்க்கு உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு இளமையிலேயே ஏற்பட்டது.

இவர் தம் வீட்டில் வளர்த்துவந்த நாய், கோழி, பூனை முதலிய உயிரினங்களை நன்முறையில் பாதுகாத்து வந்தார். அவற்றிற்கு ஏதேனும் நோய் வுந்தால் அந்நோயை நீக்க மிகவும் பாடுபடுவார். ஊரிலுள்ள மக்களும் தாம் வளர்க்கும் உயிரினங்களுக்கு வரும் நோய்களை அவ்வம்மையாரின் துணையால் நீக்கிக் கொண்டனர்.

பிளாரன்சு அம்மையாரின் தாயார் பிரான்ஸஸ் அம்மையார் ஆவர். அவர் மருந்துகளை வரவழைத்து வைத்திருந்து தம்மிடம் வருபவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து அவர்கள் நோயை நீக்கி மகிழ்வார். அவ்வமயங்களில் பிளாரன்சு அம்மையார் தம் அன்னையாரின் அருகில் அமைதியுடன் அமர்ந்து ஆர்வத்தோடு அச்செயல்களைக் கவனிப்பார். அதனால், இவரிடம் மருத்துவ முறைகளை அறிந்து கொள்ளும் பேரார்வம் இளமையிலேயே உண்டாகியது.

ஒரு நாள் பிளாரன்சு அம்மையார் குதிரைமீதமர்ந்து உல்லாசமாகத் தம் குருவுடன் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஆடு மேய்ப்பவன் ஒருவன் தன் ஆடுகளை ஒன்றுசேர்ப்பதற்கு மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தான். பிளாரன்சு அம்மையாருக்கு அவனை நன்கு தெரியும். அவன் அதற்கு முன்பெல்லாம் நாயின் உதவியால் ஆடுகளை ஒன்றுசேர்த்து ஓட்டி வருவதை இவர் கண்டிருக்கிறார். அதனால், பிளாரன்சு அம்மையார் ஆடு மேய்ப்பவனை நோக்கி, "உன்னுடைய நாய் எங்கே?" என்று கேட்டார். அதனைக் கேட்ட மேய்ப்பவன், "அம்மா தீயவன் எவனோ ஒருவன் எனது நாயை அடித்துக் காயப்படுத்திவிட்டான். அதனால், அந்நாய் நடக்க இயலாது எனது குடிசையின்முன் படுத்துக் கிடக்கின்றது. இனி என்னுடைய அருமை நாய் எனக்கு உதவப் போவதில்லை" என்று வருத்தத்தோடு கூறினான். அவன் கூறியதைக்

கேட்ட பிளாரன்சு அம்மையார் பெரிதும் வருந்தினார். நாயிருந்த இடத்திற்குச் சென்று அதற்கு மருத்துவம் செய்தார். நாய் தனது வீக்கம் குறைந்து மகிழ்வுறும் நிலையைக் கண்ட பிறகே தம் இல்லத்திற்குத் திரும்பினார். இச்செயல் இவருடைய அருள் உள்ளத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

பிளாரன்சு அம்மையார் தம் தந்தையாரிடமே பிரெஞ்சு, செர்மன், கிரீக், இத்தாலி, இல்த்தீன் முதலிய மொழிகளைப் பயின்று வந்தார். டெனிசன் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய பாடல்களையும் அவரிடம் கற்று வந்தார். இவ்வாறு கற்று வந்த அம்மையார் தமது பதினெட்டாம் வயதில் இங்கிலாந்து அரசியராக விளங்கிய விக்டோரியா அரசியாருக்கு அறிமுகம் செய்துவைக்கப் பெற்றார். அன்று முதற் கொண்டு இலண்டன் மாநகரத்தில் மருத்துவப் பயிற்சியில் ஈடுபட்டார். எடின்பரோ, பிரான்சு, இத்தாலி, கெய்சர்வெர்த் முதலிய இடங்களுக்குச் சென்று மருத்துவக் கலையைக் கற்று அதில் தேர்ச்சி பெற்றார். இவருடைய ஆற்றலை யறிந்த சீமாட்டிகளின் மருத்துவச் சாலையை நடத்தி வந்த செல்வப் பெருமக்கள் தங்கள் மருத்துவச் சாலையின் மேற் பார்வையாளர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு இவரை வேண்டினர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி கி. பி. 1853ஆம் ஆண்டில் அப்பதவியை நைட்டிங்கேல் அம்மையார் ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு அம்மையார் பணியாற்றி வரும்பொழுது கி. பி. 1854ஆம் ஆண்டு கிரிமியா என்ற இடத்தில் போர் தொடங்கியது. அப்போரில் இங்கிலாந்து, பிரான்சு, துருக்கி ஆகிய நாட்டினர் ஒரு பக்கமாகவும், உருஷ்ய நாட்டினர் ஒரு பக்கமாகவும் நின்றனர். அப்போரில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர். பலர் கைகளை யிழந்தும் கால்களை யிழந்தும் குற்றுயிராய்க் கிடந்தனர். அப்பொழுது

மழையும் பெய்யத் தொடங்கியது. அதனல், காயமுற்ற வீரர்கள் பெரிதும் தொல்லையுற்றனர். அப் போர்வீரர் களுக்கு உதவிபுரியும் பணியை மேற்கொள்ளுமாறு நைட்டிங்கேல் அம்மையார் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அம்மையார் காயம்பட்ட வீரர்களைக் கொண்டுவந்து வைத்திருந்த ஸ்குட்டாரி மருத்துவச் சாலையை அடைந்தார். அம் மருத்துவச் சாலை தூய்மையற்று விளங்கியது. நோயாளி கள் தங்குவதற்கேற்ற வசதியற்றதாய் இருந்தது. எலிகளின் தொல்லையும் அங்கு மிகுதியாக இருந்தது. சீர்கெட்ட நிலையிலிருந்த அம்மருத்துவச் சாலையை அம்மையார் அரும் பாடுபட்டுச் சீர்திருத்தம் செய்து, நோயாளிகளுக்கு வாழ முடியுமென்ற நம்பிக்கையை ஊட்டினர். அமைதியாகவும், புன்முறுவல் பூத்த முகத்தோடும், ஆறுதல் மொழி கூறியும் இவர் பணியாற்றி வந்ததைக் கண்ட நோயாளிகள் அனைவரும் இவரைக் கண்கண்ட தெய்வமாகக் கருதினர். நல்ல காற்றும், தூய தண்ணீரும், துப்புரவான இடமும் உடல் நலத்தைப் பாதுகாப்பன என்று அறிந்த நைட்டிங்கேல் அம்மையார் நோயாளிகளுக்கு அவ் வசதிகளை அம்மருத்துவ மனையில் தம் முயற்சியால் உண்டாக்கித் தந்தார். தாதியர்களுக்கு வேண்டிய உணவு வசதியும் செய்து தந்தார். அம்மையார் தாம் வந்த காலத்தில் அஞ்சத்தக்க நிலையிலிருந்த ஸ்குட்டாரி மருத்துவ மனையை மிக ஒழுங்குபட்டதாகவும், மிக்க வசதியுடைய தாகவும் மாற்றி அமைத்தார். பிழைக்கமாட்டாதவர்கள் என்று பல மருத்துவர்களால் முடிவு செய்யப்பட்டவர்களை அம்மையார் தம் அயராவுழைப்பால் பிழைத்து வாழும்படி செய்தார்.

இவ்வாறு கிரிமியாப் போரில் ஈடுபட்டு வருந்திய வீரர் களுக்கு உதவிபுரிந்த நைட்டிங்கேல் அம்மையாருக்கு

விக்டோரியா அரசியாரும், துருக்கிய அரசராக விளங்கிய சுல்தானும் தங்கப் பதக்கத்தையும், ஒளி பொருந்திய கற்கள் பதித்த அணிகலனையும் அன்பளிப்பாக வழங்கினர். கி. பி. 1907ஆம் ஆண்டில் ஏழாம் எட்வர்ட் மன்னர், பெண்கள் எவருக்கும் அதுவரை அளிக்காத "அரசன் தகுதிச் சுற்றம்" (The Order of Merit) என்ற பெரும் பட்டத்தை அம்மையார்க்கு அளித்தார்.

இங்ஙனம் பாரோர் புகழுமாறு போர் வீரர்கட்குப் பணி புரிந்தும், மருத்துவத் தொழிலிற் சிறந்தும் வாழ்ந்த நைட்டிங்கேல் அம்மையார் கி. பி. 1910ஆம் ஆண்டில் தமது 91ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் புகழ் ஓங்குவதாக!

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. தேவாரம்

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவசமய குரவர்களால் பாடப்பெற்ற பாக்களின் தொகுதிக்குத் தேவாரம் என்று பெயர். தே+வாரம்=தேவாரம். தெய்வமாகிய சிவபெருமான் சம்பந்தமான இசைப்பாட்டு என்று பொருள். தே+ஆரம்=தேவாரம். தெய்வத்திற்குச் சூட்டப்படும் பூமாலை போன்ற பாமாலை என்றும் பொருள் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: திருநாவுக்கரசர். சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இயற்பெயர்: மருள் நீக்கியார். ஊர்: திருவாமூர். பெற்றோர்: புகழனார், மாதினியார். தமக்கை: திலகவதி. குலம்: வேளாளர். காலம்: கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இறைவனால் நாவுக்கரசர் என்று அழைக்கப்பட்டவர் என்பர். வேறு பெயர்கள்: அப்பர், வாகீசர்.

அருஞ்சொற் பொருள்

பாவிப்பார் - தொழுபவர். மேலவர் - தேவர். போற்றி-போற்றுகின்றேன். கயிலைமலை-கயிலாயமலை.

2. திருவாசகம்

திரு+வாசகம்=திருவாசகம். அழகிய சொற்களால் ஆன பாமாலை யாதலின் இப்பெயர் பெற்றது. வாசகம்-சொல். இங்கு நூலை உணர்த்தியது. 'திரு' அடை மொழியாகப் பொருந்தியுள்ளது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: மாணிக்கவாசகர். சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இயற்பெயர்: திருவாதவூரர். நாடு:

பாண்டியநாடு ஊர்: திருவாதவூர். குலம்: அந்தணர் குலம். ஆதரித்தவர்: அரிமர்த்தன பாண்டியன். இயற்றிய வேறு நூல்: திருக்கோவையார். காலம்: கி. பி. 3ஆம் நூற்றாண்டென்றும், கி. பி. 9 ஆம் நூற்றாண்டென்றும் கூறுவர்.

அருஞ்சொற் பொருள்

பெருந்துறையான் - திருப்பெருந்துறை என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். இருள்-அறியாமையாகிய இருள். அன்பு அமைத்து-அன்பு உண்டாகுமாறு செய்து. ஊர் ஆகக் கொண்டான் - உறைவிடமாகக் கொண்டான்.

3. திவ்வியப் பிரபந்தம்

இந்நூல் வைணவ சமய ஆச்சாரியர்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்கள் திருமாலைக் குறித்துப் பாடிய தமிழ் வேதம். இது தெய்வத்தன்மை வாய்ந்த திவ்வியமான நாலாயிரம் பாசுரங்களை உடையது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: நம்மாழ்வார். இவர் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். நாடு: பாண்டியநாடு. ஊர்: திருநகரி எனப்படும் திருக்குருகூர். பெற்றோர்: காரியார், உடைய நங்கையார். குலம்: வேளாளர். வழங்கும் வேறு பெயர்கள்: மாறன், சடகோபன், வகுளாபரணர், பராங்குசர். காலம்: கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

அருஞ்சொற் பொருள்

வம்மின்-வாருங்கள். உய்மின்-பிழையுங்கள். மன்-நிலை பெற்ற. இன்கவி-இனிய பாடல். ஏத்தினல்-போற்றினல்.

4. தேம்பாவணி

இந்நூல் ஏசுநாதரது தந்தையாகிய சூசை முனிவரது வரலாற்றைக் கூறும் நூல். தேம்பா+அணி=தேம்பாவணி. வாடாத புகழ் மணம் கமழும் பாக்களாலாகிய நூல் என்பது இதன் பொருள்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: வீரமா முனிவர். பிறப்பிடம்: இத்தாலி நாட்டில் மந்துவா பிரதேசத்திலுள்ள காஸ்திகிளியோனே என்னும் ஊர். இயற்பெயர்: பெஸ்கி. வேறு பெயர்: தைரிய நாதர். இவரது தமிழாசிரியர்: சுப்பிரதீபக் கவிராயர். இயற்றிய வேறு நூல்கள்: தொன்னூல் விளக்கம், சதுரக ராதி, வேத விளக்கம் முதலியன. காலம்: கி. பி. 1680-1746.

அருஞ்சொற் பொருள்

தயை-அருள். முனிவோய் - (தீமை செய்வோரைக்) கோபிப்பவனுவாய். சினத்திற்கு-கோபங் கொள்ளுதற்குரிய காலத்திலேயும். கனிவோய்-இளகிய மனமுடையவனுவாய். கலை அற்று-கலைகளை (ஒருவர் எடுத்துரைக்க) அறிதலின்றி. தொனி-ஓசை. நின்று - (உட்பொருளாய்) நின்று. மாறு நிலை கொள்- (தான் யாதொரு) மாறுபாடும் அடையாத நிலையைப் பெற்ற. மரபு-இயல்பு. ஈறும் தவிர்ந்து-முடிவுற்றதாயுள்ள.

5. சீருப் புராணம்

இந்நூல் இசுலாம் மதத்தை உலகுக்கு வழங்கிய முகம்மது நபியின் வரலாற்றைக் கூறும் நூல். 'சீறு' என்பது 'சீறத்' என்ற அரபுச் சொல்லிலிருந்து உண்டானதாகும். 'சீறத்' என்ற சொல்லுக்கு வரலாறு என்று பொருள்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: உமறுப் புலவர். நாடு: பாண்டிய நாடு. ஊர்: கீழக்கரை. தந்தையார்: சேகு முதலியார். ஆசிரியர்: கடிகை முத்துப்புலவர். ஆதரித்தவர்: சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல் காதர். இயற்றிய வேறு நூல்கள்: முதுமொழி மாலை, நொண்டி நாடகம். காலம்: கி. பி. 17ஆம் நூற்றுண்டு.

அருஞ்சொற் பொருள்

நெறி - அறவழி. மருள் - மயக்கம், திரிபு உணர்ச்சி. மடிந்து - மழுங்கி, குறைந்து. குபிரின் குலம் அறுத்து -

இசுலாத்தை ஏற்க மறுத்து நின்ற கூட்டத்தினரை அழித்து-முழுமதி - பூரணச் சந்திரன்.

பயிற்சி

1. நாவுக்கரசர் இறைவனை எவ்வாறு போற்றியுள்ளார்?
2. மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானின் இயல்புகளாகக் குறிப்பிடுவன யாவை ?
3. நம்மாழ்வார் புலவர்களை அழைத்துக் கூறும் செய்திகள் யாவை?
4. வீரமாமுனிவர் ஏசுபெருமானை எவ்வாறு போற்றி யுள்ளார் ?
5. நபிகள் நாயகம் தோன்றிய தன்மை உமறுப் புலவரால் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

II. நீதிப் பகுதி

1. திருக்குறள்

திரு+குறள் = திருக்குறள். குறள் - இரண்டடி வெண்பா. சிறந்த குறள் வெண்பாவால் ஆகிய நூல் என்பது பொருள். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூப்பெரும் பிரிவுகளை உடையது. அதிகாரத்திற்குப் பத்துக் குறட்பாக்களாக 133 அதிகாரங்களை உடையது. 'தமிழ் மறை' என வழங்கும் இந்நூல் சங்கநூல் தொகுதிகளுள் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதியைச் சார்ந்தது. பல மொழிகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றப் படுவதே இதன் சிறப்புக்கு அறிகுறியாகும்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : திருவள்ளுவர். இவர் சற்றேறக்குறைய ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் ; நூலறிவும், உலகியல் அறிவும், மதி நுட்பமும் உடையவர் ; உலகத்தவர் அனைவரும் போற்றும் பெரும்புலவராவர். இவரைப் பற்றிய உண்மையான வரலாறு தெரியவில்லை.

அருஞ்சொற் பொருள்

1. உவமை - ஒப்புமை. இல்லாதான் - இல்லாத இறைவன். தாள் - திருவடி. மாற்றல்-நீக்குதல். மாற்றல் : தொழிற் பெயர்.

2. செயற்கு அரிய - செய்தற்கு அருமையான காரியங்கள். செய்கலாதார் - செய்ய முடியாதவர்.

3. ஊஉங்கு - மிகுதி. ஆக்கமும் - செல்வமும். கேடு - கெடுதல். இல்லை : குறிப்பு வினைமுற்று.

4. ஆற்றும் - செய்யும். என் நோற்றான் கொல் - (இவனை மகனாகப் பெறுவதற்கு) என்ன தவத்தைச் செய்தானோ? ஆற்றும் : பெயரெச்சம்.

5. எல்லாம் - எல்லாப் பொருள்களாலும். என்பும் - (பொருள்களால் அன்றித் தமது) உடம்பாலும்.

6. புறத்தது ஆ(க) - (வீட்டின்) வெளிப்புறத்தில் தங்கி இருக்க. சாவா மருந்து - சாக்காட்டை நீக்கும் அமிழ்தம். வேண்டல் - விரும்புதல். பாற்று அன்று-தன்மை உடையது அன்று. வேண்டல் : தொழிற் பெயர். அன்று : குறிப்பு வினைமுற்று.

7. எந்நன்றி - எத்தகைய சிறந்த அறம். உய்வு - (பாவத்தினின்று) தப்பிப் பிழைக்கும் வழி. செய்ந்நன்றி- (பிறர்) செய்த உதவி. மகற்கு - மகனுக்கு. உண்டு : குறிப்பு வினைமுற்று.

8. சமன் செய்து-(முன்னே தான்) சமனாக நின்று- சீர் தூக்கும் - (பின் தன்னிடம் வைத்த பொருளை) அளவு செய்யும். கோல் - தராசுக்கோல். அமைந்து - (நடுவுநிலைமையோடு) பொருந்தி. ஒருபால் கோடாமை - ஒரு பக்கம் சாயாதிருத்தல். அமைந்து : வினையெச்சம். கோடாமை : தொழிற் பெயர்.

9. உள் ஆறும் - உள்ளத்தில் ஆறும். வடு - தழும்பு. சுட்ட : பெயரெச்சம்.

10. அழுக்காறு-பொறாமை. ஆக்கம் போன்று-செல்வம் (நிலைத்து நில்லாதது) போன்று. உடையான்கண் - உடையவனிடம். உடையான்கண் : ஏழாம் வேற்றுமை உருபு.

11. அகழ்வாரை - (தன்னைத்) தோண்டுபவரை. தாங்கும் -(விழாமல்) சுமக்கும். இகழ்வார் - இழிவாகப் பேசுபவர். தலை - சிறந்ததாகும். பொறுத்தல் : தொழிற் பெயர்.

12. அழுக்கறுப்பான் - பொறாமையினால் விலக்குபவன். சுற்றம் - உறவினர். உடுப்பதூஉம்-உடுக்கும் உடையும்.

13. வெஃகா . (பிறர் பொருளை) விரும்பாத. திரு - செல்வம், திருமகள். திறன் அறிந்து - (தான் அடைதற்குரிய) வழியினை அறிந்து. ஆங்கு - அவ்வழியிலே. அறிந்து : வினையெச்சம்.

14. பல்லார் - (அறிவுடையவர்) பலரும். முனிய - வெறுக்க. பயன் இல - பயன் இல்லாத சொற்கள். எள்ளப் படும் - இகழப்படுவான்.

15. உலகு - உலகம் நடைபெறுதல். அவாம் - விரும்பிச் செய்யும். ஊருணி - ஊரார் நீர் உண்ணுதற்கு இடமான குளம். நிறைந்த அற்று - நிறைந்ததைப்போலப் பயன் படும்.

16. ஈதல் - (வறியவர்க்குக்) கொடுத்திடுக. இசைபட - புகழ் உண்டாக. வாழ்தல் - வாழ்ந்திடுக. ஊதியம் - பயன் தருவது.

17. அவ்வுலகம் - வீட்டுலகத்து இன்பம். இவ்வுலகம் - இவ்வுலகத்து இன்பம். இல்லாகி யாங்கு - இல்லை ஆயினாற் போல.

18. களவினால் - (பிறரை) வஞ்சித்தலால். ஆவதுபோல - வளர்வது போல(த் தோன்றி). அளவு இறந்து - (தன்) எல்லையைக் கடந்து. இறந்து : வினையெச்சம்.

19. புறம் தூய்மை - உடம்பு தூயதாகும் தன்மை அகம் - உள்ளம். வாய்மையால் - உண்மை மொழியினால்.

20. பிறிதின் நோய் - பிறிதோர் உயிர்க்கு வரும் துன்பம். போற்றுக் கடை - எண்ணி நீக்காத இடத்து. போற்றுக் கடை : ஏழாம் வேற்றுமை உருபு.

21. தூங்காமை - சோம்பி இராமல் விரைவாகச் செய் யும் தன்மை. துணிவுடைமை - வீரமுடைமை, தைரிய முடைமை. நீங்கா - நீங்காதிருக்க வேண்டுவனவாகும்.

22. உடையார் - செல்வர். இல்லார் - வறியவர். ஏக்கற் றும் - ஆசையினால் தாழ்ந்தும். கற்றார் - கற்றாரே (சிறந்தவ ராவர்.) கடையரே - இழிந்தவரே யாவர்.

23. கேட்க - (சிறந்த நூற்பொருளை அறிஞர் கூறக்) கேட்க. அஃது - அக்கேள்வியறிவு. ஒற்கத்தின் - தளர்ச்சி வந்த இடத்து. ஊற்று ஆம் துணை - ஆதாரமான துணை யாகும்.

24. அஞ்சுவது - **அஞ்சத்தக்க பழி, பாவம்.** அஞ்சாமை- **அஞ்சாது** செய்து நிற்றல். பேதைமை - அறியாமை. அஞ்சு தல் - அஞ்சி விலக்குதல். **அஞ்சுதல்: தொழிற் பெயர்.**

25. வருமுன்னர் - (குற்றம்) வருமுன்பு. எரி முன்னர் - (சிறு) தீயின் முன்பு வைத்த. **வைத்தூறு** - வைக்கோல் **போர்.**

26. நல்லார் தொடர்கை - பெரியவருடைய நட்பு. விடல் - கொள்ளாது ஒழிதல். பத்து அடுத்த - பதின் மடங்கு.

27. நெடும்புனலுள் - ஆழமான நீரில். வெல்லும் - (பிற உயிர்களை) வென்றுவிடும். அடும் - வென்றுவிடும். பிற - பிற உயிர்கள் எல்லாம்.

28. பெருமைக்கும் - (தாம் பலவகையாலும் அடையும்) பெருமைக்கும். கட்டளைக்கல் - உரை கல்.

29. அரண் - (காடு, மலை முதலிய) அரண்கள். ஆங்கு - அதுபோல. பொச்சாப்பு - மறதி. நன்கு - செல்வம் (முதலி யன இருந்தும்.)

30. கண்ணிலன் - இரக்கம் இல்லாதவன். நீடு இன்றி- நிலைத்து நில்லாமல்.

31. மலர் நீட்டம் - நீர்ப்பூக்களின் தண்டின் நீளங்கள். உள்ளத்து அனையது - முயற்சியின் அளவை ஒத்ததாகும்.

32. நெடுநீர் - (விரைவில் செய்து முடிக்க வேண்டியதை) நீண்டகாலம் செய்யும் தன்மை. மடி - சோம்பல். துயில் - தூக்கம். கெடுநீரார் - அழியும் தன்மையுடையார். காமக் கலன் - விரும்பி ஏறும் கப்பல்.

33. நீரவர் கேண்மை - பெருந்தன்மை யுடையவரின் நட்பு. நிறைநீர - பிறைச் சந்திரன் வளர்வதுபோல் வளர்வ தாகும். பின்நீர - (நிறைந்த சந்திரன்) பின்பு குறைவது போல் குறைந்து மறையும் தன்மையுடையது.

34. கவரிமா அன்னர் - கவரிமானைப் போன்ற மானம் உடையவர். நீப்பர் - விடுவர். மானம் வரின் - மானம் அழிய நேர்ந்தால்.

35. உண்டு - (பிறர்க்குக் கொடுத்துத் தாமும்) உண்டு, வாழ்வாரே - வாழும் உழவரே. மற்று எல்லாம் - மற்றைத் தொழில் செய்பவரெல்லாம். தொழுது - (பிறரை) வணங்கி.

பயிற்சி

1. மனக்கவலே மாற்ற நாம் யாது செய்யவேண்டும்?
2. பெரியர், சிறியர்—குறட்பாவிலிருந்து விளக்கந் தருக.
3. அறன்வலியுறுத்தல், அன்புடைமை, மக்கட்பேறு—இத்தலேப்புக்களில் அமைந்த பாடல்களின் கருத்தினே எழுதுக.
4. விரும்பத்தகாத செயலென்று வள்ளுவர் எதனேக் குறிப்பிட்டுள்ளார்?
5. சான்ருேர்க்கணி யாது?
6. அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை—இத் தலேப்புக் களில் வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?
7. ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல’—இவ் வுவமையை விளக்கி எழுதுக.
8. அழுக்காறு கொள்ளுவதால் வரும் தீமை யாது?
9. எவரிடம் திருமகள் சென்று சேர்வாள்?
10. எல்லாராலும் இகழப்படுபவன் யாவன்?
11. அறிவுடையானிடமுள்ள செல்வம் எவ்வாறு பயன் படும்?
12. புகழ், அருளுடைமை, வாய்மை—இத் தலேப்புக் களில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளன யாவை?
13. எந்த நிலேயில் அறிவு பயனில்லாது போகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்?
14. அரசர்க்கு வேண்டுவன யாவை?
15. எவ்வாறு கற்றவர் உயர்ந்தோர் ஆவர்? இழிந்தோ ராகக் கருதப்படுபவர் யாவர்?

16. கேள்வியின் சிறப்பினை வள்ளுவர் எவ்வாறு நமக்கு அறிவித்துள்ளார் ?

17. அறிவுடைய செயல் யாது? பேதைமையுடைய செயல் யாது?

18. 'எரிமுன்னர் வைத்தூறு போல'—இவ்வுவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

19. முதலையை எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்கும் செய்தி யாது?

20. பெருமை, சிறுமை—இவற்றை எவ்வாறு அறியலாம்?

21. 'அச்சம் உடையார்க்கரண் இல்லை'—இத்தொடரின் பொருளை எழுதி, அதனல் விளக்கப்படும் செய்தியையும் வரைக.

22. கெடுநீரார் காமக்கலன் எவை ?

23. கவரிமாவின் இயல்பைக்கொண்டு ஆசிரியர் விளக்கும் செய்தி யாது ?

24. உழவின் சிறப்பினை எழுதுக.

2. நீதிநெறி விளக்கம்

இந்நூல் நீதி வழியை விளக்குவது ; 101 வெண்பாக்களைக் கொண்டது ; சொல் செறிவும், பொருள் செறிவும் உடையது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : குமர குருபரர். நாடு : பாண்டிய நாடு. ஊர் : ஸ்ரீவைகுண்டம். குலம் : வேளாளர். பெற்ருேர் : சண்முக சிகாமணிக் கவிராயர், சிவகாமி அம்மை. இவர் பிறந்து ஐந்தாண்டுகள் வரை பேசாமல் இருந்து, திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் திறம் பெற்றவர். இயற்றிய நூல்கள் : கந்தர் கலிவெண்பா, மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனுட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம், சகலகலா

வல்லி மாலை, நீதிநெறி விளக்கம் முதலியன. காலம் : சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

அருஞ்சொற் பொருள்

1. அவை - (கற்றோர்) சபை. மெய்விதிர்ப்பார் - உடல் நடுங்குபவர். ஆகுலச் சொல் - ஆரவாரச் சொல். நவை - குற்றம். ஈத்து உண்ணார் - (பிறர்க்குக்) கொடுத்து உண்ணாதவர். நல்கூர்ந்தார் - வறியவர். இன்னலமும் - (ஈகை) முதலிய இனிமையான தன்மைகளும். பூத்தலின் - உண்டாவதைவிட. அஞ்சி : வினையெச்சம்.

2. கண்நோக்கு - அன்பான கண்ணின் பார்வை. அரும்பு ஆ(க) - மொட்டாகவும். நாள் மலரா(க) - புதுப் பூவாகவும். தீம்காயா(க) - இனிமை நிறைந்த காயாகவும். வன்மை - ஈகை. பலம் ஆ(க) - பழமாகவும். கற்பதரு - கற்பக மரம்.

3. ஊன் உடம்பு-மாமிசத்தாலாகிய இவ்வுடல். தளர் நடையது - (பிணி, மூப்பு, சாக்காடு முதலியவற்றால்) நிலை தளரும் தன்மையுடையது. ஓம்புதற்கே - வளர்க்கவே. உடம் பட்டார்கள் - தீர்மானித்தவர்கள். தம் களைகண் ஆக - தம்மை ஆதாரமாக. உற்ற உழியும் - (சிறு துன்பம்) வந்த விடத்தும். விளைவு - பயன். உன்னி - கருதி. உற்ற உழி : ஏழாம் வேற்றுமையுருபு. வெற்றுடம்பு - பயனில்லாத (தம்) ஊன் உடம்பினை.

4. செய்வினையின் மூலம் - செய்யும் அக்காரியத்தின் காரணத்தையும். சூழ்வன தாம் சூழ்ந்து - ஆராய வேண்டியவற்றை ஆராய்ந்து. துணைமை - துணை செய்ய இருப்போர். ஆள்வினை - முயற்சி. ஆளப்படும் - (பின்னர்ச்) செய்யப்படும். ஆங்கு, தாம் என்பன அசைகள்.

5. குறளை - புறங்கூறல். எய்தாமை - வராமல். வழுக் காத்து - குற்றங்களை நீக்கி. புலமைந்தும் மெய்யில் காத்து - ஐம்புலன்களையும் உடம்பின்கண் அடக்கியாண்டு. நலம் அன்றே - நற்செயலன்றோ. எனல் - என்று சொல்லத்தகும்.

பயிற்சி

1. பூத்தலிற் பூவாமை நன்று—எவை?
2. சான்றாண்மை என்ற தலைப்பில் நீதிநெறி விளக்க ஆசிரியர் கூறியுள்ள செய்திகள் யாவை?
3. அடைக்கலப் பொருளைக் காத்தலின் சிறப்பினை நீதிநெறி விளக்க ஆசிரியர் எவ்வாறு கூறியுள்ளார்?
4. எவற்றை ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய முற்பட வேண்டும் என்று ஆசிரியர் கூறியுள்ளார்?
5. நல்லாறு என்று நவிலப்படுவது யாது?

3. நாலடியார்

நான்கு+அடி=நாலடி. நான்காகிய அடிகளை உடைய வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். 'ஆர்' விகுதி சிறப்புக் கருதிச் சேர்க்கப்பட்டது. இந்நூல் சங்கநூல் தொகுதிகளுள் **பதினெண் கீழ்க்கணக்குத்** தொகுதியைச் சார்ந்தது. அதிகாரத்திற்கு 10 வெண்பாக்கள் வீதம் 40 அதிகாரங்களையும், 400 பாக்களையும் உடையது. சிறப்பு: திருக்குறளை ஒத்த சிறப்புடையது. 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற தொடர் இந்நூலின் சிறப்பை உணர்த்தும். வேறு பெயர்கள்: நாலடி நானூறு, வேளாண் வேதம்.

நாலடியார் தோன்றிய வரலாறு

எண்ணாயிரம் சமண முனிவர்கள் பஞ்சத்தால் தம் நாடு விட்டுப் பாண்டிய நாடு அடைந்து பாண்டிய மன்னனால் ஆதரிக்கப் பெற்று வாழ்ந்தனர். சில ஆண்டுகளில் தம் நாடு செழித்தமையின், தம் நாடு செல்ல மன்னனிடம் விடை கேட்டனர். முனிவர்களைப் பிரிய மனமில்லா மன்னன் விடை தரவில்லை. முனிவர்கள் ஒருநாள் இரவில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பாடல் பாடித் தம் இருக்கையின்கீழ் வைத்துவிட்டுத் தம் நாடு சென்றனர். அடுத்த நாள் ஏவலர் முனிவர்கள் சென்றுவிட்ட செய்தியைக் கூறி, ஏடுகளைத் தந்தனர். பாண்டியன் சினங்கொண்டு ஏடுகளை வையை

ஆற்றில் எறியச் செய்தான். அவ்வேடுகளுள் 400 ஏடுகள் நான்கடி எதிரேறிச் சென்றன. அவற்றின் பெருமையை அறிந்த பாண்டியன் பதுமனுர் என்னும் புலவரைக் கொண்டு அப்பாடல்களை நாலடியார் என்னும் நூலாகத் தொகுப்பித்தான்.

அருஞ்சொற் பொருள்

1. கனைகடல் - ஒலிக்கின்ற கடல். தண் சேர்ப்ப - குளிர்ந்த நீர்த்துறையை உடையவனே. நுனியின் தின்றால் அற்று - நுனியிலிருந்து தின்றாற் போல நாள் செல்லச் செல்ல விருப்பந்தருவதாகும். ஈரம் - அன்பு. நுனி நீக்கி - நுனியிலிருந்து தின்னுதலை நீக்கி. தூரின் - வேரினின்று. தகைத்து + அரோ = தகைத்தரோ. அரோ : அசைநிலை.

2. விசையின் - (எய்த) வேகத்தினுல். அரிமா - சிங்கமாகிய மிருகம். பிழைப்பு - தப்பிப்போக. எய்த கோல் - எய்த அம்பு. இசையும் எனினும் - (ஒரு காரியம் தம்மால்) எளிதில் முடியுமாயினும். எண்ணுவர் - எண்ணிச் செய்வர்.

3. எஞ்ஞான்றும் - எல்லா நாளிலும் அறிமின் - அறிந்து நடப்பீர். கூற்றம் - இயமன். வஞ்சம் - வஞ்சிக்கும் செயல். போற்றுமின் - (உம்மிடம் தோன்ருமல்) பாதுகாப்பீர். வினை தீயார் - செயல் தீயவர். பெறுமின் - கேட்பீர்.

4. நல்ல குலம் - உயர்குலப் பிறப்பு. பொருள் இல்லை - (அச் சொற்களுக்குப்) பொருளில்லை. தொல் சிறப்பின் - தொன்றுதொட்டு வரும் சிறப்பினையுடைய. ஒண் பொருள் - ஒளியைத் தரும் பொருள். குலம் ஆகும் - குலப்பிறப்பின் மேன்மை உண்டாகும்.

5. கடமா - யானை. தொலைச்சிய - வெற்றி கொண்ட. கான் உறை - காட்டில் வாழும். இடம் வீழ்ந்தது - (தன்னுல் அடிக்கப்பட்டு) இடப்பக்கம் விழுந்த மிருகத்தை. விழுமியோர் - சிறந்தவர். இடம் உடைய - (பரந்த) இடத்தையுடைய. வானகம் - சுவர்க்கம். கை உறினும் - (முயற்சி இல்லாமல்) கிடைப்பதாயினும். மானம் அழுங்க - தன் மானம் கெடும்படி. வரின் - கிடைப்பதாயின்.

பயிற்சி

1. கரும்பினைக் கொண்டு நாலடியார் விளக்கும் செய்தியை எழுதுக.
2. மேன்மக்களின் இயல்பு யாது? அதனை ஆசிரியர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
3. நல்லினஞ் சேர்தல் என்ற தலைப்பில் நாலடியார் நவில்வன யாவை?
4. உயர்ந்த குலம் என்பது எவற்றால் அறியப்படும்?
5. வேங்கையின் இயல்பு யாது? அதனைக் கொண்டு ஆசிரியர் விளக்கியுள்ள செய்தி யாது?

4. பழமொழி

இந்நூல், ஒவ்வொரு வெண்பாவிலும் கடைசி அடியிலோ கடைசி ஈரடிகளிலோ ஒரு பழமொழி வைத்துப் பாடப் பட்டுள்ளமையின் பழமொழி எனப் பெயர் பெற்றது. இந் நூல் சங்க நூல் தொகுதிகளுள் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதியைச் சார்ந்தது. 400 வெண்பாக்களை உடையது. இந்நூலின் சிற்சில பாடல்கள் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டுள்ளமையின் வரலாற்று ஆராய்ச்சிக்கு இந்நூல் துணை புரிகிறது. வேறு பெயர் : பழமொழி நானூறு.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : முன்றுறையரையனார். நாடு : பாண்டிய நாடு. ஆண்ட இடம் : முன்றுறை. குலம் : அரச குலம். சமயம் : சமணம். காலம் : கடைச்சங்க காலம்.

அருஞ்சொற் பொருள்

1. பூ புனல் ஊர-அழகிய நீர் வளம் நிரம்பிய ஊரனே. பாம்பின - பாம்பினுடைய. புலமை தெரிதல் - அறிவினால் தெரிந்து கொள்ளுதல். புலம் - அறிவு. புலனும் - விளங்கும். பொதுமக்கட்கு-கல்வியறிவில்லாதவர்களுக்கு. ஆகாது-விளங் காது. பழமொழி : பாம்பறியும் பாம்பின கால்.

2. நெறி மடல்-செறிந்த மடல்கள். பூந்தாழை-அழகிய தாழைகள். நீடு நீர் சேர்ப்ப-வளர்ந்துள்ள கடல் நாடனே. தொல்லே அளித்தார்-முன்னுளில் கொடுத்த பாரி, பேகன். அறிமடம் - அறிந்தும் அறியாது போன்று இருத்தல். கேட்டறிதும் : தன்மைப் பன்மை வினைமுற்று.

3. வேளாண்மை செய்து-(தம்மோடு தொடர்பு இல்லாதவர்களுக்கு வேண்டிய) உதவியைச் செய்து. வெஞ்சமத்து - கொடிய போரினிடத்து. தாளாண்மை-முயற்சி. தாழ்க்கும்-குறைக்கும். மடி கோள் இலராய் - சோம்பலேக் கொள்ளாதவராய் திருந்துதல் - செப்பம் அடைதல். இன்று : குறிப்பு வினைமுற்று.

4. சுடப்பட்டு-(பகைவர் மூட்டிய தீயால்) கொளுத்தப் பட்டு. சோழன் மகனும் - சோழனது மகனுகிய கரிகாற் சோழனும். பிடர்த்தலேப் பேரானே - இரும்பிடர்த்தலேயார் என்னும் பெயருடைய தன் மாமனே. கடைக்கால் - பிற்காலத்தில். செயிர் - குற்றம். செலீஇயினுன் - செலுத்திஞன். எய்தா வினே - அடைய முடியாததொரு நல்வினேப் பயன்.

5. பரப்பில்-கடலினிடத்தில். தூங்கு நீர்ச்சேர்ப்ப-அசைகின்ற நீரையுடைய கடல் நாடனே. கரப்பவர் - (இல்லே என்று சொல்லித் தம் பொருளே) மறைப்பவர்கள். இறைத் தோறும் - இறைக்கும்தோறும். கண்டு அறியார் கொல்லோ-பார்த்தறியா ராயினுர் போலும்.

பயிற்சி

1. பாம்பறியும் பாம்பின கால் - இப்பழமொழியால் விளக்கப்படும் செய்தி யாது?
2. தொல்லே அளித்தாரைக் கேட்டறிதும் - அளித்தார் யாவர்? அவர்கள் செய்கையை விளக்கும் பழமொழி யாது?
3. எங்ஙனம் வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று?

4. உயிருடையார் எய்தா வினையில்லை - இப்பழமொழியை விளக்க எடுத்துக்காட்டிய நிகழ்ச்சி யாது?

5. இறைத்தோறும் ஊறுங் கிணறு-இப்பழமொழியால் விளக்கப்படுவது என்ன?

5. ஏலாதி

ஏலம்+ஆதி=ஏலாதி. ஏலம், இலவங்கம், சிறு நாவற் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறுவகைப் பொருள்களால் செய்யப்பட்ட மருந்துக்கு 'ஏலாதிச் சூரணம்' என்று பெயர். இம் மருந்து உடலுக்கு உறுதி பயப்பதுபோல் இந்நூலின் ஒவ்வொரு செய்யுளும் கூறும் கருத்துக்கள் மக்களின் அறியாமையைப் போக்கி நன்மை பயப்பன. ஆதலின், இந்நூல் ஏலாதி எனப் பெயர் பெற்றது. இந்நூல் சங்க நூல் தொகுதிகளுள் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதியைச் சார்ந்தது. 82 செய்யுட்களைக் கொண்டது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: கணிமேதையார். கணிமேதாவியார் என்று கூறுதலும் உண்டு. இவரது ஆசிரியர் மாக்காயனர். காலம்: கடைச்சங்க காலம்.

அருஞ்சொற் பொருள்

1. முருந்து ஏய்க்கும்-மயிலிறகின் அடியை ஒக்கும். முள் எயிற்றினய்-கூரிய பற்களையுடைய பெண்ணே. யாவர்க்கும்-(விருந்தாய் வருவார்) எல்லாருக்கும். அளாவல்-உளங்கலந்த உறவும். இனிது - ஆடை அணி முதலிய பொருளும். மென் சொல் - பணிவுமொழி. வகுப்பானேல் - வழங்குவானுல். விரைந்து - முன் வந்து.

2. மாண்டு அமைந்து-(ஒழுக்கத்தில்) மாட்சிமைப்பட்டு. மதி-அறிவு. வனப்பு-தோற்றப் பொலிவு. வன்கண்மை-பகைவர்க்கு அஞ்சாமை. ஆண்டு அமைந்த - பயின்று நிரம்பிய. பூண்டு அமைந்த - தகுதி பொருந்திய. கருதுங்கால் - ஆராயு

மிடத்து. புகழ்-புகழை விளைப்பனவாகும். அமைந்து : வினையெச்சம். அமைந்த : பெயரெச்சம்.

3. மை ஏர்-மை தீட்டிய அழகான. தடம் கண்-பெரிய கண்கள். உணர்ந்தார்-சான்றோர். சாயலே-மென்மையான நற்சொற்களையும். குறளை-புறங்கூறுதல். மறலையின் வாயின-புல்லறிவுடையவன் வாயில் வருவனவாகும்.

4. நா இல்லார்-ஊமைகள். பால் இல்லார்-தம் சார்பில் பெறுதல் இல்லாதவர். பற்றிய நூல் - பதிந்த நூலறிவு. ஆழப்படும்-(உண்டபின் வயிற்றில்) தங்குதற்குரிய. வீழப்படுவார்-விரும்பப்படுவார்.

5. குறுகான்-நெருங்காமலும். புலால்-மாமிசம். மறுகான்-கொண்டொழுகாமலும். வெளவான்-கவர விரும்பாமலும். இறுகானுய்-செல்வப்பொருளை இறுக்கிப் பிடியாமலும். நெறி நூல்கள்-அறிவு நூல்கள். பாடு இறப்ப-பயன்படுதல் இல்லாதனவாகும்.

பயிற்சி

1. விண்ணோர்க்கு விருந்தாவார் யாவர்?
2. அரசியல் தூதுவர்க்கு வேண்டுவன யாவை?
3. புல்லறிவாளர் வாயில் எத்தகைய சொற்கள் வெளிவரும்?
4. இமையவரால் விரும்பப்படுபவர் யாவர்?
5. எவ்வாறு வாழ்பவருக்கு நீதிநூல்கள் தேவையில்லை?

6. சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் என்பது மருத்துவ நூலில் ஐந்து சிறு வேர்களை உணர்த்தும். (பஞ்சமூலம் - ஐந்து வேர்கள்). அவையாவன : கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர். இவ்வைந்து வேர்களையும் மருத்துவ முறையில் பக்குவஞ் செய்து உண்டால் மக்கள் உடற்பிணி நீங்குவர். அதுபோல ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்து நீதிப்பொருள்கள் அமைந்த இந்நூலும் மன

நோயாகிய அறியாமையைப் போக்கி உயிர்க்கு நலம் பயக்கும். ஆதலின், சிறுபஞ்சமூலம் என இந்நூல் பெயர் பெற்றது. இந்நூல் சங்க நூல் தொகுதிகளுள் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதியைச் சார்ந்தது. 100 வெண்பாக் களைக் கொண்டது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : காரியாசான். இவரது ஆசிரியர் மாக்கா யனார். சமயம்: சமணம். காலம் : கடைச்சங்க காலம்.

அருஞ்சொற் பொருள்

1. தேருங்கால் - ஆராய்ந்து பார்க்குமிடத்து. பூதரே- பசாசுகளோடு ஒப்பவரேயாவர். முன் - (முதுமைப் பருவம் வருவதற்கு) முன்பே. ஆதரே - அறிவிலாரேயாவர். பண்டு- முன்னே. துன்பம் இலேம் - (செல்வமுடையோமா யிருந்த தனால்) துன்பமுடையோமல்லேம். இலேம் : தன்மைப் பன்மை வினைமுற்று.

2. பெருங்குணத்தார் - நன்மைக் குணமுடையவர்கள். வெளவல்மின் - கவராதிருங்கள். கருங்குணத்தார் - தீக் குணத்தார். கழிமின் - நீக்குங்கள். ஒருங்கு உணர்ந்து - முற்றுமறிந்து. காமின் - (சொல்லாது) தடுங்கள். காலன் வரும் - இயமன் வருவான். திண்ணிதே - (இஃது) உறுதி யானதே. வழக்கு - உலக வழக்காகும்.

3. வசை ஆகும் - பழி உண்டாகும். செழுங்குலமும் - வளமையாகிய குடிப்பிறப்பும் செய்த பொருளினல் - ஈட்டிய பொருளினல். போகம் - இன்பம். நெகிழ்ந்த - (பிறர் பொருட்டுத் தன் மனம்) நெகிழ்ந்த. அருளினல் - அருள் காரணமாக.

4. வழக்கு அறிந்து-வழங்குதலை (செலவை)த் தெரிந்து (செய்து). வெருவாமை - (தங்கள் கோபச் சொல்லால்) பயந்தொதுங்காமல். வீழ்ந்து - (அவர்களை) விரும்பி. திரு ஆக்கும் - செல்வத்தை மேன்மேலும் உயரச் செய்கின்ற. தேற்றம் - தெளிவு.

5. கழிந்தவை - (தன்னை விட்டு) நீங்கிய பொருள்களுக்கு. இரங்கான்-வருந்தாதவனும். கைவாரா-தனக்குக் கைவராதவற்றை. நச்சான் - விரும்பாதவனும். இன்பு உறான் - மனக்களிப்படையாதவனும். உள் நெகிழ்ந்து - மனமுருகி. ஏத்தப்படும் - துதிக்கப்படுவான்.

பயிற்சி

1. கற்றவர் சிறப்பையும், கல்லாதவர் இழிவையும் சிறுபஞ்சமூலம் எவ்வாறு கூறியுள்ளது?
2. உயர்ந்தார் மேற்கொள்ளும் நெறியினைப் பற்றி எழுதுக.
3. எவ்வெவற்றால் எவையுண்டாகும் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது?
4. பெண்டிர்க்குச் சிறப்புத் தருவன யாவை?
5. விண்ணோரால் போற்றப்படுபவர் யாவர்?

III. தொடர்நிலைச் செய்யுள்

1. பெரிய புராணம்

பெரியர் + புராணம் = பெரிய புராணம். செயற்கரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றைப் பற்றிக் கூறும் நூலாதலின் இது பெரிய புராணம் என்று பெயர்பெற்றது. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் இது பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்துள்ளது.

நூலாசிரியர் குறிப்பு

பெரிய புராணத்தை இயற்றிய ஆசிரியர் சேக்கிழார் ஆவார். நாடு: தொண்டை நாடு. குலம்: தொண்டை மண்டல துளுவ வேளாளர். இயற்பெயர்: அருண்மொழித் தேவர். ஊர்: குன்றத்தூர். நூலைப் பாடுவதற்கு ஆதார மாயிருந்த நூல்கள்: சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, தேவாரம், திருவாசகம் முதலியன. 'பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று இவரை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாராட்டி யுள்ளார். காலம்: கி. பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

அருஞ்சொற் பொருள்

1. குலம் முதல் சீலம் - குலத்திற்கு முதன்மையாகிய ஒழுக்கம். கொள்கை நிலவிய செல்வம் – கொள்கையின் நிலை நின்ற செல்வம். மல்கி - பெருகி.

2. அப்பதி வந்து-அந்த ஊரிலே பிறந்து. சிந்தை தரும் உணர்வு - மனத்தில் தோன்றும் உணர்வுகள். தம்பிரான் கழல் - சிவபெருமான் திருவடி. நெறிமாறு அன்பு - வழியி னின்றும் பிறழாத அன்பு. பொலிவின் - விளக்கத்தின்.

3. அடுப்பது - செய்யத்தக்கது. கொடுப்பது - கொடுக்கும் பொருள். அவர் - அச்சிவனடியார். இருநிதி - பெருஞ் செல்வம். எண்ணூர் - நினையாதவராய். கங்கை மடு - கங்கை வெள்ளம். பொதி - நிரம்பிய. வேணி ஐயர் - சடை முடியையுடைய சிவன். எடுப்பது - கட்டுவது.

4. மனத்தினுல் கருதி - (பொருள் பெறும் இடங்களையும் வகைகளையும்) மனத்தினுல் எண்ணிக் கொண்டு. எனைத்தும் - எவ்வாற்றுனும். பொருள் பேறு - பொருள் பெறும் நிலை. நைவார் - வருந்துபவராய். நேர்ந்து - துணிவு பூண்டு. நிகழ்வுறு நிதியம் - செயல் நிகழ்வதற்கேற்ற செல்வம்.

5. சாதனம் - கோயில் கட்டுவதற்கு வேண்டும் கல், மண், சுண்ணும்பு, மரம் முதலாயின. நன்ளுள் கொண்டு - நல்ல நாளும் வேளையும் நிச்சயித்துக் கொண்டு. ஆதரித்து - விரும்பி. ஆகமத்தால் - சிவாகமங்களில் கூறும் முறையில் அடிநிலை - கடைகால், அஸ்திவாரம். காதலின் - ஆசை மிகுந்து.

6. அடி - அடிநிலை வரி. உபானம் - கோபுரத்தின் அடிக் கீழ் அமைக்கும் முதல் சித்திரவரி. படைகள் - அடுக்குகள். வடிவுறும் தொழில்கள் - சித்திர வேலைப்பாடுகள். மான முடிவுறு சிகரம் - விமானத்தின் முடிவில் வரும் சிகரம். முன்னிய முழம் - விதித்த முழ அளவு. நெடிது நாள்கூட - பல நாட்கள் செல்ல.

7. தூபி - விமானத்துச்சியில் அமைக்கும் கூரிய சிகரம். சுதையும் - சுண்ணும்பு பூசுதலும். நல்வினை - உரிய விதிப்படி உருவங்கள் தீட்டுதல். கூவல் - கிணறு. போக்கி - நன்கு அமைத்து. வாவி - குளம். வேண்டுவ - தேவையான சுற்றாலயங்கள், நந்தவனம், ஏனைய மண்டபங்கள். மன்னும் தாபரம் - நிலைபெற்ற சிவனைச் சிவலிங்க வடிவில் பிரதிட்டை செய்யும் சடங்கு. விதித்த - குறித்த. போக்கி : வினையெச்சம்.

8. காடவர் கோமான் - காடவர் பெருமானுகிய பல்லவ அரசன். கற்றளி - கற்கோயில். வகுத்தல் செய்வான் - நியமிக்கின்றவன். ஏடுஅலர் - இதழ் விரிகின்ற. வேய்ந்தார் -

சூடிய இறைவர். தாபிக்கும் - கும்பாபிடேகம் செய்து பிரதிட்டை செய்யும். மால் நாட அறியாதாரை - திருமாலும் தேடி அறிய முடியாத சிவபெருமானை.

9. நன்று நீடு - நன்மை நீடிய. இங்கு ஒன்றிய செயலை - இக்கோயிலில் செய்தற்குப் பொருந்திய செயலை. தொண்டர் கோயில் கொண்டருள - தொண்டர் மனக்கோயிலில் பிரதிட்டை செய்யும் சடங்கை ஏற்றுக் கொண்டருள.

10. தொண்டரை-தொண்டராகிய பூசலாரை. விளக்க- (உலகத்தார்) அறியச் செய்யும்பொருட்டு. தண்டலைச் சூழல்-சோலைகளின் கூட்டம்.

11. அணைந்து - சேர்ந்து. எப்புடையது - எப்பக்கத்தி லுள்ளது. செப்பிய பூசல் - (நீங்கள்) கூறிய பூசலார். அங்கண் எய்தினர் - (அரசன் வருகையால்) அவ்விடம் வந்த திருநின்ற ஊர் மக்கள்.

12. பூசுரர்-வேதியர். புரவலன் - அரசன். ஆசு இல் - குற்றம் இல்லாத. அழைக்க ஒட்டான் - (சென்று) அழைக்கச் சம்மதியாமல்.

13. ஏத்த - போற்ற. அண்டர் நாயகர் - தேவர்க்குத் தலைவனாகிய சிவபெருமான். கண்ணுதல் - நெற்றிக்கண் உடைய சிவபெருமான்.

14. மருண்டு - மருட்சியடைந்து. முன்வரு நிதியிலாமை- முன்னர்ப் பெறும் செல்வம் கிடைக்காமையால். சிந்தித்து எடுத்த ஆறு - சிந்தனையின் செயலாகவே கோயில் எடுத்தவழி.

15. புரை அறு - குற்றம் அற்ற. விரை செறிமாலை தாழ - மணம் மிகுந்த மாலை கீழே படியும்படி. முரசு எறிதானை யோடு - முரசு ஒலிக்கும் சேனையுடனே.

16. அன்பரும் - அன்பராகிய பூசலாரும். அரனார் - சிவபெருமான். சார - வர. பேணி - விரும்பிச் செய்து. பொன்புனை மன்றுள் - பொன்னால் இயன்ற திருவம்பலத்துள்.

பயிற்சி

1. திருநின்றவூரின் சிறப்பினைப் பற்றி எழுதுக.
2. பூசலார் நாயனாரின் இயல்புகள் யாவை?
3. பூசலார் தம் மனத்தில் கோயில் எழுப்பிய செயலைப் பற்றி 15 வரிகள் எழுதுக.
4. சிவபெருமான் காடவர்கோன் கனவில் தோன்றி உரைத்த மொழிகள் யாவை?
5. "அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக் கண்டு நான் வணங்கவேண்டும்"—இடஞ்சுட்டி விளக்கவுரை வரைக.
6. திருநின்றவூரை அடைந்த அரசன் கேட்ட வினாவும், அதற்கு அவ்வூர் மக்கள் அளித்த விடையும் யாவை?
7. பூசலாரைக் கண்ட காடவர்கோன் உரைத்த மொழிகள் யாவை?
8. காடவர்கோன் உரைத்த மொழியைக் கேட்ட பூசலார் தம் உள்ளத்துள் எண்ணியன யாவை?
9. பூசலார் தம் இறுதிக் காலத்தை எவ்வாறு கழித்து வந்தார்?

2. கம்பராமாயணம்

இந்நூல் இதிகாச வகையைச் சார்ந்தது. கம்பர்+ ராமாயணம்=கம்பராமாயணம். கம்பரது இராமாயணம் என விரியும். கம்பரால் இயற்றப்பெற்ற இராமாயணம் எனவும் பொருள் கொள்ளலாம். இந் நூலுக்கு முதல் நூல் வால்மீகி இராமாயணம். 'கம்ப நாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்ற தொடர் இந்நூலின் சிறப்பை உணர்த்தும்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: கம்பர். நாடு: சோழ நாடு. ஊர்: தேரழுந்தூர். குலம்: உவச்சர் குலம். தந்தை: ஆதித்தன். சமயம்: வைணவம். ஆதரித்தவர்: திருவெண்ணெய்

நல்லூர் சடையப்ப வள்ளல். 'விருத்தம் என்னும் ஒண்பா விற்குயர் கம்பன்', 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்னும் தொடர்கள் இவர் சிறப்பை உணர்த்துவனவாகும். இயற்றிய பிற நூல்கள் : சடகோபரந்தாதி, ஏர் எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி யந்தாதி. காலம் : கி. பி. 12ஆம் நூற்றுண்டு.

அருஞ்சொற் பொருள்

1. அண்ணல் - பரதன். அ இடை - அவ்விடத்தில். அன்று - அன்றிரவு. அரும் பொடியின் வைகி - படுக்க இயலாத புழுதியில் படுத்திருந்து. தெவ் இடை தர - பகைவர்கள் பின் வாங்கும்படி. செறி கழல் - நெருங்கிய வீரக் கழல். புளிஞர் கோமான் - வேடர் தலைவன். ஏற்றினை ஆயின் - (அக்கரையில்) கொண்டு சேர்ப்பாயானல். வெவ் விடர்க் கடல் - கொடிய துன்பமாகிய கடல். வேந்தன் - இராமன். வெவ்விடர் = வெவ் + இடர்.

2. புளிஞர் - வேடர். தமரை நண்ணினன் - தம் இனத்தவரை அடைந்து. வெள்ளி குன்று என - வெள்ளி மலையான கைலாசமும். குனிக்கும் அம்பொன் குவடு-வில்லாக வளைத்த அழகிய பொன் மயமான மேரு மலையும். குபேரன் மானம் - குபேரனது புஷ்பக விமானம். ஒன்று என நாணி - ஒன்ருக உள்ளன என்று சொல்லப்படுவதற்கு வெட்கமுற்று. கொண்டு அனைய ஆன - கொண்டாற் போன்ற தன்மையுடைய நாவாய்கள்.

3. சிருங்கியர் கோன் - சிருங்கிபேரம் என்னும் ஊரிலுள்ளார்க்குத் தலைவனுகிய குகன். வரிசிலை குரிசில் - கட்டமைந்த வில்லில் வல்ல ஆண்களிற் சிறந்த தசரதன். வரம்பு - அளவு. நாவாய் - தோணி.

4. குரிசில் - பரதன். குரகதம் தேர் வலானும்-குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்துவதில் வல்ல சுமந்திரன் வரிசையின் வழாமை - முறையிலிருந்து தவருமல். மரபு உளி - முறையை ஆராய்ந்து. கரை இல் வேலை - கரையற்ற

படைக் கடல். எரி மணி-ஒளி விளங்குகின்ற மணிகள். திரை- அலை. ஆறு ஏறிற்று-ஆற்றின்மீது சென்று கரை ஏறிற்று.

5. சுழித்து நீர் வரு - சுழிகளோடு நீர் பெருகப் பெற்ற. கள்ளம் ஆசை - வஞ்சனையோடு கூடிய பொருளாசை. அவனி- பூமி. இழித்து - கீழ்ப்படுத்தி. மேல் ஏறினன் தானும் - மேன்மையை அடைந்தவனாகிய பரதனும்.

6. தன் அன தம்பி - தன்னைத்தானே ஒத்த தம்பியான சத்துருக்கனன். தேர் வலான் - தேர்ப்பாகனான சுமந்திரன். துன்னினர் ஏறலும் - (பரதன் ஏறிய படகில்) நெருங்கி ஏறின வுடனே. நல் நயம் காலினால் - சிறந்த அழகிய கால்களால்.

7. நின்ற - (சிறப்புற்று) நின்ற. கொற்றம் தார் குரிசில்- வெற்றி மாலையையுடைய அரசே. கோக்கள் வைகும் - அரசர் கள் தங்கி இருக்கப்பெற்ற. முற்றத்தான் - தலைவாயிலை யுடைய தசரதன். உலகும் ஈன்றானை - உலகங்களையும் படைத்த பிரமனை. முன் ஈன்றானை - முன்னே படைத்த திரு மாலின் அமிசமாகிய இராமபிரானை.

8. என்றலுமே - என்று பரதன் கோசலையைக் குறித்துக் கூறிய அளவிலே. கார் ஆவின் - காராம் பசுவின் துன்பம் போன்ற. கொடி - பூங்கொடி போல்பவளாகிய கோசலை. இன் துணைவன் - இனிய தோழன். இளையவற்கும் - சத்துருக் கனனுக்கும்.

9. மைந்தீர் - மக்களே. நைவீர் அலீர் - வருந்தாதீர். மெய் வீரர் - தவறாத ஆண்மையுடைய இராம இலக்குமணர். நாடு இறந்து - நாட்டைத் துறந்து. பெயர்ந்ததுவும் - புறப் பட்டு வந்ததுவும். விலங்கல் திண் தோள் - மலை போன்ற வலிய தோள். கை வீரம் களிறு - துதிக்கையினையுடைய வீர முடைய ஆண் யானை. காளை - காளை போன்ற குகன். அளித்திர் - பாதுகாத்து வருவீர்கள்.

10. அறம் தானே என்கின்ற - தரும தேவதையே என்று சொல்லத்தக்க. உரை - (இன்னாள் என்று) சொல். நெறி திறம்பா - நல்வழி தவறாமல். மெய்யை - சத்திய மொழியை.

தொழு குலமாம் - வணங்கத்தக்க குலதெய்வமாகிய. பிரியா தான் தனை - (அவனை விட்டு) நீங்காத இலக்குமணனை.

11. தன் துணை - தன் கணவனாகிய தசரதன். தோன்றல் - (தன் மகனான) பரதன். கருணை ஆர்கலி - கருணை நிரம்பிய கடலாகிய இராமபிரான். கடுமைஆர் - கொடுமை நிறைந்த. மாயன் - திருமால். நெடுமையால் - நீண்ட திரிவிக்கிரம வடிவங்கொண்டு. கொடுமையால் அளந்தாளை - கொடுமை யினால் அளவிட்டவளான கைகேயியைப் பற்றி. குரிசில் கூறும் - (அதற்குப்) பரதன் கூறுவான்.

12. படர் - துன்பம். பழி வளர்க்கும் செவிலி - பழிச் சொல்லாகிய குழந்தையை வளர்க்கும் தாய். பாவிக் குடரிலே- தீவினையுடைய வயிற்றிலே. உடர் - உடல். ஒருத்தி அன்றே- ஒருத்தி மாத்திரமே. அறிந்திலையேல் - (இன்னாள் என்று நீ குறிப்பால்) அறியவில்லையானால்.

13. கேட்டு - (குகன் அம்மொழிகளைக்) கேட்டு. இலாளையும் - இல்லாதவளாகிய கைகேயியையும். பேடை அன்னம் - பெட்டை அன்னப் பறவை. சிறை இலது ஆய் - சிறகு இல்லாததாய். துன்னிற்று - அடைந்தது. **துன்னிற்று: ஒன்றன்பால் வினைமுற்று.**

14. இழிந்த - (தோணியிலிருந்து) இறங்கிய. சிவிகை யின் - பல்லக்கில். புதுப் புனல் - வெள்ளம். கண்ணின் போயினன் - கண்களோடு சென்று. காலினே கழித்தனன் - கால்களாலேயே நடந்தனன். ஒழிந்திலன் - விட்டு நீங்காத வனாய்.

பயிற்சி

1. பரதன் குகனிடம் வேண்டிக்கொண்டது யாது?
2. நாவாய்கள் வந்து சேர்ந்த காட்சி ஆசிரியரால் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. 'எந்தை இத்தானை தன்னை ஏற்றுதி விரைவில்.' இடஞ்சுட்டி விளக்கவுரை வரைக.
4. பரதனும், பிறரும் கங்கையைக் கடந்த காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

5. பரதன் குகனிடம் கோசலையையும், சுமத்திரையையும், கைகேயியையும் அறிமுகப்படுத்தும் வகையில் கூறிய செய்திகளை 15 வரிகளில் தொகுத்தெழுதுக.

6. 'அன்னப்பேடை சிறையிலதாய்க் கரை துன்னிற்று.' இத்தொடரால் விளக்கப்படும் செய்தியினை எழுதுக.

7. பரதன் நடந்து சென்ற காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

3. திருவிளையாடற் புராணம்

இந்நூல் மதுரையில் கோயில் கொண்டருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் புரிந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களை விளக்கிக் கூறும் புராணம் ஆகும். இந்நூலில் கூறப்படும் அரிய செயல்கள் இறைவனுக்கு விளையாட்டைப் போல் எளியனவாய் அமைந்தன. புராணம் - பழமையான வரலாறு. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: பரஞ்சோதி முனிவர். நாடு: பாண்டிய நாடு. ஊர்: திருமறைக்காடு (வேதாரணியம்). குலம்: அபிடேகத்தார் குலம் என்றும், வேளாளர் குலம் என்றும் கூறுவர். தந்தை: மீனாட்சி சுந்தர தேசிகர். சமயம்: சைவம். இயற்றிய வேறு நூல்கள்: திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, வேதாரணிய புராணம். காலம்: கி. பி. 17ஆம் நூற்றாண்டு என்று கூறுவர்.

அருஞ்சொற் பொருள்

1. கன்னி நான்மாடக் கூடல் - தடாதகைப் பிராட்டி என்னும் கன்னி யாண்ட மதுரை. கடிநகர் - காவல் அமைந்த நகரம். மாநிதிக்கோன் - குபேரன். மன்னினுன் - பொருந்தி

வாழ்ந்தான். பொன்னின் - அழகான. நாள் முளரி - அன்றலர்ந்த தாமரை மலர். சேக்கை - இருப்பிடம். திரு - திருமகள்.

2. தகவு சால் மகவு - பெருமை நிறைந்த மகன். நல்க - (மனைவியிடம்) கொடுக்க. புனைவன - ஆபரணங்கள். பொலிவுற-அழகு மிக. வாங்கி, புனைந்து : வினையெச்சங்கள்.

3. தணவா - நீங்காத. ஆசை மயக்கினால் - ஆசையால் உண்டாகிய மயக்கத்தினால். தனையன் - மகன். பூசல்வினை - சண்டையிடும் செயல். இளையள் - நங்கை.

4. பெருமிதம் - செருக்கு. இருமை - இம்மை, மறுமைப் பயன்கள். மேலைக்காயினும் - மறுபிறவியிலாயினும். என்னா-என்று எண்ணி.

5. வரவு தாழ்ப்ப - வருவதற்குக் காலந் தாழ்க்க. வன்பினால் - வலிமையினால். தாய மாக்கள் - பங்காளிகள். வெளவினார்-கவர்ந்து கொண்டனர்.

6. பைம்பூண்-அழகிய நகைகள். வெறுக்கை-செல்வம். ஏனைவளன் - பிற வளங்கள். மாற்றலர் - பங்காளிகள். வன்சிறை - வலிய சிறகுகள். புள்போல் - பறவைபோல். களைகண் - ஆதரவு. கூடல் - மதுரை. சரணம் - அடைக்கலம்.

7. வான் அகடு - வானத்தின் நடுவிடம். போழ்ந்த - பிளந்த. மணி முடி விமானம் - இரத்தினச் சிகரம் உள்ள விமானம். சுந்தரநாதன் - சோமசுந்தரக்கடவுள். இறைஞ்சி-வணங்கி. தம்பிரான் - தலைவன். யாய் - தாய்.

8. காணி - விளைநிலம். அன்றே - அப்பொழுதே. எம்முன் - என் அண்ணன். இப்பால் - பின்பு.

9. தேறும் - (நன்மை தீமைகளை) ஆராயும். களைகண்-ஆதரவு. அருத்தி - ஆசை. அறவோர் - சான்றோர். பார் படிய - (உடம்பு) நிலத்திலே பட.

10. ஆன்றவர் - பெரியோர். குரை கழல் வேந்தன் - ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த பாண்டியன். கோது இல் - குற்றம் இல்லாத. அறத்தவிசு - நீதிமன்றம்.

11. இனைவுறு - வருத்தம் மிக்க. விம்மிதம் - வியப்பு. வழச்கு அலா வழக்கு - உண்மை வழக்கு இல்லாத பொய் வழக்கு

12. மாதுலர் - தாய் மாமன். தம் பின் வந்த - தமக்குப் பின் பிறந்த. தாது உலராத கோதை - பூந்தாதின் மணம் கெடாத கூந்தலையுடையாள். தழீஇ - தழுவி. தம் கண்டம் மீது உலராத - தம் கழுத்திலிருந்து நீங்காத. ஆர்ப்பவர் - உரக்கச் சொல்லுபவர். ஆதுலர் ஆனீர் - ஒன்றும் இல்லாத ஏழைகள் ஆயினீர்.

13. ஐம்படைத் தாலி - திருமாலின் சக்கரம், வில், வாள், தண்டு, சங்கு என்னும் ஐந்து கருவிகளின் உருவம் அமைக்கப்பெற்றதோர் அணி. மதாணி - தோளிலிருந்து மார்பில் தொங்கும் பதக்கம். மொய்ம்பு - வலிமை. முகத்து அசை சுட்டி - நெற்றியில் கட்டிக் கொள்ளும் சுட்டி என்னும் ஆபரணம். மின்படு - ஒளி பொருந்திய. என்பெறும் என்று - என்ன விலை மதிப்புடையன என்று எண்ணி.

14. தனையனை - மகனை. கண்ணீர் மாற்றி - கண்ணீரைத் துடைத்து. தடக்கை - நீண்ட கை. தைவந்து - தடவி. இனையன்மின் - வருந்தாதீர். வஞ்ச வினைஞர் - வஞ்சகத் தொழில் புரிந்த பங்காளிகள்.

15. கிளைஞர் - உறவினர். ஈன்றூர் - பெற்றவர்கள். முந்தையின் - முன்னிருந்தபடியே. முன்னோன் - இறைவனாகிய வணிகன். வழுவாவண்ணம் - தவறுதவாறு.

16. இழுக்கடைந்தது - தோல்வியுற்றது. நனைவழி வேம்பன் - தேன் வழிகின்ற வேப்பமாலையை அணிந்த பாண்டியன். தேரின் - ஆராய்ந்தறிந்தால். தண்டிக்கும் - தண்டிப்பான்.

17. ஒல்லையில் - விரைவில். வல் எழு அனைய தோளார் - வலிய தூணைப் போன்ற தோள்களையுடைய பங்காளிகள். செல் எழு முகில் போல் - விரைந்து போக எழுகின்ற மேகங்களைப் போல.

18. அறம் நவில் மன்றம் - அறத்தை எடுத்துக் கூறுகின்ற சபை. தத்த மைந்தர்க்கு - தத்துப் புத்திரனுக்கு. மனை எழுதி - சீட்டு எழுதி. வாங்கி - (எழுதுவோனிடம் இருந்து) பெற்று. நாய்கர் - வணிகராக வந்த இறைவர். ஈந்தனர் - கொடுத்தனர்.

பயிற்சி

1. தனபதி வணிகன் தங்கையின் மகனைத் தன் மகனாகக் கொண்டது ஏன்?

2. தனபதி தங்கைமீது கோபங் கொண்டதற்குரிய காரணம் யாது? கோபங்கொண்ட தனபதி செய்த செயல் யாது?

3. தனபதி சென்றபின் அவனுடைய பங்காளிகள் யாது செய்தனர்?

4. தனபதியின் தங்கை ஆண்டவனிடம் வேண்டியன யாவை?

5. மாமனாக வந்த சிவபிரான் உரைத்த மொழிகள் யாவை?

6. சிவபெருமான் மாமனாக வந்தபோது அவரைக் கண்ட தனபதியின் பங்காளிகள் அடைந்த நிலையினைப் பற்றி எழுதுக.

7. மாமனாக வந்த இறைவன் மருகனையும், தங்கையையும் கண்டு வருந்திக் கூறியன யாவை?

8. தனபதியாக வந்த இறைவன் அவனுடைய தாயத்தார் நம்பும்படி உரைத்த மொழிகள் யாவை?

9. நடுவர் தீர்ப்பைக் கேட்ட தனபதியின் பங்காளிகள் மேற்கொண்ட செயல்கள் யாவை?

10. மாமனாக வந்த இறைவன் மறைந்த காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

4. சீறாப் புராணம்

சீறாப் புராணம் பற்றிய குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: உமறுப் புலவர். இவரைப் பற்றிய குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

அருஞ்சொற் பொருள்

1. மேனியில் - (முகம்மது நபி அவர்களின்) உடலில். கதிர் விரி - ஒளி பரவுகின்ற. மான் மதம் - மான் வயிற்றில் தோன்றிய கத்தூரியின் மணம். வடிந்த - முழந்தாள் அளவு நீண்டுள்ள. நிலம் தோய் தரா - நிலத்தில் படிதல் இல்லாத. காரணீகமும் - அளவையினுல் பொருளை ஆராய்ந்தறியும் தன்மையும்.

2. பன்ன - சொல்வதற்கு. மன்னிய - பொருந்திய. அவயவம் - உறுப்புக்கள். நவிற்றும் - பேசும். இன்னன - இவை போன்ற. ஏகினர் - (அவ் யூதர்கள் அவ்விடத்தை விட்டுச்) சென்றனர்.

3. நூல் துறை வலார் - வேத நூல் துறையில் வல்லவராகிய புலவர். மறை தெரி சமயமும் - வேதங்களில் கூறப்படுகின்ற சமயமும். நமரும் - நம்மவர்களும். உறைகுவன்- வாழ்பவன். அணித்து என்று (அவன் தோன்றும் காலம்) மிக அண்மையுடையது என்று. சொற்ற - சொன்ன. பிறவியான் - பிறப்பினையுடையவன்.

4. பெரும் பதவி - பெரிய வீட்டுலகு. இச்சமயம் - (நமது) இந்த யூத சமயம். பாழ்பட - அழிந்து போகும்படி. வருபவன்தன் - வருபவனுகிய இம்முகம்மதுவின். குருதி நீர் - இரத்தமாகிய செந்நீர். குவலயத்திடை - இவ்வுலகின்கண். செரு – போர். திறம் - (நமக்குத்) திறமான செயல்.

5. மல் உடை - வளமுடைய. புயல் திறல் - தோள் ஆற்றல். விலைத் தொகையை - விலையாகிய தொகையை. ஒல்லையின் - விரைவினில். நும் வயின் - உங்களிடம்.

இல்இடை - வீட்டினிடத்து. இசைத்திட்டார் - கூறினர்கள். அரோ : அசை.

6. ஆமினு திருமகன் - ஆமினு என்பவளுடைய அழகிய மகன். நேமி திரை நிறைந்து சுற்றிய - கடலின் அலைகளைப் போல் நிறைந்து சுற்றிய. பூமி நாயகர் - இவ்வுலகத்திற்குத் தலைவரும் ஆகிய முகம்மது. ஷாமுநாட்டவர் - ஷாம் என்னும் நாட்டினராகிய அவ் யூதர்கள்.

7. திகழ் நாவால் - விளங்குகின்ற நாக்கினல். மை தவழ் - மேகம் தவழும். எய்திய பெற்றி -(நாங்கள்) அடைந்த தன்மையானது. திளைத்த - செய்த. இசைந்த நன்முகமன் ஆக - (உயர்வு) பொருந்திய நல்ல உபசாரச் சொற்களாக.

8. ஏகி - (மேல் மாடிக்குச்) சென்று. செறித்த - பொருத்தப்பட்டிருந்த. மெல்ல வாங்கி - மெதுவாக இழுத்து. வரை புயம் பிதுங்க - (முகம்மது நபியின்) மலை போன்ற தோள்கள் (நசுங்கிப்) பிதுங்குமாறு. தாங்கலில் - கல் தங்கியிருந்த இடத்திலிருந்து. நீங்க அரும் - (அவனது) நீங்குதற்கு அரிய. நெரி பட - நசுங்கும்படி.

9. பதிந்த - அழுந்திய. உரத்தொடும்-வலிமையோடும். நிரைத்த-வரிசையாக அமைந்த. அதரம் கவ்வி-(தன்னுடைய) உதட்டைக் கடித்து. ஓட்டி - உயரச் செய்து. வரை - மலை. அறச்சலித்து - மிகவும் தளர்ச்சியுற்று. உழன்ருன் - வருந்தினன்.

10. மாக்களில் - மக்களில். நீங்கிடாது - (அத்தீமையை நினைத்தவர்களை) விட்டு நீங்காமல். பருக - குடிக்க. நேரலர்- பகைவர். உறச்சமைந்திடும் - பொருந்தும்படி உண்டாகும்.

11. நினைத்தவர் - நினைத்தவர்களாகிய அவ் யூதர்கள். புல்மனம்-கீழ்மையாகிய மனம். கொடியம் யாம் - கொடியேமாகிய நாங்கள். எம் வயின்-எங்களிடம். போற்றி - துதித்து. மறுத்து - மீண்டும்.

12. பதிந்திடும் கரத்தில் - பதிந்துள்ள அந்தக் கைகளில். ஓதிய - (முகம்மது நபி) கூறிய. சொரி தரும் - ஒழுகுகின்ற. துடுப்பு எனும் கரங்கள் - துடுப்பு என்று சொல்லத்தக்க கைகள். அரிதின் - வருத்தப்பட்டு.

13. பலன் உறு - பலம் அமைந்த. வன்னம் - அழகிய. இணையடி - இரண்டு திருவடிகள். வருடி - தொட்டுப் பிடித்துக் கொண்டு. இன்னல் - (எனக்குண்டான) துன்பம். ஆளுதி - ஆட்கொள்வீராக. அடிக்கடி - பலமுறை. தாழ்ந்தான் - தாழ்ந்து வணங்கினான்.

பயிற்சி

1. நபிகள் நாயகத்தைஷாம் நகர மக்கள் கண்ட காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
2. நபிகள் நாயகத்தைக் கண்ட ஷாம் நகர மக்கள் தமக்குள் கூறிக்கொண்ட செய்திகள் யாவை ?
3. நபிகள் நாயகத்தை வஞ்சக எண்ணங் கொண்ட ஷாம் நகர மக்கள் எவ்வாறு கூறி வரவேற்றனர் ?
4. நபிகள் நாயகத்தின்மீது கல்லையுருட்ட முற்பட்ட செய்தி பற்றியும், அப்பொழுது நிகழ்ந்த செய்தி பற்றியும் எழுதுக.
5. நபிகள் நாயகம் கரம்பொருந்தச் செய்த செய்கையைப் பற்றி எழுதுக.

5. தேம்பாவணி

தேம்பாவணி பற்றிய குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : வீரமாமுனிவர். இவரைப் பற்றிய குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

அருஞ்சொற் பொருள்

1. வீங்கிய - நிறைந்த. துளிமருளொடு - நீர்த்துளியின் மிகுதியால். மழைக் கையான்-மேகம் போன்ற கையை உடையவன். தொடையல் - (வெற்றி) மாலை. பொறை - மலைகளில் (வாழ்ந்து) திரிந்த. வீங்கிய : பெயரெச்சம்.

2. படிந்து போற்றிய - வணங்கித் துதித்த. நாமம் - அச்சம். நகை செய்வார் - ஏளனம் செய்வார். மிகை செய்வான் - மிகுந்த வேதனையைச் செய்பவன்.

3. மறை - சத்திய வேதம். நாட்டிடை - (யூதேய) நாட்டில். வழங்கியகால் - நடந்தபோது. பகைத்தனர் - பகைத்தவராய். வழங்கிய ஒப்ப - பெய்ததற்கு ஒப்பாக.

4. மேலியாற்கது விடா என்ற தொடரைக் கதுவிடா வேலியால் என மாற்றிப் பொருள் கொள்க. கதுவிடா - அழியாத. மாலியால் - சூரியனால். ஆலி - நீர்த்துளி.

5. தொழும்பர் - அடிமை. ஓகை - மகிழ்ச்சி. தோற்ற என்பது தோர்த்த என வந்துள்ளது.

6. தாங்குவார் - எதிர்ப்பவர். நிருபன் - சவூல் என்னும் அரசன். அயரும் - தளர்கின்ற.

7. இரிந்தபின் - நீங்கிய பின். அண்ணர் மூவர் - மூன்று அண்ணன்மார். (எலியப், அபினதாப், ஷம்மா என்போர்.)

8. எரியை - கோபத்தீயை. வாய்மையில் கடந்த - சொல்லுக்கு அடங்காத. விளிவிழுங்கிய - சாவினால் விழுங்கப் பட்ட. திறம்நெஞ்சு - ஊக்கமுள்ள நெஞ்சு.

9. வயம் - வல்லமை. ஊங்கு - மிகுதி. விழை செயம் - விரும்புகின்ற வெற்றி.

10. பொன்ற - (நீயேஉனக்கு) அழிவைத்தேடிக்கொள்ள. எவன் - எம்மாத்திரம்? எவன்: வினாப்பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று.

11. பவம் - பாவம். மறுத்தனை - மறுத்தவனான அந்தக் கோலியாத்தை.

12. ஐஞ்சிலை - ஐந்து கற்கள். வாய்ந்த - தக்க.

13. ஒல்லை ஓட்டலும் - வேகமாகச் செலுத்துதலையும். இடிக்கும் செல் - இடிக்கும் மேகம். எல்லை பாய்ந்து - சூரிய ஒளி பரவிய அளவில்.

14. உரும் - இடி. புடையகத்தினில் - இடப்புறத்தினில். இருஞ் சிரம் - பெரிய தலை.

15. வெய்யில் - ஒளி. பிலிற்றும் - ஊற்றுகின்ற.

பயிற்சி

1. தாவீதன் சிறப்புக்கள் யாவை?
2. சவூலாண்ட காலத்தில் எதிர்த்தவர் யார்?
3. கோலியாத்து என்னும் இராக்கதன் எதிர்த்த செய்கை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4. கோலியாத்து யாது சொல்லிப் போருக்கழைத்தான்?
5. சவூல் அறிவித்த செய்தி யாது?
6. தாவீதன் கோலியாத்தைப் பற்றிக் கேள்வியுற்ற செய்திகள் யாவை?
7. தாவீதன் அரக்கனை வெல்வேன் என்பதை எவ்வாறு அறிவித்தான்?
8. சவூல் தாவீதனை நோக்கிக் கேட்ட வினவும், அதற்கு அவன் அளித்த விடையும் பற்றி எழுதுக.
9. தாவீதன் கோலியாத்து என்னும் அரக்கனைக் கொன்று வீழ்த்தி அரசனாகிய செயலைப்பற்றித் தொகுத்தெழுதுக.

IV. பல்சுவை

(அ) வருணனைப் பகுதி

1. மலைவளம்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : திரிகூட ராசப்பக் கவிராயர். பிறப்பிடம் : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலகரம் என்னும் ஊர். குலம் : வேளாளர். சமயம் : சைவம். பெருமை : இவர் பாடிய குற்றாலக் குறவஞ்சி நூல் கேட்டு மகிழ்ந்த விசயரங்க சொக்கநாத நாயக்கர் 'குறவஞ்சி மேடு' என வழங்கும் நிலத்தைக் கொடுத்துச் சிறப்புச் செய்தார். இயற்றிய பிற நூல்கள் : குற்றால உலா, குற்றாலக் கோவை, குற்றாலத் தல புராணம் முதலியன. காலம் : கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், கி. பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

அருஞ்சொற் பொருள்

கொடை மகராசர்-அறச்செயலுடைய பேரரசர். பலவில் ஈசர் - பலா மரத்தடியில் எழுந்தருளிய குற்றால நாதர். முழங்கு திரை - ஒலிக்கும் அலை. புனல் அருவி - மலை நீரையுடைய அருவி. கழங்கு - கழற்சிக்காய். முற்றம் - வீடுகளின் முன் பக்கம். சிற்றில் - சிறுவீடு. கல்லி - தோண்டி. கிம்புரியின் கொம்பு - பூணினையுடைய யானைத் தந்தம். வெம்பு - (முதிரும் பருவத்துக்கு முன்) வாடிய. தேன் அலர் - தேன் பெருகும்.

2. கடல்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : முடியரசன். முடியரசனின் இயற்பெயர் துரைராசன் ; தமிழாசிரியர் ; காரைக்குடியினர். சிறந்த கவிகள் பாடுவதால் 'கவிஞர்' என்ற பட்டம் உடையவர். தமிழ்மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் உடையவர். இவர் சிறந்த பேச்சாளர் ; எழுத்தாளர்.

அருஞ்சொற் பொருள்

பெற்றி - இயல்பு, தன்மை. ஆழி - கடல். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல் அடிக்கருத்து இப்பாடல் அடியில் உள்ளது.

3. ஞாயிறு

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : வாணிதாசன். ஊர் : புதுச்சேரியை அடுத்த சேலியமேடு. பெற்றோர் : திருக்காடு நாயுடு, துளசியம்மையார். பிறப்பு : 22-7-1915. இயற்பெயர் : எதிராசு ; அரங்கசாமி என்றும் கூறுவர். கல்வி : ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டமும் தமிழில் வித்துவான் பட்டமும் பெற்றவராவர். பெருமை : பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களால் 'தமிழ் நாட்டுத் தாகூர்' எனப் பாராட்டப் பெற்றவர். இயற்றிய நூல்கள் : தமிழச்சி, கொடி முல்லை, தொடுவானம், எழிலோவியம் முதலியன.

அருஞ்சொற் பொருள்

மடமை - அறியாமை. ஞாயிறு - சூரியன்.

4. நிலாத் தோற்றம்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. ஊர் : நாஞ்சில் நாட்டுத் தேரூர். பெற்றோர் : சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி. குலம் : வேளாளர். காலம் : கி. பி. 1876 முதல் கி. பி. 1954 வரை. இயற்றிய நூல்கள் : மலரும் மாலையும், ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம் முதலியன.

அருஞ்சொற் பொருள்

அம்புயம் - தாமரை. ஆம்பல் - அல்லி மலர். களிக்குது - மகிழ்கிறது. இம்பர் உலகு - இந்த உலகு. மதி - சந்திரன். பாலாழி - பாற்கடல். விண்ணகம் - ஆகாயம்.

5. சோலைக் காட்சி

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: பாரதிதாசன். ஊர்: புதுச்சேரி. தந்தை: கனகசபை. இயற்பெயர்: சுப்புரத்தினம். பாரதியாரிடம் கொண்ட பேரன்பால் 'பாரதிதாசன்' என்ற புனைபெயர் கொண்டவர். புரட்சிக் கருத்துக்கள் அமைந்த பாடல்கள் இயற்றியதால் 'புரட்சிக் கவி' என அழைக்கப்பட்டார். இயற்றிய நூல்கள்: பாரதிதாசன் கவிதைகள், பாண்டியன் பரிசு, தேனருவி, குடும்ப விளக்கு, இசையமுது முதலியன. பிறப்பு: 29-4-1881. மறைவு: 21-4-1964.

அருஞ்சொற் பொருள்

விரைமலர் - வாசனையுடைய மலர். மிழற்ற - இசைக்க. புட்கள் - பறவைகள். அலைக்கரங்கள் - அலைகளாகிய கைகள். மதாகைக் கணிகை - மயிலாகிய பெண்.

பயிற்சி

1. திரிகூட மலையின் வளங்கள் யாவை?
2. ஆழியென்றும், பரவையென்றும் கடல் அழைக்கப் படுவதற்கு முடியரசன் கூறும் காரணங்களை எழுதுக.
3. ஞாயிற்றின் நற்செயல்கள் வாணிதாசனால் எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளன?
4. நிலாவின் தோற்றம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையால் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
5. சோலையில் மயிலாடுங் காட்சி பாரதிதாசனால் எவ்வாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளது?

(ஆ) சீட்டுக் கவி

திருமுகப் பாசுரம்

சீட்டுக்கவி என்பது செய்யுள் வடிவில் அமைந்த கடிதமாகும். பாடுவோர் தம் பெருமையும், பாடப்படுவோர் பெருமையும், தேவையும் விளங்கக் குறிப்பிட்டு அனுப்புவர்.

பாணபத்திரர் என்னும் இசைப்பாணர், தமது வறுமைத் துன்பம் நீங்குவதற்காக மதுரைச் சோமசுந்தரப் பெருமானிடத்திலிருந்து சேரமன்னனுக்குத் திருமுகப் பாசுரம் பெற்று, அவனிடம் சென்று பொருள் பெற்று மகிழ்ந்தார் என்ற வரலாறு திருவிளையாடற் புராணத்துள் கூறப் பெற்றுள்ளது. இச்சீட்டுக்கவி இறைவன் எழுதியதாதலின் திருமுகப் பாசுரம் எனப்பட்டது.

அருஞ்சொற் பொருள்

மதி மலி புரிசை - சந்திரன் தவழ்ந்து செல்லும் உயர்ந்த மதில். கூடல் - மதுரை. பதி - ஊர். பயில் பொழில் - வசிக்கும் சோலை. கொண்மூ - மேகம். குரு மாமணி - நல்ல நிறமுடைய உயர்ந்த இரத்தினம். குலவிய - விளங்கிய. செரு - போர். மா - குதிரை. உகைக்கும் - செலுத்தும். போந்தனன் - வந்தனன். பால்நிறம் - பால் போன்ற வெண்ணிறம் ஒருமையின் - முழுமனத்தோடு. மாண் பொருள் - சிறந்த பொருள். **மன்னிய : பெயரெச்சம்.**

(இ) இரட்டுற மொழிதல்

ஒரு சொல்லோ, தொடரோ இரு பொருள் தருமாறு கூறுவது இரட்டுற மொழிதலாம். இதனைச் சிலேடை என்பர். சிலேடை செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இரு வகைப்படும்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : காளமேகப் புலவர். பிறந்த ஊர் : கும்பகோணத்தை அடுத்துள்ள நந்திக் கிராமம். குலம் : அந்தணர் குலம். திருவானைக்கா அகிலாண்ட நாயகியின் அருளால் கவி பாடும் வன்மை பெற்றவர். இவர் வசைக்கவி பாடுவதில் வல்லவர் ஆதலின் 'வசை பாடக் காளமேகம்' என்றழைக்கப் பெற்றார். திருவானைக்கா உலா, சித்திரமடல் முதலிய நூல்களும், தனிப்பாடல்கள் பலவும் இவரால் பாடப்பட்டுள்ளன. இவர் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமலைராயன் என்னும் மன்னன் காலத்தவர்.

அருஞ்சொற் பொருள்

1. பாம்பு : ஆடி - படமெடுத்து ஆடி. இரையும் - ஓசையை எழுப்பும். முகம் காட்டும் - (தன்) தலையைத் தூக்கிக் காட்டும். ஓடி மண்டை பற்றில் - (அதன் விடம்) ஓடி மண்டையில் பொருந்துமானல். பிள் நாக்கு - பிளவை உடைய நாக்கு.

எள் : ஆடி - (செக்கிலே) ஆடி. இரையும் - இரைச்சல் ஓசையைத் தோற்றுவிக்கும். முகம் காட்டும் - (பார்ப்பவரின்) முகம் அதிலே தெரியுமாறு செய்யும். ஓடி மண்டை பற்றில் - (எண்ணெய்) சென்று தலையிலே பொருந்துமானல்.

2. சிவபெருமான் : கல்ஆல்அடி - கல்லால மரத்தின் அடியில். எல்லாரும் பூசைக்கு எடுத்திடலால் - எல்லாரும் வழிபாட்டிற்குச் சிவலிங்கத்தைச் சிறப்பாக எடுத்துக் கொள்வதால். வல்ஒடு-வன்மையான பிரமனுடைய மண்டையோடு. கள்இதழியான் - தேன் சொரியும் கொன்றை மலர்மாலை யணிந்த சிவபெருமான்.

தேங்காய் : கல்லால் அடி உறலால் - கல்லில் அடித்து உடைக்கப்படுதலால். எல்லாரும் பூசைக்கு எடுத்திடலால் - எல்லாரும் இறைவனை வழிபடச் செல்லும் பொழுது எடுத்துச் செல்லுதலால். வல்ஒடு - வன்மையான ஓடு. (மட்டையை உரித்தால் தோன்றும் ஓடு.)

(ஈ) சிற்றிலக்கியம்

1. மீனுட்சியம்மை குறம்

குறத்தி குறிகூறுவது போலப் பாடப்படும் நூல் குறம் எனப்படும். மதுரை மீனுட்சியம்மைக்குக் குறத்தி ஒருத்தி குறிகூறுவது போலப் பாடப்பட்ட நூலாதலின் இந்நூல் மீனுட்சியம்மை குறம் எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : குமரகுருபரர். இவரைப் பற்றிய குறிப்பை நீதிநெறி விளக்கம் ஆசிரியர் குறிப்பில் காண்க.

அருஞ்சொற் பொருள்

கொழுங்கொடி - செழிப்பான கொடி. விழுந்த - வேரில் தோன்றிய. கல்லி - தோண்டி. தொடுப்போம் - கட்டுவோம். கொழுஞ்சாறு - இனிய சாறு. தேறல் - தேன். மடுப்போம்- அருந்துவோம். இசைந்திட - பொருந்திட. விருந்து - விருந்தினர். பாயல் - பாய். கயற்கணி - கயல் மீன் போன்ற கண்களையுடைய மீனாட்சியம்மை. வினை - பழைய வினைகள். கண்படுப்போம் - தூங்குவோம்.

2. நந்திக் கலம்பகம்

கலம்பகம் தமிழில் வழங்கும் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. கலம்+பகம்=கலம்பகம். கலம் - பன்னிரண்டு. பகம் - ஆறு. புய வகுப்பு முதல் ஊசல் ஈருகப் பதினெட்டு உறுப்புக்களையுடையதால் கலம்பகம் எனப் பெயர் பெற்றது என்பர்.

கி. பி. 9 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த மூன்ரும் நந்திவர்மன்மீது பாடப்பட்ட கலம்பகம் ஆதலின் இந்நூல் நந்திக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

அருஞ்சொற் பொருள்

புகழ் ஈட்டு - புகழ் தேடிய. நந்தி பாண - நந்தியின் பாணனே. எங்கையர் - என் தங்கையர். விடிவு அளவும்- பொழுது விடியும் வரையும்.

3. நால்வர் நான்மணி மாலை

நான்கு வகை மணிகளால் ஆக்கப்படும் மாலையைப் போல வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்கு வகையான நாற்பது செய்யுட்களால் அந்தாதித் தொடையால் பாடப் பெறுவது நான்மணிமாலை. சைவசமய குரவர் நால்வரையும் பற்றிப் புகழ்ந்து பாடிய நான்மணி மாலை ஆதலால் இந்நூல் நால்வர் நான்மணி மாலை எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : **சிவப்பிரகாசர்**. நாடு : தொண்டை நாடு. ஊர் : காஞ்சீபுரம். குலம் : கருணீகர் குலம். தந்தை : குமாரசாமிப் பண்டாரம். ஆதரித்தவர் : துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார். இயற்றிய பிற நூல்கள் : பிரபுலிங்க லீலை, சீகாளத்திப் புராணம், திருவெங்கைக் கலம்பகம், நன்னெறி முதலியன. காலம் : கி. பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

அருஞ்சொற் பொருள்

விளங்கு இழை - ஒளி பொருந்திய அணிகலன்கள் அணிந்த பெண்ணாகிய பார்வதி. பகிர்ந்த - பங்கிட்டுக் கொண்ட. மெய் உடை-உடலை உடைய. முக்கண் காரணன்- சிவபெருமான். ஆரண மொழி - வேதம். வாதவூர் அண்ணல் - மாணிக்கவாசகர். வாசகத் தேனோ - திருவாசகம் என்னும் தேன் போன்ற நூலோ. உக - சிந்த. கேணியின் - கிணறு போல. பொடிப்ப - சிலிர்க்க. மன்பதை - மக்கள். விதிர் விதிர்ப்பு - நடு நடுக்கம்.

4. பிரபுலிங்க லீலை

தலைவனாகிய சிவபெருமான் செய்த லீலைகளை (திருவிளையாடல்களை)ப் பற்றிக் கூறும் நூல் ஆதலின் இந்நூல் பிரபுலிங்க லீலை எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : சிவப்பிரகாசர். இவரைப் பற்றிய குறிப்பை நால்வர் நான்மணி மாலை ஆசிரியர் குறிப்பில் காண்க.

அருஞ்சொற் பொருள்

அறஞ் சூழ்ந்தோர் - அறவழியை ஆராய்ந்த பெரியோர். கண்டாய் - அறிந்தாய். கிடந்த - இருந்த. தொன்மை + அகழி = தொல்லகழி. அனந்தன் - உலகைத் தாங்கும் ஆதி சேடன். வரையில் - உதயகிரியில். உதிப்பவன் - சூரியன். தாள் - கால். எயில் - மதில்.

(உ) வழிபாட்டுப் பாடல்கள்

1. தேவாரம்

நூல் குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : திருநாவுக்கரசர். இவரைப் பற்றிய குறிப்பை வாழ்த்துப் பகுதியில் காண்க.

அருஞ்சொற் பொருள்

மதி எனும் கோல் - அறிவு என்னும் ஊன்றுகோல். செறி கடல் - (அலைகள்) நிறைந்த கடல். மதன் - மன்மதன்.

2. கம்பராமாயணம்

நூல், ஆசிரியர் குறிப்பு

நூல் குறிப்பையும், ஆசிரியர் குறிப்பையும் தொடர்நிலைச் செய்யுட் பகுதியில் காண்க.

அருஞ்சொற் பொருள்

உள ஆக்கலும் - உள்ளனவாகச் செய்தலும். (படைத்தலும்) நிலைபெறுத்தலும் - நிலை பெறும்படி செய்தலும். (காத்தலும்). நீக்கலும் - நீங்கச் செய்தலும். (அழித்தலும்). நீங்கலா - நீங்காத. அலகுஇலா - முடிவு இல்லாத. அன்னவர்க்கே - அப்படிப்பட்ட கடவுளுக்கே. சரண் - அடைக்கலப் பொருள் ஆவோம்.

3. திருவருட்பா

நூல் குறிப்பு

திரு+அருள்+பா = திருவருட்பா. இறைவன் திருவருளால் பாடப்பட்டமையின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இறைவன் திருவருளைப் பெறுவதற்குக் கருவியாக விளங்கும் பாடல்களால் ஆன நூலாதலின் இப்பெயர் பெற்றதெனவும் கூறலாம்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : இராமலிங்க அடிகள். வேறு பெயர்கள் : திருவருட்பிரகாச வள்ளலார், வள்ளலார், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். ஊர் : சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூர். பெற்ரூேர் : இராமையாப் பிள்ளை, சின்னம்மை. குலம் : கருணீகர் (கணக்கர்). சமயம் : சமரச சன்மார்க்கக் கொள்கையுடையவர். இயற்றிய பிற நூல்கள் : மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் முதலியன. காலம் : கி. பி. 1823 முதல் 1873 முடிய.

அருஞ்சொற் பொருள்

எப்பாரும் - எல்லா உலகமும். எப்பதமும் - எல்லா இடங்களும். எந்தை - என் தந்தையே. இயம்பியிடல் - எடுத்துக் கூறுதல். செப்பாத-சொல்ல முடியாத சிறப்புடைய. திகழ்ந்து ஓங்க - விளங்கிப் பரவுமாறு. அருட்சோதி - (உன்) கருணை ஒளி. மார்க்கம் - நெறி, வழி. எங்கணும் -(ஆகிய) எங்கும். நிலைமையும் - தன்மையும்.

4. ஏசு வணக்கம்

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள பாடல் பொதுமை வேட்டல் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனுர். பிறந்த ஊர் : செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த துள்ளம். பெற்ரூேர் : விருத்தாசல முதலியார், சின்னம்மை. குலம் : வேளாளர். சமயம் : சமரச சன்மார்க்கக் கொள்கையுடையவர். இயற்றிய நூல்கள் : முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், கிறித்து அருள் வேட்டல், பொதுமை வேட்டல் முதலிய செய்யுள் நூல்களும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து முதலிய உரைநடை நூல்களும் ஆகும். காலம் : கி. பி. 1883-1953.

அருஞ்சொற் பொருள்

வதைக்க - துன்புறுத்த. குரவர் - தலைவர். இளங்கன்னி-மரியம்மை. உதித்த-தோன்றிய. இறைமை-கடவுள் தன்மை. மணி - அழகிய. ஆற்றல் - செய்தல். அறவோர் - அறவழி ஒழுகுபவர். என்பும் - எலும்பும். உகந்த - தகுந்த. இலக்கிய மாய் - எடுத்துக்காட்டாய். இலங்கி - விளங்கி.

5. அன்னையை வேண்டுதல்

இப்பாடல் பாரதியார் பாடல் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: **பாரதியார்.** பிறந்த ஊர்: எட்டையபுரம். இயற்பெயர்: சுப்பிரமணியன். பெற்றோர்: சின்னசாமி, இலக்குமி. குலம்: வேதியர் குலம். பிறப்பு: கி. பி. 1882. மறைவு: 1921. இயற்றிய நூல்கள்: பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், தேசிய கீதம், நாட்டுப் பாடல் முதலியன.

அருஞ்சொற் பொருள்

எண்ணிய - நினைத்த செயல்கள். திண்ணிய - வலிமை யான. பரிதி - சூரியன். நசித்திடல் - ஒழிந்து போதல். அன்னாய் - தாயே.

பயிற்சி

1. இறைவன் எழுதிய சீட்டுக்கவியில் குறிப்பிட்டுள்ள செய்திகள் யாவை?
2. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?
3. பாம்பும் எள்ளும் ஒன்று என்று காளமேகப் புலவர் கூறியுள்ளமையை விளக்குக.
4. கள்ளிதழியான் யார்? தேங்காய்க்கும் அவனுக்கு முள்ள ஒற்றுமையினை எழுதுக.

5. குறத்தி தன்குலத்தின் இயல்புகளாகக் குறிப்பிட்டுள்ள செய்திகள் யாவை?

6. தலைவி பாணனை எவ்வாறு நயம்பட இகழ்ந்து பேசினாள்?

7. வேதத்தையும் திருவாசகத்தையும் சிவப்பிரகாசர் எவ்வாறு ஒப்புமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் கூறியுள்ளார்?

8. தாழ்ந்தோர் உயர்வர் என்பதனையும், உயர்ந்தோர் தாழ்வர் என்பதனையும் சிவப்பிரகாசர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

9. திருவொற்றியூர்ப் பெருமானை எந்நிலையில் நினைக்கும் நினைவைத் தர வேண்டுமென்று நாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்?

10. கம்பர் கூறும் தலைவரின் இயல்புகள் யாவை?

11. இராமலிங்க அடிகளார் இறைவனிடம் வேண்டுவன யாவை?

12. திரு. வி. க. ஏசுநாதரின் இயல்பை எவ்வாறு போற்றியுள்ளார்?

13. பாரதியார் அன்னையிடம் வேண்டுவன யாவை?

உரைநடைப் பகுதி

1. லால்பகதூர் சாஸ்திரி

அருஞ்சொற் பொருள்

ஞானம் - அறிவு. அமர்க்களம் - போர்க்களம். இன்னல்-துன்பம். அகவை - வயது. ஆர்வம் - விருப்பம், ஆசை. அயராது-தளர்ச்சியடையாது.

வினாக்கள்

1. பாரத நாட்டின் பெருமை பற்றி நீவிர் அறிந்தன யாவை? அதன் பெருமையைக் காப்பாற்றப் பாடு பட்டவர்கள் யாவர்?

2. லால்பகதூர் தொடக்கப் பள்ளியில் கல்வி பயின்றதைப்பற்றி நீவிர் அறிந்துகொண்டன யாவை?

3. லால்பகதூர் உயர்நிலைப் பள்ளியில் படித்த நிகழ்ச்சியைப்பற்றி எழுதுக.

4. லால்பகதூரின் மனத்துணிவை விளக்கும் நிகழ்ச்சி யாது?

5. லால்பகதூர் விடுதலை இயக்கத்தில் ஈடுபடக் காரணமாயிருந்த நிகழ்ச்சி யாது?

6. லால்பகதூர் காசி வித்தியாபீடத்தில் கல்வி பயின்ற தன்மையைப்பற்றி எழுதுக.

7. இந்திய விடுதலை இயக்கத்தில் சாஸ்திரியார் ஈடு பட்டுச் செய்த செயல்களையும், அடைந்த இன்னல்களையும் பற்றித் தொகுத் தெழுதுக.

8. விடுதலை பெற்ற இந்தியாவில் மத்திய அரசின் அமைச்சராயிருந்து சாஸ்திரியார் ஆற்றிய பணிகள் யாவை?

9. நேருவுக்குப்பின் இந்தியாவின் முதலமைச்சர் பற்றிச் செய்யப்பட்ட ஒருமுகமான முடிவு யாது?

10. பாரத நாட்டிற்கும் பாகிஸ்தான் நாட்டிற்கும் பகைமை ஏற்படக் காரணம் யாது?

11. பாகிஸ்தான் பாரதத்தின்மீது படையெடுத்தபோது சாஸ்திரியார் கூறிய மொழிகள் யாவை ?

12. உருசியாவில் அமைந்துள்ள தாஷ்கண்டு நகரில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப்பற்றி நீவிர் அறிந்துகொண்ட செய்தி களைத் தொகுத் தெழுதுக.

13. சாஸ்திரியாரின் மறைவு கேட்டு மக்கள் அடைந்த நிலையைப்பற்றி எழுதுக.

14. சாஸ்திரியாரிடம் காணப்பட்ட நல்லியல்புகள் யாவை ?

2. இசைக்கலை

அருஞ்சொற் பொருள்

எண்ணெண் கலை - அறுபத்துநான்கு கலைகள். சைவசமய குரவர்கள் - சைவசமய ஆசிரியர்கள். மேதை - அறிவாளி. பண் - இராகம். மிடறு - கழுத்து. குழல்+இனிது+யாழ்+இனிது+என்ப = குழலினிது யாழினிதென்ப. ஆய்ந்து - ஆராய்ந்து.

வினாக்கள்

1. கலை எவ்வாறு வெளிப்படுகின்றது ? அஃது எத்துணை வகைப்படும் ? அவை யாவை ?

2. நுண்கலையுள் அடங்குவன யாவை ?

3. இசையின் சிறப்பைப்பற்றி எழுதுக.

4. இசைத்தமிழ் நடுவில் வைத்துக் கூறப்பட்டதன் காரணம் யாது ?

5. சங்ககாலத்திலிருந்த இசை நூல்கள் யாவை ?

6. இடைக்காலத்திலும், பிற்காலத்திலும் எழுந்த இசை நூல்கள் யாவை ?

7. பாணரைப்பற்றி நீவிர் அறிந்துகொண்ட செய்திகள் யாவை ?

8. அண்மையில் தமிழில் இசைப் பாடல்கள் இயற்றிய வர்களிற் சிறந்தவர்கள் யாவர் ?

9. இசைவாணர்கள் எத்தகைய குற்றங்கள் இல்லாமல் பாடவேண்டும்?

10. இசையெழுப்பும் கருவிகள் எத்துணை வகைப்படும்? அவை யாவை? சான்றுகள் தந்து விளக்குக.

11. யாழைப்பற்றி நீவிர் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்தெழுதுக.

12. இசைப் பாடல்கள் எம்மொழியில் அமைந்திருத்தல் வேண்டும்? ஏன்?

13. செட்டிநாட்டரசர் அண்ணுமலைச் செட்டியார் தமிழிசை வளர்ச்சிக்குச் செய்த செயல்கள் யாவை?

14. பாரதிதாசன் 'இசையமுது' என்னும் நூலில் கூறியுள்ள செய்திகள் யாவை?

15. இசைக்கலை என்ற தலைப்பில் கட்டுரையொன்றெழுதுக.

3. தமிழ் முனிவர் திரு. வி. க.

அருஞ்சொற் பொருள்

அமயம் - சமயம். சான்று - சாட்சி. மணிவிழா - அறுபதாம் ஆண்டு நிறைவு விழா.

வினக்கள்

1. உலகம் எத்தகையோரால் நிலைத்துள்ளது?

2. திரு. வி. க. அவர்களின் பெற்றோரைப் பற்றியும் பிறப்பைப்பற்றியும் நீவிர் அறிந்துகொண்ட செய்திகள் யாவை?

3. திரு. வி. க. அவர்களின் இளமைப் பருவ வாழ்க்கையைப்பற்றி எழுதுக.

4. சுந்தரனரின் தொடக்கப் பள்ளிக் கல்வியைப்பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?

5. சுந்தரனரின் உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையைப் பற்றி எழுதுக.

6. திரு. வி. க. தம் தமிழறிவை எவ்வாறு வளர்த்துக் கொண்டார்?

7. 'ஸ்பென்சர் கம்பெனி'யில் அவர் பணியாற்றிய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவை?

8. சுந்தரனுர் ஆசிரியராக இருந்து ஆற்றிய பணிகளைப் பற்றி எழுதுக.

9. செய்தித் தாள்களின் ஆசிரியராயிருந்து அவர் செய்துவந்த பணிகள் யாவை?

10. திரு. வி. க. அவர்களின் நூல்களைப் படிப்போர் அடையும் பயன்கள் யாவை?

11. தொழிலாளர் நலன் கருதி அவர் செய்த செயல் யாது?

12. திரு. வி. க. அவர்களின் மணிவிழா எவ்வகையில் கொண்டாடப்பட்டது?

13. இன்றைய இளைஞர் உலகம் செய்ய வேண்டியது யாது?

4. மனோன்மணீயம்

அருஞ்சொற் பொருள்

இறவாத - அழியாத. சாத்திரம் - நூல். சூழ்ச்சி - நுண்ணறிவு. வழுவாது - தவறாது.

வினுக்கள்

1. 'மனோன்மணீயம்' எந்நூலைத் தழுவி எழுதப்பட்டது?

2. சீவக வழுதியின் இயல்புகள் யாவை?

3. குடிலன் எத்தகையவன்? அவன் திருநெல்வேலிக்குப் பாண்டியர் தலைநகரை மாற்ற எண்ணியது ஏன்?

4. சுந்தரமுனிவர் யார்? அவர் சீவக வழுதியிடம் கூறிய செய்திகள் யாவை?

5. வாணியைப்பற்றி நீவிர் அறிந்துகொண்ட செய்திகள் யாவை?

6. சீவக வழுதி மனோன்மணியின் திருமணத்தைப் பற்றிக் கூறிய செய்தியைக் கேட்ட குடிலன் எண்ணியவையும் சொல்லியவையும் யாவை?

7. பாண்டியப் படையில் குழப்பம் ஏற்படக் காரணம் யாது?

8. நாராயணன் சீவக வழுதியை எவ்வாறு காப்பாற்றினான்? அதனால் அவன் அடைந்த நிலை யாது?

9. குடிலன் பெருமகிழ்வு கொண்டதற்குரிய காரணம் யாது?

10. மனோன்மணி பலதேவனை மணந்து கொள்ள இசைந்தது ஏன்?

11. சேரன் பாசறையை அணுகுவதற்குமுன் குடிலன் எண்ணியன யாவை?

12. புருடோத்தமன் தன் பாசறையை அடைந்த குடிலனை நோக்கிக் கூறிய செய்திகள் யாவை?

13. புருடோத்தமன் கூறியதைக் கேட்ட குடிலன் தனக்குள் கூறிக்கொண்டன யாவை?

14. குடிலனின் சூழ்ச்சியைச் சீவக வழுதி எப்பொழுது உணர்ந்தான்?

15. பேராசிரியரின் உயர்ந்த சிந்தனையையும், அறிவின் திறனையும் எவற்றால் அறிகிறோம்?

5. அறிவூட்டும் அஃறிணை உயிரினங்கள்

அருஞ்சொற் பொருள்

நுகர்ச்சி - அனுபவிக்கும் இன்பம். மாக்கள் - விலங்குத் தன்மையுடையார். பன்னூல் - பல நூல்கள். மாண்பு - பெருமை. பாலன் - குழந்தைப் பருவத்தினன். கோலனாய் - ஊன்றுகோல் ஊன்றி நடக்கும் பருவத்தினனாய். குந்தி - அமர்ந்து. கரவா - மறைத்துவைக்காது. ஆக்கம் - செல்வம். நீரார் - தன்மையுடையார். கேண்மை - நட்பு. இடம் - இடப்பக்கம். கடமா - யானை.

வினாக்கள்

1. மக்கட்பிறவி எக்காரணத்தால் சிறந்தது என்று கூறப்படுகின்றது?

2. பகுத்தறிவு பெறுதார் எவ்வாறு இழித்துக் கூறப் படுவர்?

3. தண்டமிழ்ப் புலவர்கள் கண்டறிந்தன யாவை?

4. புல்லின் செயலைக்கொண்டு பேராசிரியர் சுந்தரம் பிள்ளை விளக்கியுள்ள கருத்தினை எழுதுக.

5. நாங்கூழ்ப்புழுவின் செயல்களைப்பற்றி எழுதுக. அதன் வாழ்விலிருந்து மக்கள் கற்றுக்கொள்ள வேண்டியன யாவை?

6. எறும்புகளின் இயல்புகள் யாவை? அவற்றுல் நாம் உணர வேண்டியன யாவை?

7. காக்கையின் இயல்புகளை வள்ளுவரும், பாரதி தாசனும் எவ்வாறு விளக்கியுள்ளார்கள்? அதன் வாழ்வு நமக்கு எவ்வகையில் வழிகாட்டியாயுள்ளது?

8. நாயின் இயல்பால் நாம் உணர வேண்டிய கருத்து யாது?

9. மானவுணர்ச்சியில் சிறந்தது புலியென்பதை நாலடி யார் எவ்வாறு விளக்கியுள்ளது?

6. ஊர்தி கண்ட உழைப்பாளர்கள்

அருஞ்சொற் பொருள்

மலர்மாரி - பூ மழை. அமரர்க்கரசன் - இந்திரன். கோநகர் - மதுரை. கான் - வாசனை.

வினாக்கள்

1. தற்கால உலகில் விமானம் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது?

2. தமிழிலக்கியங்களில் வானவூர்திபற்றிக் கூறப் பட்டுள்ள செய்திகள் யாவை?

3. நாட்டிலுள்ள முப்படைகள் யாவை?

4. விமானத்தைக் கண்டுபிடித்தோர் யாவர்? அவர்களுடைய பெற்றோரைப்பற்றியும், இளமைப் பருவத்தைப் பற்றியும் நீவிர் அறிந்துகொண்ட செய்திகள் யாவை?

5. இரைட் சோதரர்கள் செய்தித்தாள் நடத்தி வந்ததைப்பற்றி எழுதுக.

6. வில்பரும், ஓர்விலும் எவ்வாறு பொருள் திரட்டினர்?

7. எச்செய்தி விமானக் கண்டுபிடிப்புக்கு வித்திட்டது?

8. எந்த நிகழ்ச்சி வில்பரும், ஓர்விலும் ஆராய்ச்சியில் ஊக்கங்கொள்ளக் காரணமாயிருந்தது?

9. இரைட் சோதரர்கள் தம் ஆராய்ச்சியில் முதற்கண் கண்டறிந்த உண்மைகள் யாவை?

10. சிறகுகள் அமைந்த பட்டத்தைக் கொண்டு வில்பரும், ஓர்விலும் செய்த ஆராய்ச்சியினைப்பற்றி எழுதுக.

11. 'கிளைடர்' என்னும் கருவியைக்கொண்டு இரைட் சோதரர்கள் செய்த ஆய்வுகளைப்பற்றி எழுதுக.

12. எச்செயலால் இரைட் சோதரர்கள் மனத்தளர்ச்சி அடையவில்லை?

13. உலக மக்கள் தம் அறிவாற்றலை உணரும் நிலையை இரைட் சோதரர்கள் எவ்வாறு உண்டாக்கினர்?

14. எவருடைய வாழ்க்கை நமக்கு ஒரு படிப்பினையாகும்?

7. குளிர் தூங்கும் குற்றாலம்

அருஞ்சொற் பொருள்

பொதியத் தென்றல் - பொதிய மலையிலிருந்து வீசும் தென்றல். கனல் - நெருப்பு. எழில் - அழகு. வளமனை - பங்களா. மூலம் - தோற்றம். வண்ணம் - நிறம்.

வினாக்கள்

1. இன்பச் செலவினை மேற்கொள்வது ஏன்?

2. எத்தகைய இடங்களுக்கு இன்பச் செலவு செல்லுதல் விரும்பத்தக்கது?

3. கோவையிலிருந்து புறப்பட்டுத் தென்காசியை அடைந்த தன்மை பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?

4. தென்காசியிலிருந்து குற்றுலப்பதிவரை அமைந்த சாலையின் இயல்பைப்பற்றி எழுதுக.

5. திரிகூடமலை - இப்பெயர் வரக் காரணம் யாது?

6. சித்திரா நதியின் தோற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

7. தேனருவி பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?

8. சண்பக அருவியைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

9. பொங்குமாகடல் பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?

10. குற்றுல நீர்வீழ்ச்சியைப் பற்றித் தொகுத்து வரைக.

11. ஐந்தருவி என்று பெயர் வரக் காரணம் யாது?

12. கூத்தப்பெருமானின் சிறப்பையும் குற்றுலப்பதியின் பெருமையையும் எவற்றுல் அறிகிறீர்கள்?

13. குற்றுலத்திற்குச் சென்றுவந்த இன்பச் செலவால் எக் கருத்தை உணரும் வாய்ப்பு ஏற்பட்டது?

8. ஆக்கல் அரிது

அருஞ்சொற் பொருள்

உறுதுணை - மிகுந்த துணை. **களப்புகழ்** - போர்க்களத்தில் பெற்ற புகழ். **களிப்பு** - மகிழ்ச்சி. **வீறு** - பெருமை. **ஆர்ப்பரிக்கின்றனர்** - பேரொலி செய்கின்றனர். **பரி** - குதிரை. **திரம்** - உறுதியான மனநிலை. **மன்றுடும்** - இரந்து கேட்கும். **கன்னல்** - கரும்பு. **கழனி** - வயல்.

வினுக்கள்

1. அசோகன் வெற்றிவிழாக் கொண்டாட்ட நாளில் அவையில் கூறிய செய்திகள் யாவை?

2. அசோகன் கலிங்க வெற்றிக்குப் பாடுபட்ட வீரர் களுக்கு அளித்த பரிசில்கள் யாவை?
3. அசோக மன்னனுக்கும் கலிங்க நாட்டுப் பெண் ணுக்குமிடையே நிகழ்ந்த உரையாடலை வரைக.
4. தந்தை இறந்ததை யறிந்த தேன்மொழி புலம்பிக் கூறியன யாவை?
5. தேன்மொழியிடம் மகத வீரன் என்ன கூறி மன் னிப்பு வேண்டினன்?
6. தேன்மொழி மகத வீரனைப் பழித்துக் கூறிய மொழி கள் யாவை?
7. தேன்மொழி அசோக மன்னனிடம் வேண்டிய பரிசில் யாது? அதனைக் கேட்ட அசோகன் மன நிலையைப் பற்றி எழுதுக.

9. தஞ்சைப் பெரிய கோயில்

அருஞ்சொற் பொருள்

வரலாறு - சரித்திரம். கருவறை - சுவாமி வைக்கப்பட் டுள்ள உள்ளறை. கவர்தல் - வசப்படுத்தல். இறைவன் - கடவுள்; தலைவன். இறைவி - பெண் தெய்வம்; தலைவி. வியப்பு - அதிசயம். வடித்து - திருத்தமாகச் செய்து. உறு வாய் - அடைவாய். புராணம் - பழங்கதை. இதிகாசம் - இராமாயணம், பாரதம். கலசம் - குடம், தூபி. போற்ரு தவர் - புகழாதவர். அணிகலன் - ஆபரணம். மறையவர் - பிராமணர். சேரமான் பெருமான் - சேரநாட்டு அரசர். ஒப்பனை - அலங்காரம். களித்து - மகிழ்ந்து. சுந்தரர் - சைவ சமய குரவருள் ஒருவர்.

வினுக்கள்

1. தஞ்சாவூரை எவ்வெம் மரபினர் ஆண்டனர்?
2. பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவியின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. பெரிய கோயிலின் கோபுரத்தைப்பற்றி நீவிர் அறி யும் செய்திகள் யாவை?

4. பெரிய கோயில் நந்தியைப் பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?
5. கோபுரத்தின் உச்சியிலுள்ள தளக்கல்லைப் பற்றியும், அதனைக் கோபுரத்திற்குக் கொண்டு சென்றதைப் பற்றியும் எழுதுக.
6. சிவகங்கைக் குளம் - சிறு குறிப்பு எழுதுக.
7. பெரிய கோயிலைக் கட்டிய அரசனின் சிறப்பையும், அதற்கு அவன் இட்ட பெயரையும் எழுதுக.
8. பெரிய கோயிலின் சுவர்களில் அமைந்த ஓவியங்களைப் பற்றி எழுதுக.
9. தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்களைப் பார்ப்பதால் நாம் அடையும் நன்மை யாது?
10. இராசராசன் கோயில் வழிபாடு சிறப்பாக நடைபெறச் செய்த ஏற்பாடுகள் யாவை?

10. வானொலி

அருஞ்சொற் பொருள்

அறிவியல் - விஞ்ஞானம். நானிலம் - உலகம். துகள் - சிறு தூசி. அளப்பில - எண்ணற்றன. நயம் - இன்பம். அவா - விருப்பம்.

வினாக்கள்

1. நோபல் பரிசு எவருடைய முயற்சியால் ஏற்படுத்தப் பட்டது? அதன் விளைவாக உண்டாகிய பயன்கள் யாவை?

2. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? அவருடைய வரலாற்றைப்பற்றி நீவிர் அறிந்துகொண்ட செய்திகள் யாவை?

3. வானொலிக்குரிய அடிப்படைத் தத்துவம் யாது?

4. வானொலி இயங்கும் முறைபற்றி நீவிர் அறிந்து கொண்டனவற்றை எழுதுக.

5. வானொலியால் நாம் அடைந்துவரும் பயன்கள் யாவை?

6. வானொலியால் ஏற்படும் தீமைகள் யாவை?

7. வானொலி இன்றைய உலகிற்கு மிகவும் இன்றி யமையாத ஒரு பொருளாய் விளங்குகிறது என்பதை விளக்கி எழுதுக.

8. அறிவுடையாரின் செய்கை யாது?

9. 'வானொலியின் பயன்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

11. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்

அருஞ்சொற் பொருள்

இன்னல் - துன்பம். வான் பொய்ப்பினும் - மழை பெய் யாது தவறினும். திளைத்தவர் - அனுபவித்து மகிழ்ந்தவர். நெடுங் கணக்கு - தமிழ் எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்து ஏழுமாகும். இலக்கம் - எண். நெல்லிலக்கம் - நெல் பற்றிய அளவை வாய்பாடு. குழிமாற்று - நில அளவை வாய்பாடு. கூர்த்த - நுனித்த, மிகுந்த. நிகண்டு - சொற்பொருள் விளக்கும் பாடல் நூல்.

வினாக்கள்

1. பெரியோர் பலர் வாழ்வில் எவ்வாறு முன்னேற்றம் அடைந்துள்ளனர்?

2. நாட்டாரவர்கள் பிறந்த ஊரையும் பெற்றோரையும் குறிப்பிடுக.

3. நாட்டாரவர்கள் தம் இளமைக் காலத்தில் கற்ற நூல்கள் யாவை?

4. தமிழ்த் தேர்வு எழுதுமாறு நாட்டாரைத் தூண் டியவர் யார்? அத்தேர்வுகளில் நாட்டார் எந்நிலையில் தேர்ச்சி பெற்றார்?

5. நாட்டார் அவர்களுடைய ஆசிரியப் பணியைப் பற்றி எழுதுக.

6. நாட்டாரவர்கள் தமிழன்னைக்குச் செய்த பணிகள் யாவை?

7. நாட்டாரின் நல்லியல்புகளைத் தொகுத் தெழுதுக.

12. பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு

அருஞ்சொற் பொருள்

செப்பும் - சொல்லப்படும். மணிக்கொடி–அழகிய கொடி. காலன் - இயமன். பொன்னகர்-தேவர்க்குரிய அமராவதிநகர். பொற்பு - அழகு. துஞ்சும்போது - உறங்கும்போது. பண்- இராகம். நிறை - அளவு.

வினாக்கள்

1. இந்திய நாட்டில் எவ்வெவ்வகையினர் வாழ்கின்றனர்?

2. இந்தியாவின் நான்கு எல்லைகளாக விளங்குவன யாவை?

3. பாரத நாட்டின் ஒருமைப்பாட்டில் பாரதியாருக்கிருந்த ஈடுபாட்டை எதனால் நன்குணரலாம்?

4. கொடியின் சிறப்பினைப்பற்றி எழுதுக.

5. தாயின் மணிக்கொடியை இந்திய மக்கள் காத்து நிற்கும் தன்மையைப் பாரதியார் எவ்வாறு விளக்கியுள்ளார்?

6. தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கப் பாரதியார் கூறியுள்ள வழிவகைகளைப்பற்றி எழுதுக.

7. பாரதியார் பாப்பாப் பாட்டின் வாயிலாக உணர்த்தும் செய்திகள் யாவை?

8. இன்று நம் நாட்டிற்கு வேண்டப்படுவது யாது?

9. 'வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காண்பதே அறிவுடைமை' என்ற உயர்ந்த கருத்தைப் பாரதியார் எவ்வாறு விளக்கியுள்ளார்?

10. நாம் இன்று செய்யவேண்டிய சீரிய செயல் யாதெனப் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்?

13. மன்னிப்பு

அருஞ்சொற் பொருள்

வான் - ஆகாயம். செற்றம் - பகைமை. இன்ஞ செய்தார் - துன்பம் செய்தவர்கள். இனியவை - நன்மைகள். சால்பு - பெருந்தன்மையாகிய குணம்.

விஞக்கள்

1. புண்ணியகோடியின் வாயிற்படியில் நின்றவனுடைய தோற்றம் எவ்வாறு இருந்தது? அவனுடைய குரலில் எவை காணப்பட்டன?

2. புண்ணியகோடி தம் வீட்டிற்கு வந்தவனை எவ்வாறு உபசரித்தார்?

3. உணவுப்பொருள்களைக் கண்டு பசியுடன் வந்தவன் அடைந்த நிலையினையும் செய்த செயலையும் எழுதுக.

4. புண்ணியகோடி தம் வீட்டிற்கு வந்தவனைப்பற்றி எந்த உணர்வோடு கேட்டார்?

5. புண்ணியகோடியின் நல்லியல்புகள் பற்றி நீவிர் அறிந்தன யாவை?

6. பொழுது விடிந்ததும் புண்ணியகோடியின் வீட்டில் நடந்தன யாவை?

7. புண்ணியகோடி தம் வேலையாளிடம் அறிவித்த செய்தி யாது?

8. வேலையாள் கொண்டுவந்து தந்த கடிதத்தில் குறிப் பிட்டிருந்த செய்திகள் யாவை?

9. கடிதத்தைப் படித்து முடித்த புண்ணியகோடி நினைத் தனவும், கூறியனவும் பற்றி எழுதுக.

10. 'மன்னிப்பு' என்ற இக்கதையின் வாயிலாக நீவிர் அறியும் மறைமொழியின் கருத்து யாது?

14. எவரெஸ்டு வீரர்

அருஞ்சொற் பொருள்

எழில் - அழகு. பாடிவீடு - முகாம். சிகரம் - மலையுச்சி. இன்னல் - துன்பம். மெய் - உடல்.

வினாக்கள்

1. வேறெங்கும் காண முடியாத வகையில் இந்தியாவில் அமைந்துள்ள காட்சிகள் எவை ?

2. தென்சிங் நார்க்கே எந்த ஊரில், எக் குடியில் தோன்றினார் ?

3. தென்சிங் நார்க்கே தம் இளமைக் காலத்தை எவ்வாறு கழித்துவந்தார் ?

4. அரசாங்கத்தார் தென்சிங்குக்கு எப்பதவியை அளித்தனர் ? ஏன் ?

5. நார்க்கே செய்துகாட்டிய ஒப்பற்ற சாதனை யாது ? அதனையறிந்த நேபாள அரசாங்கம் அவருக்கு அளித்தபட்டம் யாது ?

6. ஜான் ஹண்டு தம் குழுவில் தென்சிங்குக்கு இடம் தந்தது ஏன் ?

7. ஜான் ஹண்டு தம் குழுவினரோடு தென்கோலை அடைவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை எழுதுக.

8. ஜான் ஹண்டு அவர்கள் எவரெஸ்டுமீது ஏறுவது பற்றிச் செய்த முடிவு யாது ?

9. உலகிலேயே உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்ட கூடாரம் யாது ? தென்சிங்கும், ஹில்லரியும் எவரெஸ்டு சிகரத்தை அடைந்த நிகழ்ச்சியை எழுதுக.

10. தென்சிங்கும், ஹில்லரியும் எவரெஸ்டின் சிகரத்தை அடைந்த நாளையும் நேரத்தையும் குறிப்பிடுக.

15. கலிங்கத்துப் பரணி

அருஞ்சொற் பொருள்

திருமந்திர ஓலை நாயகன் - அரசாங்கக் கணக்கன். திறை- கப்பம். நகைப்பு - சிரிப்பு. தானைத்தலைவர் - சேனாதிபதி. சூறையாடினர் - கொள்ளையிட்டனர். அரவர் - தமிழர். பரி - குதிரை. கரி - யானை. சிலை - வில். குருதி - இரத்தம்.

வரிசைகள் - சிறந்த பரிசுகள். வண்டைநகர் - சோழநாட்டில் உள்ளதோர் ஊர். தற்பொழுது வண்டலூர் என வழங்குகிற தென்பர்.

வினாக்கள்

1. குலோத்துங்கன் சோழநாட்டின் அரசனாகியது எவ்வாறு?

2. குலோத்துங்கனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

3. கலிங்கத்துப் பரணியைப் பாடிய ஆசிரியர் யார்? அவரைப் பற்றி நீவிர் அறிந்த செய்திகள் யாவை?

4. கலிங்கப் போர் ஏற்படுதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சியை விளக்கமாக எழுதுக.

5. சோழப்படை வட கலிங்கம் சென்று சேர்ந்த நிகழ்ச்சி எவ்வாறு கூறப்பட்டது?

6. சோழப் பெரும் படையைக் கண்ட கலிங்க மக்கள் அடைந்த நிலையினையும், செய்த செயலையும் பற்றி எழுதுக.

7. குடிமக்களின் கூக்குரலைக் கேட்ட கலிங்க மன்னன் வெகுண்டு கூறிய மொழிகள் யாவை?

8. எங்கராயன் என்ற நல்லமைச்சன் கலிங்க மன்னனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

9. சோழப் படையும், கலிங்கப் படையும் பொருத காட்சி எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

10. கலிங்க மன்னன் எவ்வாறு சிறைப்படுத்தப் பட்டான்?

11. கலிங்கப் போரில் வெற்றியடைந்த கருணாகரத் தொண்டைமான் யாது செய்தான்?

12. அபயன் தன் தானைத் தலைவர்களுக்கும், பிறர்க்கும் செய்த சிறப்புக்கள் யாவை?

16. பிளாரன்சு நைட்டிங்கேல்

அருஞ்சொற் பொருள்

தாதியர் - நோயாளிகளுக்குப் பணிபுரியும் பெண்கள். தொல்லை - துன்பம். பெற்றி - இயல்பு, தன்மை.

வினாக்கள்

1. பிளாரன்சு நைட்டிங்கேல் என்ற பெயர் அவருக்கு எதனால் வைக்கப்பட்டது ?

2. நைட்டிங்கேல் அம்மையாருக்கு, பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு உண்டாகியது ?

3. நைட்டிங்கேல் அம்மையாருக்கு மருத்துவ முறைகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் எவ்வாறு உண்டாகியது ?

4. நைட்டிங்கேல் அம்மையாரின் அருள் உள்ளத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்த நிகழ்ச்சியினை எழுதுக.

5. நைட்டிங்கேல் அம்மையார் மருத்துவக் கலையில் எவ்வாறு தேர்ச்சி பெற்றார் ?

6. கிரிமியாப் போரில் வீரர்கள் அடைந்த துன்ப நிலையைக் குறிப்பிடுக.

7. ஸ்குட்டாரி மருத்துவ மனையில் நைட்டிங்கேல் அம்மையார் ஆற்றிய அரும் பணிகளைப்பற்றி எழுதுக.

8. ஆங்கில அரசியும், துருக்கிய அரசரும் நைட்டிங்கேல் அம்மையாரை எவ்வாறு பாராட்டினர் ?

★

இலக்கணம்

I. எழுத்து

(அ) முதல் எழுத்து

'அ' முதல் 'ஔ' இறுதியாக உள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், 'க்' முதல் 'ன்' இறுதியாக உள்ள மெய் யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்து ஆகும். இம்முப்பது எழுத்துக்களும் பிற எழுத்துக்கள் தோன்றவும், இயங்கவும் முதன்மையாக இருத்தலின் முதல் எழுத்து எனப் பெயர் பெற்றன.

உயிரெழுத்து :

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ — இவை பன்னிரண்டும் உயிர் எழுத்துக்களாகும்.

அ, இ, உ, எ, ஒ — இவ்வைந்தும் குற்றெழுத்துக்களாகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவ்வேழும் நெட்டெழுத்துக்களாகும்.

ஆதலின், உயிர் எழுத்துக்கள் குறில், நெடில் என இரண்டு வகைப்படும்.

உயிர் எழுத்துக்களுள் அ, இ, உ — இவை சுட்டெழுத்துக்களாகும். ஆ, எ, ஏ, ஓ — இவை வினுவெழுத்துக்களாகவும் வரும்.

மெய்யெழுத்து :

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இவை பதினெட்டும் மெய்யெழுத்துக்களாகும்.

க், ச், ட், த், ப், ற்—இவை ஆறும் வல்லெழுத்துக்களாகும்.

ங், ஞ், ண், ந், ம், ன் — இவை ஆறும் மெல்லெழுத்துக்களாகும்.

ய், ர், ல், வ், ழ், ள்—இவை ஆறும் இடையெழுத்துக்களாகும்.

ஆதலின், மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

(ஆ) சார்பு எழுத்து

உயிர்மெய் எழுத்து :

'அ' முதல் 'ஔ' முடிய உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், 'க்' முதல் 'ன்' முடிய உள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களோடும் தனித்தனி சேர்ந்து ஒலிக்க ($12 \times 18 = 216$) இருநூற்றுப் பதினாறு எழுத்துக்கள் உண் டாகும். உயிரும் மெய்யும் கூடுவதால் பிறக்கும் எழுத்துக் களாதலின் உயிர்மெய் எழுத்து எனப் பெயர் பெற்றன. இவை உயிர், மெய் என்ற முதலெழுத்துக்களைச் சார்ந்து தோன்றின. ஆதலின், சார்பெழுத்தாகும்.

ஆய்தம் :

மூன்று புள்ளி வடிவில் (ஃ) அமைந்த எழுத்து ஆய்த வெழுத்து ஆகும். இது நுண்ணிய ஓசையுடைய எழுத்தா தலின் ஆய்த எழுத்து என்று பெயர் பெற்றது. இவ்வெழுத் துத் தனித்து வருதல் இன்றிக் குற்றெழுத்திற்குப் பின்பும் வல்லின உயிர் மெய்யெழுத்திற்கு முன்பும் அவற்றைச் சார்ந்து வருதலின் சார்பெழுத்தாகும்.

உயிரளபெடை :

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக்குரிய மாத்திரையினும் மிக்கு ஒலிப்பது உயிரள பெடையாகும். [அளபு - மாத்திரை ; எடை - எடுத்தல், மிகுதல்.]
எடுத்துக்காட்டு : உழாஅர், இன்புறாஉம், ஓ ஒதல்.

ஒற்றளபெடை :

ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்—ஆகிய மெய்யெழுத் துக்கள் பத்தும், ஆய்த எழுத்து ஒன்றும் ஆகிய பதினோர் எழுத்துக்களும் தமக்குரிய மாத்திரையினும் மிக்கு ஒலிப்பது ஒற்றளபெடையாகும்.

எடுத்துக்காட்டு : இலங்கு வெண்பிறை, கண்ண கருவிளை, எஃஃகு இலங்கிய.

உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை - இவையே யன்றிப் பின்வருவனவும் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருவனவாகும்.

குற்றியலிகரம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' இ ' என்னும் எழுத்து.

குற்றியலுகரம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' உ ' என்னும் எழுத்து.

ஐகாரக் குறுக்கம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' ஐ ' என்னும் எழுத்து.

ஔகாரக் குறுக்கம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' ஔ ' என்னும் எழுத்து.

மகரக் குறுக்கம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' ம் ' என்னும் எழுத்து.

ஆய்தக் குறுக்கம் : தனக்குரிய மாத்திரையின் குறைந்து ஒலிக்கும் ' ஃ ' என்னும் எழுத்து.

(இ) மாத்திரை

எழுத்துக்கள் உச்சரிக்கும் கால அளவை மாத்திரை என் பர். நாம் இயல்பாகக் கண் இமைக்கும் நேரத்தை அல்லது கைந்நொடிக்கும் நேரத்தை ஒரு மாத்திரை என்று கூறுவர்.

1. உயிர்க்குறில், உயிர் மெய்க்குறில்—ஒரு மாத்திரை.
2. உயிர் நெடில், உயிர் மெய் நெடில் — இரண்டு மாத்திரை.
3. மெய், ஆய்தம்—அரை மாத்திரை.
4. உயிரளபெடை—மூன்று மாத்திரை.
5. ஒற்றளபெடை—ஒரு மாத்திரை.
6. குற்றியலிகரம், குற்றியலுகரம்—அரை மாத்திரை.

7. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்—ஒரு மாத்திரை.

8 மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்—கால் மாத்திரை

தயிரோ ஓஒ தயிர். (பண்டமாற்று)

தம்பீ இஇ வா. (விளி)

ஐயாவோ ஓஒ இறந்தனையோ! (புலம்பல்)

பண்டமாற்று, விளி, புலம்பல், இசை முதலியவற்றில் எழுத்துக்கள் தமக்குரிய மாத்திரை அளவைக் கடந்து ஒலிக்கும். இசையில் நீண்டொலித்தலைப் பாடும்போது கேட்டு அறிக.

(ஈ) முற்றியலுகரம்

தனித்து வரும் உகரமும், மெய்யெழுத்தின்மீது ஏறிய உகரமும், தனிக் குறிலின்பின் உள்ள வல்லெழுத்தின்மீது ஏறிய உகரமும், வல்லின மெய்கள்மீது ஏறிச் சொல்லின் முதலிலும், இடையிலும் வரும் உகரமும், மெல்லின இடையின மெய்களின்மேல் ஏறிச் சொல்லின் முதல், இடை, கடை மூவிடத்தும் வரும் உகரமும் முற்றியலுகரமாகும்.

எடுத்துக்காட்டு:

உ—தனித்து வந்த உகரம்.

கு, ஞு, ரு—மெய்மீது ஏறி வந்த உகரம்.

பசு—தனிக்குறிற் பின் வல்லினமீது ஏறி வந்த உகரம்.

புலால், தகுதி—வல்லின மெய்கள்மீது ஏறிச் சொல்லின் முதல், இடை வந்த உகரம்.

முரளி, யுகம்—மெல்லின, இடையின மெய்கள்மீது ஏறிச் சொல்லின் முதலில் வந்த உகரம்.

அநுமன், அருள்—மெல்லின இடையின மெய்கள்மீது ஏறிச் சொல்லின் இடையில் வந்த உகரம்.

பொம்மு, பணிவு—மெல்லின இடையின மெய்கள்மீது ஏறிச் சொல்லின் கடைசியில் வந்த உகரம்.

(உ) குற்றியலுகரம்

தனிக் குற்றெழுத்தில்லாத மற்றைய எழுத்துக்களோடு தொடர்ந்து வரும் சொல்லின் ஈற்றிலே உள்ள வல்லின மெய் (க், ச், ட், த், ப், ற்) மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவினும் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அவ்வுகரம் குற்றியலுகரம் எனப்படும். (குறுமை+இயல்+உகரம் = குற்றியலுகரம் — குறுகிய ஓசையையுடைய உகரம்.)

எடுத்துக்காட்டு :

வீடு, காது—நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

எஃகு, கஃசு—ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

மரபு, வயிறு—உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

அச்சு, நாற்று—வன்றொடர்க் குற்றியலுகரம்.

துண்டு, பந்து—மென்றொடர்க் குற்றியலுகரம்.

மார்பு, தெள்கு—இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

சொல்லின் ஈற்று அயல் எழுத்தைக்கொண்டு குற்றியலுகரம் நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகையாக வழங்கப்படும்.

(ஊ) குற்றியலிகரம்

நிலைமொழி ஈற்றிலே உள்ள குற்றியலுகரம் வருமொழி முதலில் யகரம் வரும்போது இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்த இகரமும், கேண்மியா, சென்மியா என்ற அசைச் சொற்களில் மகரத்தின்மீது ஏறிய இகரமும் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அவ்விகரம் குற்றியலிகரமாகும். (குறுமை+இயல்+இகரம் = குற்றியலிகரம்—குறுகிய ஓசையுடைய இகரம்.)

எடுத்துக்காட்டு :

வீடு+யாது = வீடியாது ?	எஃகு+யாது = எஃகியாது ?
மரபு+யாது = மரபியாது ?	நாற்று+யாது = நாற்றியாது ?
பந்து+யாது = பந்தியாது ?	மார்பு+யாது = மார்பியாது ?

பயிற்சி

1. முதலெழுத்து என்ற பிரிவில் அடங்கும் எழுத்துக்கள் யாவை? அவை முதலெழுத்து என்று பெயர் பெற்றது ஏன்?
2. சார்பெழுத்து என்பது யாது? அஃது எத்துணை வகைப்படும்? அவை யாவை?
3. மாத்திரை என்ருல் என்ன? ஒரு மாத்திரையின் அளவு யாது?
4. எழுத்துக்கள் அளவிறந்து ஒலிக்கும் இடங்கள் யாவை?
5. முற்றியலுகரம் என்ருல் என்ன? எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.
6. குற்றியலுகரம் என்பது யாது? அஃது எத்துணை வகைப்படும்? எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.
7. குற்றியலிகரத்தின் இலக்கணத்தை எழுதி, எடுத்துக்காட்டும் தருக.

II. சொல்

(1) பதம்

ஓர் எழுத்துத் தனித்து நின்று பொருள் தருவதும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தருவதும் பதம் ஆகும். இது சொல் என்றும் கூறப்படும்.

எடுத்துக்காட்டு:

ஆ—(ஆ - பசு) ஓர் எழுத்துத் தனித்து வந்த பதம்.
ஆடு—ஈரெழுத்துச் சேர்ந்து வந்த பதம்.
குதிரை—மூன்றெழுத்துச் சேர்ந்து வந்த பதம்.
கரும்பு—நான்கெழுத்துச் சேர்ந்து வந்த பதம்.
மற்றவற்றை வந்துழிக் காண்க.

(2) ஓரெழுத்தொரு மொழி

கை ஒடிந்தது.

இது, ‘ கை என்ற உறுப்பு ஒடிந்தது’ என்று பொருள் தருகிறது. இதில், ‘ கை ’ என்பது ஓர் எழுத்து மட்டும் நின்று ஓர் உறுப்பு என்ற பொருளைத் தந்தமையால் இஃது ஓர் எழுத்து ஒரு மொழியாகும்.

ஓர் எழுத்துத் தனித்து நின்று பொருள் தருவது ஓர் எழுத்து ஒரு மொழியாகும்.

எடுத்துக்காட்டு :

ஊ—தசை. ஏ—அம்பு. ஐ—அழகு. ஓ—மதகுநீர் தாங்கும் பலகை. ஔ—கடித்தல். கா—சோலை. கோ—அரசன். சே—எருது. சோ—அரண். தே—தெய்வம். நா—நாக்கு. பா—பாடல். மீ—மேல்.

மற்றவற்றை வந்துழிக் காண்க.

(3) பகாப் பதம், பகுபதம்

(அ) பகாப் பதம் :

பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியாத பதம் (சொல்) பகாப்பதம் ஆகும். (பகாப்பதம்—பிரிக்க முடியாத பதம்.)

எடுத்துக்காட்டு :

கல், பல் (பெயர்ப் பகாப் பதம்.)
வா, நில் (வினைப் பகாப் பதம்.)
பிற, தில் (இடைப் பகாப் பதம்.)
கூர், சால் (உரிப் பகாப் பதம்.)

(ஆ) பகுபதம் :

வலைஞன் (பெயர்ப் பகுபதம்.)
செய்தான் (வினைப் பகுபதம்.)
போன்றார் (இடைப் பகுபதம்.)
சான்றார் (உரிப் பகுபதம்.)

இவற்றை ‘ வலை+ஞ்+அன் ; செய்+த்+ஆன் ; போல்+ற்+ஆர் ; சால்+ற்+ஆர்’ என்று பிரிக்கலாம். ஆதலின், இவை பகுபதங்கள் ஆகும்.

பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்கக்கூடிய பதம் பகுபதம் ஆகும்.

(4) பகுபத உறுப்புக்கள்

(அ) பகுதி :

செய்தான், செய்கிருள், செய்வார்.

இவற்றை, 'செய்+த்+ஆன் ; செய்+கிறு+ஆள் ; செய்+வ்+ஆர்' எனப் பிரிக்கலாம். இவற்றுள் முதலில் உள்ள 'செய்' என்ற பகாப்பதம் செய்தல் தொழிலை உணர்த்துவதால் பகுதி ஆகும்.

பிரிக்கக்கூடிய சொல்லில் முதலில் நிற்கும் பகாப்பதம் பகுதியாகும். இது முதலில் நிற்பதால் முதனிலை என்றும் கூறப்படும்.

(ஆ) விகுதி :

வென்ருன், வெல்கின்ருள், வெல்வார்.

இவற்றை, 'வெல்+ற்+ஆன் ; வெல்+கின்று+ஆள் ; வெல்+வ்+ஆர்' எனப் பிரிக்கலாம். இவற்றுள் வெல்லுதல் தொழிலைச் செய்தது இறுதியில் உள்ள 'ஆன்' என்னும் உறுப்பாய் ஓர் ஆண் என்றும், 'ஆள்' என்னும் உறுப்பால் ஒரு பெண் என்றும், 'ஆர்' என்னும் உறுப்பால் பலர் என்றும் அறிகின்ருேம். ஆதலின், இவை மூன்றும் விகுதிகளாகும்.

பிரிக்கக்கூடிய சொல்லில் இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதியாகும். இது திணை, பால், எண், இடங்களை உணர்த்தும். இறுதியிலே உள்ளமையின் இறுதிநிலை என்றும் கூறப்படும்.

(இ) இடைநிலை :

அறிஞன் (அறி+ஞ்+அன்.)

இப்பெயர்ச் சொல்லில் 'அறி' பகுதி எனவும், 'அன்' விகுதி எனவும் அறிவீர்கள். 'ஞ்' இடையில் வந்துள்ளமையால் இடைநிலை.

உண்டான். (உண்+ட்+ஆன்)
தின்கிருள். (தின்+கிறு+ஆள்)
போவார். (போ+வ்+ஆர்)

இவற்றுள், ' உண், தின், போ ' என்பவை பகுதி எனவும், ' ஆன், ஆள், ஆர் ' என்பவை விகுதி எனவும் அறிவீர்கள். இடையில், ' ட், கிறு, வ் ' என்பவை வந்துள்ளமையால் இடைநிலையாகும்.

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது இடைநிலையாகும்.

(5) காரண இடுகுறிப் பெயர்

நாற்காலி மேஜை வாங்கினன்.

நாற்காலி என்பது, காரணங் கருதியபொழுது நான்கு கால்களையுடைய பொருள்கள் அனைத்தையும் உணர்த்துமாயினும், இங்கு இடுகுறியளவாய், 'நாற்காலி' என்னும் ஒரு பொருளையே குறித்தது.

காரணம் கருதியபொழுது அக்காரணத்தையுடைய பல பொருள்களைக் குறிக்குமாயினும், பல பொருள்களையும் குறிக்கக் காரணமிருந்தும் அக்காரணத்தையுடைய ஒரு பொருளுக்கே வழங்கிவரும் பெயர் காரண இடுகுறிப் பெயர் எனப்படும்.

(6) பண்புப் பெயர்

பசுமை, நன்மை, புளிப்பு.

இவற்றுள், ' பசுமை ' என்பது நிறத்தையும், ' நன்மை ' என்பது குணத்தையும், 'புளிப்பு' என்பது சுவையினையும் உணர்த்துகின்றன. இவை பண்பை (குணத்தை) உணர்த்துவதால் பண்புப் பெயர்களாகும்.

செம்மை, தொல்லை, மாட்சி, மழவு, நன்கு, நன்றி, நன்று, அன்பு, நலம், ஒட்பம், நன்னர், தீது போன்றவையும் பண்புப் பெயர்களாகும்.

(7) தொழிற் பெயர்

செய்தல், ஓடல், வாழ்க்கை.

இவை முறையே, ' செய்தல் தொழிலையும், ஓடுதல் தொழிலையும், வாழ்தல் தொழிலையும் ' உணர்த்துகின்றமையால் தொழிற் பெயர்களாகும்.

ஓட்டம், பொறை, பார்வை, போக்கு, பிறப்பு, செலவு, மறதி, காட்சி, கல்வி, கேள்வி, சாக்காடு, கோட்பாடு, இறக்குமதி போன்றவையும் தொழிற் பெயர்களாகும்.

(8) வேற்றுமை உருபுகள்

வேலன் அடித்தான்.
வேலனை அடித்தான்.

முதல் தொடரில் வேலன் அடித்தவனுயுள்ளான். இரண்டாம் தொடரில் வேலன் என்னும் பெயர்ச் சொல்லோடு 'ஐ' என்னும் உருபு சேர்ந்தமையால் பெயர்ச் சொல்லின் பொருள் வேறுபட, அடிபட்டவனுய் மாறிவிட்டான்.

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுப்பது வேற்றுமை ஆகும். அவ்வாறு வேறுபடுக்கப் பெயர்ச் சொற்களின் ஈற்றிலே சேர்ந்துவரும் இடைச்சொல் வேற்றுமை உருபு என்று கூறப்படும்.

வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை—யாதொரு மாறுபாடும் அடையாத பெயர்ச்சொல்; உருபு கிடையாது.

இரண்டாம் வேற்றுமை—ஐ உருபு.

மூன்றும் வேற்றுமை—ஆல், ஆன், ஒடு, ஓடு உருபுகள்.

நான்காம் வேற்றுமை—கு உருபு.

ஐந்தாம் வேற்றுமை—இன், இல் உருபுகள்.

ஆறும் வேற்றுமை—அது, ஆது, அ உருபுகள்.

ஏழாம் வேற்றுமை—இல், இடம், கண், உள் முதலியன உருபுகள்.

எட்டாம் வேற்றுமை—பெயர்ச்சொல் விளி ஏற்கும் போது ஏற்படும் ஈறு திரிதல், ஈறு குன்றல், ஈறு மிகுதல், இயல்பு, ஈற்றயல் திரிதல் ஆகிய விகாரங்களே உருபுகளாகும். இவை விளித்தல் பொருளில் வரும்.

(9) வினைச்சொல்

(அ) தெரிநிலைப் பெயரெச்சம் :

மகிழ்ந்த பையன், மகிழ்கின்ற பையன், மகிழும் பையன்.

இவற்றுள், 'மகிழ்ந்த, மகிழ்கின்ற, மகிழும்' என்பன பொருள் முற்றுப்பெறுத (எச்சம்) சொற்களாக உள்ளன. இவை, 'பையன்' என்ற பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்தமையால் பெயரெச்சமாகும். 'மகிழ்ந்த, மகிழ்கின்ற, மகிழும்' என்ற பெயரெச்சங்கள் முறையே இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தெளிவாக (தெரியுமாறு) உணர்த்துவதால் தெரிநிலைப் பெயரெச்சங்களாகும்.

(ஆ) குறிப்புப் பெயரெச்சம் :

கரிய குதிரை, நல்ல மொழி.

இவற்றுள், 'கரிய, நல்ல' என்ற எச்சச் சொற்கள் முறையே 'குதிரை, மொழி' என்னும் பெயர்களைக்கொண்டு முடிந்தமையால் பெயரெச்சமாகும். 'கரிய, பெரிய' என்ற பெயரெச்சங்கள் காலத்தைக் குறிப்பாக உணர்த்துவதால் குறிப்புப் பெயரெச்சங்களாகும்.

(இ) தெரிநிலை வினை எச்சம் :

ஒடித்து வைத்தான் ; ஒடிப்பின் அழியும்.

இவற்றுள் 'ஒடித்து, ஒடிப்பின்' என்ற எச்சச் சொற்கள், 'வைத்தான், அழியும்' என்னும் வினைச்சொற்களைக்கொண்டு முடிந்தமையால் வினையெச்சமாகும். 'ஒடித்து' என்ற வினையெச்சம் இறந்த காலத்தையும், 'ஒடிப்பின்' என்ற வினையெச்சம் எதிர் காலத்தையும் தெளிவாக (தெரியுமாறு) உணர்த்துவதால் தெரிநிலை வினை எச்சங்களாகும்.

(ஈ) குறிப்பு வினை எச்சம் :

மெல்லப் பேசினான் ; இன்றிக் காண்.

இவற்றுள், 'மெல்ல, இன்றி' என்ற எச்சச் சொற்கள் 'பேசினான், காண்' என்ற வினைச்சொற்களைக்கொண்டு முடிந்

தமையால் வினையெச்சங்களாகும். 'மெல்ல, இன்றி' என்னும் வினையெச்சங்கள் காலத்தைக் குறிப்பாக உணர்த்துவதால் குறிப்பு வினை யெச்சங்களாகும்.

(உ) தெரிநிலை வினைமுற்று :

சீதை படித்தாள், புலவர் பாடுகிறார், கந்தன் எழுதுவான்.

இவற்றுள், 'படித்தாள், பாடுகிறார், எழுதுவான்' என்ற சொற்கள் தொழில் முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றன. ஆதலின், இவை வினைமுற்று ஆகும். இவ்வினைமுற்றுக்கள் முறையே இறந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும் வெளிப்படையாக (தெரியுமாறு) உணர்த்துவதால் தெரிநிலை வினைமுற்றுக்களாகும்.

(ஊ) குறிப்பு வினைமுற்று :

வளவன் நேற்று	பொன்னன்.
கூத்தரசன் இன்று	இனியன்.
அழகரசன் நாளை	வலியன்.

இவற்றுள், 'பொன்னன், இனியன், வலியன்' என்பன வினைமுற்றுக்களாகும். 'பொன்' என்பது பொருட்பெயராகும். 'இனிமை, வலிமை' என்பன பண்புப் பெயர்களாகும். இவை முறையே 'பொன்னையுடையவனாக இருந்தான்', இனிமையுடையவனாக இருக்கின்றான், வலிமையுடையவனாக இருப்பான்' என்று பொருள் தருகின்றன. 'படித்தாள், பாடுகிறார், எழுதுவான்' என்ற வினைமுற்றுக்களைப் போல இவை காலத்தை வெளிப்படையாக உணர்த்தவில்லை. 'அன்' என்ற விகுதியால் ஆண்பால் வினைமுற்று என்பதை மட்டுமே உணர முடிகிறது. 'நேற்று' என்ற சொல்லால் இறந்த காலத்திலும், 'இன்று' என்னும் சொல்லால் நிகழ்காலத்திலும், 'நாளை' என்ற சொல்லால் எதிர்காலத்திலும் குறிப்பாகப் பொருள் கொள்கிறோம். ஆதலின், இவை குறிப்பு வினைமுற்றுக்களாகும்.

உண்டு, இல்லை, நன்று, தீது, பெரிது, சிறிது, அரிது போன்ற சொற்கள் வினைமுற்றாக வருமேயானால் அவையும் குறிப்பு வினைமுற்றுக்களே யாகும்.

10 செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினை

(அ) செயப்படுபொருள் குன்றிய வினை :

இராமன் வீட்டைக் கட்டினான்.

இத்தொடரில், 'இராமன்' எழுவாய் எனவும், 'கட்டினான்' பயனிலை எனவும், 'வீட்டை' செயப்படுபொருள் எனவும் அறிவீர்கள்.

கந்தன் வீட்டுக்கு நடந்தான்.

இத்தொடரில், 'கந்தன்' எழுவாய். 'நடந்தான்' வினைமுற்று. (பயனிலை.) வினைமுற்றை நோக்கி, 'யாரை நடந்தான் ?, எதை நடந்தான் ?' என்று கேள்வி கேட்டால் செயப்படுபொருள் கிடைப்பது இல்லை. ஆதலின், இது செயப்படுபொருள் குன்றிய (இல்லாத) வினையாகும்.

ஓடினாள், எழுகின்றார், வருகின்றது, போகின்றன போன்றவையும் செயப்படுபொருள் குன்றிய வினைகளே யாகும்.

(ஆ) செயப்படுபொருள் குன்றா வினை

முருகன் பாடத்தைப் படித்தான்.

இத்தொடரில், 'முருகன்' எழுவாய். 'படித்தான்' வினைமுற்று. (பயனிலை) வினைமுற்றை நோக்கி 'எதைப் படித்தான் ?' என்று கேள்வி கேட்டால் 'பாடத்தை' என்ற செயப்படுபொருள் கிடைக்கிறது. ஆதலின், இது செயப்படுபொருள் குன்றா (உள்ள) வினையாகும்.

எழுதுகின்றாள், தின்கிறார், மேய்ந்தது, கடித்தன போன்றவையும் செயப்படுபொருள் குன்றா வினைகளாகும்.

(11) காலங்காட்டும் இடைநிலைகள்

(அ) இறந்தகால இடைநிலைகள் :

செய்தான்.	(செய்+த்+ஆன்.)
உண்டாள்.	(உண்+ட்+ஆள்.)
சென்றார்.	(செல்+ற்+ஆர்.)
ஓடின.	(ஓடு+இன்+அ.)

இவை நான்கும் இறந்த காலத்தைக் காட்டுகின்றன. இந்நான்கு சொற்களிலும், 'த், ட், ற், இன்' என்ற இடைநிலைகள் இறந்தகாலம் என்பதை உணர்த்தின. ஆதலின், இவை நான்கும் இறந்தகால இடைநிலைகளாகும்.

(ஆ) நிகழ்கால இடைநிலைகள் :

ஓடுகிறான்	(ஓடு+கிறு+ஆன்.)
படிக்கின்றாள்.	(படி+க்+கின்று+ஆள்.)
அணியாநின்றார்.	(அணி+ஆநின்று+ஆர்.)

இவை மூன்றும் நிகழ்காலத்தைக் காட்டுகின்றன. இம்மூன்று சொற்களிலும், 'கிறு, கின்று, ஆநின்று' என்ற இடைநிலைகள் நிகழ்காலத்தை உணர்த்தின. ஆதலின், இவை மூன்றும் நிகழ்கால இடைநிலைகளாகும்.

(இ) எதிர்கால இடைநிலைகள் :

படிப்பாள்.	(படி+ப்+ப்+ஆள்.)
ஓடுவார்.	(ஓடு+வ்+ஆர்.)

இவை இரண்டும் எதிர்காலத்தைக் காட்டுகின்றன. இவ்விரு சொற்களிலும், 'ப், வ்' என்ற இடைநிலைகள் எதிர்காலத்தை உணர்த்தின. ஆதலின், இவை இரண்டும் எதிர்கால இடைநிலைகளாகும்.

(12) புணர்ச்சி

(அ) இயல்பு, விகாரப் புணர்ச்சி :

செல்வி பாடினாள்.
பலாப் பழம்.

இவற்றுள், 'செல்வி, பலா' என்பன முதலில் நிலைத்து உள்ள மொழி (சொல்)கள் ஆகும். ஆதலின், இவை நிலைமொழியாகும். 'பாடினாள், பழம்' என்பன பின்பு வந்து சேர்ந்த மொழிகள் ஆகும். ஆதலின், இவை வருமொழி ஆகும்.

முதல் தொடரில், 'செல்வி' என்ற நிலைமொழியோடு, 'பாடினள்' என்ற வருமொழி புணரும் (சேரும்) பொழுது யாதொரு வேறுபாடும் ஏற்படவில்லை. ஆதலின், இஃது இயல்புப் புணர்ச்சியாகும்.

நிலைமொழியும் வருமொழியும் யாதொரு வேறுபாடும் ஏற்படாமல் இயல்பாகப் புணருவது இயல்புப் புணர்ச்சியாகும்.

இரண்டாம் தொடரில், 'பலா' என்ற நிலைமொழியோடு, 'பழம்' என்ற வருமொழி புணரும் (சேரும்)போது இடையில், 'ப்' என்ற எழுத்துப் புதிதாகத் தோன்றியுள்ளது. ஆதலின், இது விகாரப் புணர்ச்சியாகும்.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது நிலைமொழி ஈற்றெழுத்தோ, வருமொழி முதல் எழுத்தோ விகாரப்படுவது விகாரப் புணர்ச்சியாகும்.

நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடச் சேருவது புணர்ச்சியாகும். (புணர்ச்சி—சேர்க்கை). புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

(ஆ) தோன்றல் விகாரம் :

மாம் பழம்.

இவ்வெடுத்துக்காட்டில், 'மா' என்ற நிலைமொழியும், 'பழம்' என்ற வருமொழியும் புணரும்போது, இடையில் 'ம்' என்ற எழுத்துப் புதிதாகத் தோன்றியது. ஆதலின், இது தோன்றல் விகாரம்.

(இ) திரிதல் விகாரம் :

பற்பொடி.

இவ்வெடுத்துக்காட்டில், 'பல்' என்ற நிலைமொழியும், 'பொடி' என்ற வருமொழியும் புணரும்போது, நிலைமொழி யீற்று எழுத்து 'ற்' எனத் திரிந்தது. ஆதலின், இது திரிதல் விகாரம்.

(ஈ) கெடுதல் விகாரம் :

மர வேர். (மரம்+வேர்)

இவ்வெடுத்துக்காட்டில் 'மரம்' என்ற நிலைமொழியும், "வேர்' என்ற வருமொழியும் புணரும்போது, நிலைமொழி யீற்று எழுத்து 'ம்' கெட்டது. ஆதலின், இது கெடுதல் விகாரம்.

விகாரப் புணர்ச்சி தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூன்று வகைப்படும்.

பயிற்சி

1. பதம் என்று சொல்லப்படுவது யாது? அஃது எத் துணை வகைப்படும்? அவை யாவை?
2. ஓரெழுத்தொரு மொழி—எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
3. பகுதி என்று கூறப்படுவது யாது? அதற்கு வழங் கும் வேறு பெயர் யாது?
4. இறுதிநிலை என்று எதனைக் கூறுவர்?
5. இடைநிலை என்பது யாது? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
6. முதனிலை எதனை உணர்த்தும்?
7. முற்றுச் சொல்லில் வரும் இறுதிநிலை எவற்றை உணர்த்தும்?
8. கூறுவான், செய்தாள், அறிகிறார் — இவற்றைப் பிரித்துப் பகுதி, விகுதி, இடைநிலை கூறுக.
9. காரண இடுகுறிப் பெயரின் இலக்கணத்தை எழுதுக.
10. பண்புப் பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட் டுக்கள் மூன்று தருக.
11. தொழிற் பெயரை ஓரெடுத்துக்காட்டால் விளக்குக.
12. வேற்றுமை உருபுகள் யாவை? எட்டு வேற்றுமை களுக்கும் உரிய உருபுகளை எடுத்தெழுதுக.

13. வினைச்சொல் எத்துணை வகைப்படும்? வகைக்கோர் எடுத்துக்காட்டுத் தருக.

14. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றா வினை—இவற்றை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.

15. அடித்தார், வந்தாள், கட்டினான், பறந்தது— இவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினைகளை எடுத்தெழுதுக.

16. காலங்காட்டும் இடைநிலைகள் யாவை? ஒவ்வொரு காலத்திற்கும் உரிய இடைநிலைகளைத் தனித்தனியே எழுதுக.

17. புணர்ச்சி என்பது யாது?

18. புணர்ச்சி எத்துணை வகைப்படும்? அவை யாவை?

19. விகாரப் புணர்ச்சி எத்துணை வகைப்படும்? அவை யாவை?

20. தோன்றல் விகாரத்தை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குக.

21. திரிதல் விகாரத்தை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குக.

22. கெடுதல் விகாரத்தை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குக.

23. சேர்த்து எழுதுக:
(i) பொன்+குழை. (ii) மா+காய். (iii) அறம்+ விலை.

24. பிரித்து எழுதுக:
(i) இரும்புச் சட்டம். (ii) குளக்கரை. (iii) முட மோசியார்.

—